
# ஒருபிடி மண்

(சிறுகதைத் தொகுப்பு)



மல்லாவிக் கஜன்

# ஒருபிடி மண்

(சிறுகதைத் தொகுப்பு)

மல்லாவிக் கஜன்

வெளியீடு
கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம் - துணுக்காய்

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | "ஒருபிடி மண்" |
| நூலின் வகை | : | சிறுகதை |
| நூலாசிரியர் | : | மல்லாவிக் கஜன் |
| வெளியீடு | : | கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம் - துணுக்காய் |
| பக்கங்கள் | : | 80 |
| பிரதிகள் | : | 500 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| அட்டைப்படம் | : | மல்லாவிக் கஜன் |
| முதற்பதிப்பு | : | மார்ச், 2016 |
| தொடர்புகளுக்கு | : | இல:585, கொக்காவில் வீதி, துணுக்காய்.<br>தொலைபேசி : 077 2400707, 076 8044959<br>முகநூல் : மல்லாவிக் கஜன்<br>ஈமெயில் : amir.kajan@gmail.com |
| அச்சகம் | : | விஜய் அச்சுப் பதிப்பகம், 172, மில் வீதி, வவுனியா.<br>024 2225799 / 077 9009491 |
| ISBN | : | 978 - 955 - 42716 - 0 - 9 |
| விலை | : | ரூ.220/- |

சமர்ப்பணம்...!

**எழுதத்துடிக்கும்
இளையோருக்கு..!**

# ஆசியுரை



எங்களது கல்லூரியின் பழைய மாணவன் செல்வன். அமிர்தலிங்கம் கஜன் அவர்கள் கல்வி பயின்ற காலத்தில் ஓவியம், கவிதை, கட்டுரை, சிறுகதை மற்றும் குறுநாடக ஆக்கம் போன்றவற்றில் பாடசாலை மட்டம் தொடக்கம் தேசியமட்டம் வரை சிறப்பாக எழுதி பல சான்றிதழ்களையும் விருதுகளையும் பெற்றுள்ளார்.

இத் திறமைகள் யாவற்றையும் ஒருங்கிணைத்து "ஒருபிடி மண்" எனும் சிறுகதைத் தொகுப்பை சிறப்பாக எழுதுகின்ற ஆற்றலும் திறமைகளும் அவரிடம் உருவாகியதையிட்டு நான் பெருமகிழ்வடைகின்றேன்.

மேலும், இந்நூல் அவர் எழுதுகின்ற முதலாவது நூல் என்பதால் எதிர்காலத்தில் பல நூல்களை எழுதுவதற்கு இது உந்துசக்தியாக அமைய எல்லாம் வல்ல இறைவனின் ஆசிகளை வேண்டிக்கொண்டு தொடர்ந்து இவரது ஆற்றல்களும் திறன்களும் மிளிர எனது நல்லாசிகள்.

**திரு. துரைராசா ஜேசுதாசனந்தர்**
அதிபர்,
மு/மல்லாவி மத்திய கல்லூரி
(தேசிய பாடசாலை)



## "ஒருபிடி மண்" சார்ந்து...

தமிழிலக்கிய வரலாற்றின் ஆரம்பவடிவம் கவிதையாயினும், பிற்காலத்தில் தனக்கென ஓர் நிலையான இடத்தை சிறுகதைகள் பெற்றுவிட்டன. பெரும்பாலும் ஐரோப்பியர் காலத்திலேயே சிறு கதைகளின் தாக்கம் அதிகமாக உணரப்பட்டது. உணர்வு நிலைப்பட்ட மனிதனின் ஓசைகள் ஒருவித சந்தத்தினால் பாடல்கள் ஆகினவோ அதேபோல், செவிவளிக்கதைகளும் எழுத்துருப் பெற்றன. ஆரம்பத்தில் புராண இதிகாச பெருங்கதைகளுக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம், பிற்காலத்தில் கால நேரத்தை கருத்தில் கொண்டும், மையக் கருவை சட்டென சுட்டிச் சொல்வதிலும் சிறுகதைகளாக வெற்றி கண்டன.

உள்ளதை உள்ளபடி கதை சொல்ல முற்பட்டோர், சற்று கற்பனையையும் ஜனரஞ்சகத்தையும் அழகியலையும் புகுத்தினர். சம காலத்தில் "யாவும் கற்பனை" எனும் நிலையினையும் கண்டுவிட்டது. ஆனால், "யாவும் பொய்" எனும் நிலை வரப்போவதில்லை. காரணம், ஒரு கதையில் எங்கோ ஓரிடத்தில் யாரோ ஒரு மனிதன் வாழத்தான் செய்கிறான். இதன் படி, என்னிடம் படித்தவன் கஜன். சிறு வயதில் அரச பணியில் இருப்பவன். அழகிய எழுத்தும் உயிரோட்டமான ஓவியமும் வரையக் கூடியவன். அமைதியான உருவும் பணிவான பண்பும் உடையவன்.

தனி மனிதனே சமூகமாகிறான் என்பதற்கிணங்க, தன்சார் சமூகத்து வலிகளைத் தன்னிலைப்படுத்திய படைப்பாளனே அச்சமூகப் பிரதிநிதியுமாகிறான். ஆதலால், "மல்லாவிக் கஜன்" எனும் நாமம் கூட பொருந்தித்தான் போகிறது. போருக்குப் பிந்திய காலத்து இலக்கியத் தடத்தில் அளவுக்கதிகமான கவிதை நூல்களுக்கு மத்தியில் "ஒருபிடி மண்" எனும் சிறுகதை நூல் சகலவிதமான எதிர்பார்ப்புக்களையும் கடந்து, காலத்தால் பேசப்பட வேண்டும் என அன்பகலாப் பிரியங்களுடன் வாழ்த்துகிறேன்

**வே.முல்லைத்தீபன்**
20.02.2016



# வாழ்த்துரை

வன்னிமைந்தன் கஜன் எழுதிய "ஒருபிடி மண்" சிறுகதைத் தொகுதிக்கு, வாழ்த்துரை எழுதுவதிலே நான் மட்டற்ற மகிழ்ச்சிய டைகின்றேன். கஜன் அவர்கள் கல்லூரியில் கல்வி பயின்ற காலத்திலேயே, சிறுகதை எழுதுவதில் ஆர்வமுடையவர். 2012ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்மொழித்தின சிறுகதை ஆக்கப் போட்டியில் மாகாணமட்டத்தில் முதலிடம் பெற்று, தேசியமட்டப் போட்டியில் பங்கேற்றிருந்தார்.

இன்றைய நவீன யுகத்தில் தொழில்நுட்பத்தில் மூழ்கிக்கிடக்கும் எம்மவர்களில், எழுத்தாற்றல் மூலம் தன்னை இலக்கிய உலகின் நீரோட்டத்தில் இணைத்துக்கொள்ளும் கஜன் அவர்கள், உலகம்போற்றும் ஒரு படைப்பாளியாகத் திகழவேண்டும்; திகழ்வார் என்ற நம்பிக்கை எனக்குண்டு. இவர் ஒரு கவிஞராக, எழுத்தாளராக, விமர்சகராக, எல்லாவற்றுக்கும் அப்பால் வளர்ந்துவரும் ஒரு இளைஞனாக, இவரது கன்னி வெளியீடாக, இச் சிறுகதைத் தொகுதி வெளிவருவது எனக்கு மகிழ்ச்சியளிக்கின்றது. இச் சிறுகதைத் தொகுப்பில் பத்து சிறுகதைகள் இடம்பெற்றிருக்கின்றன. இவை எமது ஈழத்துத் தமிழ் மக்களின் உணர்வுகளின் உந்துதல்களின் வெளிப்பாடாகும். பிரதேச மண்வாசனை யுடன், சிறுகதை உணர்வுடன் எழுதியுள்ளமை மிகவும் சிறப்பிற்குரியது. "அற்புதமான சிறுகதையொன்றை வாசிக்கும் போது, அதன் முடிவு மனதிற்குள் 'ஞம ஞம' என்று ஏதோ பண்ணிக்கொண்டிருக்க வேண்டும்" என்ற சிறுகதை இலக்கணத்திற்கு அமைவாக, இவரது கதைகளின் முடிவுகள், வாசகரது உள்ளத்தை நெருடவைத்துள்ளது.

இன்றைய 21 ஆம் நூற்றாண்டில், இளம் எழுத்தாளர்களில் ஒருவராக மல்லாவிக் கஜன் வலம்வருகின்றார். எதிர்காலத்தில் இதுபோன்ற பல படைப்புக்களை தமிழன்னையின் மடியில் தவழவிடுவார் என நம்புகின்றேன். இவரை எனது மாணவனாகப் பெற்றமை, எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி தருகின்றது. இவ் வெளியீடு சிறப்படைய எனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் கூறிநிற்கின்றேன்.

**திரு க.சந்திரலிங்கம்**
B.A (Hons) Tamil – Spl, P.G.D.E, M.A(Tamil) – Ind, M.Ed(Hons)
ஆசிரியர், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி



# அணிந்துரை

இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் புதிய சந்ததியில் இளைஞர்கள் கவிதை எழுதுவதையே பெரிதும் விரும்புகின்றனர். அதிலிருந்து மாறுபட்டு ஒருசில இளைஞர்களே சிறுகதையின்பால் ஈர்ப்புக் கொண்டு எழுதி வருகின்றனர். அந்த ஒரு சில இளைஞர்களில் ஒருவராகத் திகழ்வதற்காய் தனது முயற்சியை மேற்கொண்டு, தனது கன்னிப் படைப்பை வெளிக்கொண்டு வந்துள்ளார் மல்லாவிக் கஜன். அவரது சிறுகதைத் தொகுதியான "ஒருபிடி மண்" இல் இடம்பெற்றுள்ள "கூடு" என்ற சிறுகதை மூலமே அவர் எனக்கு அறிமுகமானார். ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் 2014இல் நடத்திய சிறுகதைப் போட்டியில் 2014இல் கஜன் கலந்து கொண்டார். அவர் எழுதிய "கூடு" சிறுகதை ஆறுதல் பரிசு பெற்றது. ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் வெளியிட்ட "செவ்வரத்தை" சிறுகதைத் தொகுப்பில் இவரது கதை வெளிவந்துள்ளது. வவுனியாவில் "செவ்வரத்தை" நூல் வெளியீட்டு விழாவில் ஆறுதல் பரிசு பெறுவதற்காக வந்திருந்தபோதுதான் இவரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற துடிப்புள்ள இளைஞர். அவர் எனது முகநூல் நண்பராக உள்ளதால் அவருடைய இன்றைய செயற்பாடுகளை தெரிந்து கொள்ள முடிகிறது.

தமிழுலகில் சிறுகதை வரலாறு என்பது வ.வே.சு.ஐயர் என்ற எழுத்தாளருடனேயே ஆரம்பமாகிறது. வ.வே. சு. ஐயரின் "குளத்தங்கரை அரசமரம்" சொன்ன கதையை, முதன்முதலில் அறிமுகப்படுத்தியது "விவேக போதினி" ஆகும். இதுவே தமிழில் முதற் சிறுகதை எனக் குறிப்பிடப்படுகின்றது. இவரே "தமிழ்ச் சிறுகதையின் தந்தை" எனவும் அழைக்கப்பட்டார். இலங்கையில் முதற் சிறுகதையை ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை என்பவர் எழுதியிருக்கின்றார். இலங்கை சிறுகதை எழுத்தாளர்களாக செங்கை ஆழியான், செ.கணேசலிங்கன், வரதர், சிற்பி, மு.தளையசிங்கம், நந்தி, டொமினிக்ஜீவா, எஸ்.பொ., செம்பியன் செல்வன், நீர்வை பொன்னையன், அ.யேசுராசா, கோகிலா மகேந்திரன், தாமரைச்செல்வி, அ.பூங்கோதை போன்றவர்கள் பேசும்படியாக முத்திரை பதித்துள்ளார்கள்.

தனது ஊரின் பெயரை தனது பெயரோடு சேர்த்து "மல்லாவிக் கஜன்" என்று அறிமுகமாகியிருக்கும் கஜன், நாளை சிறுகதை உலகில்

பேசப்படும்போது, அவரது ஊரின் பெயரும் பேசப்படும் என்பது பெருமையான விடயமாகும். இவர் சிறுகதை எழுத்தாளர் மட்டுமல்ல, நல்ல கவிஞராகவும் திகழ்கிறார். முகநூலில் இவரது கவிதைகளை பார்க்கவும் இரசிக்கவும் முடிகிறது. இவரது கவிதை, சிறுகதைகள் உதயன், வலம்புரி, தமிழ்மிரர், மித்திரன், தமிழ்த்தந்தி முதலான பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது. இவர் தனது பாடசாலைக் காலத்தில் பிரிவுபசாரக் கவிதை ஆசிரியர் தின விழாவில் கவிதை என்று எழுதி அரங் கேற்றியுள்ளார்.

இவர், சிறுகதை எழுத்தாளர், கவிஞர் மட்டுமல்ல சிறந்த ஓவியராகவும் திகழ்கின்றார். உலக உணவுத்திட்டத்தினால் (WFP) 2008ஆம் ஆண்டு சர்வதேசரீதியாக நடாத்தப்பட்ட சித்திரப்போட்டியில், 31 நாடுகளிலிருந்து பங்குபற்றிய 155 போட்டியாளர்களில், தெரிவு செய்யப்பட்ட 13 வெற்றியாளர்களுள், இலங்கையைச் சேர்ந்த இருவருள், ஒருவராக தெரிவுசெய்யப்பட்டு பரிசு பெற்றார். 2013ம் ஆண்டு உலக சுற்றாடல் தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையில் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட சுவரொட்டி சித்திரப்போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட 105 வெற்றியாளர்களுள் ஒருவராக தெரிவுசெய்யப்பட்டு பரிசு பெற்றதோடு ஈழத்திலிருந்து வெளிவருகின்ற பல தேசிய பத்திரிகைகளில், வளர்ந்துவரும் இளம் படைப்பாளிகளது நூல்கள் பலவற்றையும் தனது பார்வையில் விமர்சித்துள்ளார்.

இவரது முதலாவது படைப்பான "ஒருபிடி மண்" சிறுகதைத் தொகுதியில் "புல்லாங்குழல் ஊமையானது" என்ற சிறுகதை முதல் "தொலைவு" என்ற சிறுகதை வரை பத்துச் சிறுகதைகள் இடம்பெற றுள்ளன. இவரின் சிறுகதைகளை வாசிக்கும் போது ஆச்சரியம் மேலிடுகிறது. வித்தியாசமான பத்து கருக்களை பிரசவித்திருக்கிறார். போர்ச்சூழல், போர் முடிவுக்குப் பின்னான காலப்பகுதி, வெளிநாட்டு வாழ்க்கை, சீதனக் கொடுமை, இலங்கையில் தொழில்தேர்வு என பலபகுதிகளை கஜன் தொட்டுச் சென்றிருக்கிறார்.

சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள முதலாவது சிறுகதை "புல்லாங்குழல் ஊமையானது" என்ற தலைப்பில் பதிவாகியுள்ளது. புகலிட நாடுகளுக்கு திருமணம் பேசி அனுப்பப்படும் பெண்களில், ஒருத்தியின் கண்ணீர்க்கதை. அக்கதையில் "ஊஞ்சலில் இருந்தவாறே முற்றத்தில் காயப்போட்டுக் கிடக்கும் புளுக்கொடியலையும் ஊறுகாயையும் கோழிகள் தட்டிவிடாமல் பார்த்தபடியே, ஏழாம் வாய்ப்பாடு பாடமாக்கிய நினைவுக ளும்...." என்று தொடர்கிறது. எடுத்த எடுப்பிலேயே மனதைத் தொடுகின்ற கிராமியமணம் கதைக்கு அழகு சேர்த்துள்ளது. "படிச்சது காணும்;

கையெழுத்துப் போடுவாள்தானே. பிறகென்ன..." என பெண்ணின் தந்தையார் சொல்லுமிடத்தில், இன்றும் கிராமங்களில் பெண்களின் கல்விநிலையை தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்.

அடுத்து, "கூடு" என்னும் சிறுகதை. இச்சிறுகதை வெளிவந்த "செவ்வரத்தை" சிறுகதைத் தொகுப்பில் "நுழைவாயிலில் நானும்.." என்ற பகுதியில், டென்மார்க் எழுத்தாளர் வி. ஜீவகுமாரன் வழங்கியிருக்கின்ற பதிவை இங்கே தருகிறேன். அதுவே இக்கதைக்கு சான்று. "கதை யோட்டம், கதை அமைப்பு இரண்டிலும் நல்ல ஓட்டத்தையும், நல்ல இறுக்கத்தையும் கொண்டு, குறியீட்டு வடிவத்தில் இலங்கையில் நடந்த, தொடரும் அனர்த்தத்தை அழகாகச் சொல்லும் கதை. கதையின் இறுதியில் "யாவும் கற்பனை" என போட்டிருக்க வேண்டாம் எனத் தோன்றியது. அந்தளவு உண்மைத்தன்மையுடன் எழுதப்பட்டிருந்தது. கதையின் ஆரம்ப இடி மழை பற்றிய வர்ணனை அபாரம்."

இலங்கையில் வேலைகளுக்கான தேர்வு எப்படி நடைபெறுகி ன்றது. அதிலுள்ள குறைபாடுகளை அழகாக எடுத்துக்கூறுகின்ற கதை "தேர்வு". தேர்வில் தெரிவாகாமல் போனபோது, கதையின் நாயகன் எடுத்த முடிவு கதைக்கு நல்ல திருப்பத்தைக் கொடுத்திருக்கிறது. "கிணத்தில் தண்ணி அள்ளி என்ன சௌந்தர்யமாய் குளிச்சம். இப்ப பத்துலீற்றர் தண்ணியிலை குடும்பமே தொட்டுத் துடைக்க வேண்டியதாய்ப் போய்ச்சு" என்று "ஆறுமுகத்தார்" என்ற கதைமாந்தரை சொல்ல வைத்து, அகதிமுகாம் வாழ்க்கையின் சோகங்களை "கனவுடனே" என்ற கதையில் இறுக்கமாகப் பதிவு செய்திருக்கிறார். கதையின் முடிவு கண்கலங்க வைக்கிறது.

போராட்ட காலத்தில் தமது பிள்ளைகளின் உயிரை பாதுகாக்க பெற்றோர் செய்த தியாகங்கள், புகலிடம் சென்ற இளைஞர்கள் தமது குடும்பத்தை நினைத்து விடுகின்ற கண்ணீர் அங்குள்ள பனிக்கட்டிக ளையே கரைத்துவிடும் என்னுமளவிற்கு "பெற்ற மனம் பித்து" என்ற கதையை எழுதிச் சென்றிருக்கிறார். குடிகாரக் கணவன்; தலையில் அப்பக்கூடை சுமந்து விற்றுப்பிழைக்கும் பெண்; சோற்றைக் கண்டு பலநாட்களாகிவிட்ட பிள்ளைகளுக்கு சோறு சமைத்துக் கொடுக்கப் போராடும் தாய் என்ற பின்னலில் வந்து விழுந்திருக்கிறது "கானற் கனவுகள்" என்ற சிறுகதை. வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற மக்களின் துயரங்களை எடுத்துரைக்கும் இக்கதை நிச்சயம் பேசப்படும். "இறுதிக் கடன்" என்றொரு கதை. காதலில் விழுவது, பெண்வீட்டாரின் வற்புறுத்தலில் களவாக கல்யாணம் செய்வது, தனது வீட்டை மறந்து

போவது, மனைவி கணவன் வீட்டாருக்கு உதவி செய்ய மறுப்பது, தனது வீட்டாருக்கு தந்திரமாக கணவனைக் கொண்டு உதவி செய்விப்பது என்று மத்தியதர வர்க்கத்தின் நடைமுறை வாழ்க்கையை எடுத்துக் கூறியிருக்கிறார். கதைநாயகன் அரவிந்தன், ஒரு செய்தி கேட்டு படும் அவஸ்த்தைகளை அழகாக கோலம் போட்டுள்ளார் கஜன்.

மீளக்குடியேறச் செல்லும் மக்களின் அவலநிலையை படம்பிடித்துக் காட்டும் கதை "ஒரு பிடி மண்" அட்டைப்படக் கை. அருமையான தேர்வு. கதையை நகர்த்திச் செல்லும் பாத்திரமான ஆறுமுகத்தாரின் முடிவை கஜன் சொல்லியிருக்கும் விதம் கதைக்கு வலுச் சேர்த்திருக்கிறது. "தொலையாத கனவுகள்" என்ற கதைமூலம் ஆசிரியத் தொழிலின் உயர்வை பதிவு செய்திருக்கிறார். சங்கற்பம் பூணுகின்ற பெண்களின் இலட்சியம், நிச்சயம் வெல்லும் என்பதை இக்கதை உணர்த்தி நிற்கிறது. ஆரபி, அம்மம்மா என்ற இரண்டு பாத்திரங்களை முக்கியத்துவப்படுத்தியிருந்தாலும், அம்மம்மா எல்லோர் மனதிலும் நிறைந்து நிற்பார்.

சீதனக்கொடுமையால் அல்லலுறும் முதிர்கன்னிகளின் கண்ணீர்க்கதைகளில் ஒன்று "தொலைவு". சமுதாயச் சாக்கடையை தூர்வார வேண்டிய தேவை உள்ளது என்பதனைக் கோடிட்டுக் காட்டுகின்ற கதை இது.

சித்துவிளையாட்டு ஏதுமின்றி, தனது அத்துப்படியான ஆற்றலால் இத்துப்போனவற்றை வித்துப் பிழைக்கின்ற சமூகத்தின் ஒரு பகுதியினூடே நடைபயின்று, தனக்கு ஒத்துப்போகாத விடயங்களை கருக்களமாக்கி, சத்துள்ள பத்துச் சிறுகதைகளையும் முத்தாகக் கோர்த்து, தனது சொத்தாக எமக்கு பெத்துப் போட்டிருக்கிறார் மல்லாவிக் கஜன்.

இவர் மேலும் பல சிறுகதைகளை எழுத வேண்டும். ஒரு எழுத்தாளன் சமூக உழவன் என்பதை நிரூபித்து, இலக்கிய உலகில் பேசப்பட வேண்டுமென்று எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்கலைச்சுடர், தமிழ்மணி,
**கே.கே.அருந்தவராஜா** (மேழிக்குமரன்)
சின்னப்புதுக்குளம், வவுனியா
05.02.2016

# வெளியீட்டுரை



பழம் பெரும் கலாசாரங்களையும் அரிய பண்பாடுகளையும் கொண்ட வன்னி வள நாட்டின் மல்லாவி நகரினிலே கொக்காவில் வீதியில் உதித்த இளம் எழுத்தாளர் கஜன் அவர்கள் எடுத்துக்கொண்ட கன்னி முயற்சியின் பயனாக அவரின் படைப்பான "ஒரு பிடி மண்" என்ற இந்தச் சிறுகதைத் தொகுப்பை துணுக்காய் பிரதேச கலாசார பேரவையினால் வெளியீடு செய்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்.

கலாசார பண்பாடுகள் வீழ்ச்சிப் பாதையில் சென்றுகொண்டிருக்கின்ற தற்கால சமுதாயத்தில் நேரத்தை பயன்மிக்க வழியில் செலவிடுவோரின் தொகையும் அருகி வருகின்றது. இவ்வேளையில் கஜன் போன்ற இளம் எழுத்தாளர்களின் முயற்சி மிகவும் பாராட்டத்தக்கதொன்றாகும்.

இவர் போன்று இன்னும் பலர் எமது பிரதேசத்திலிருந்து கலைத்துறை களுக்கு முன் வர வேண்டும்.

வன்னியின் எழுத்துத்துறை ஒரு நீண்ட இடைவெளியை கொண்டி ருந்தது. இருப்பினும் இன்று இளம் எழுத்தாளர்கள் உதயம் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. சிறுகதை, நாவல், கவிதை முதலாக பல இலக்கியங்கள் இன்று வாசகர்களால் மறக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. பெருகி வரும் சமூக வலைத்தள பாவனைகளும் வலையமைப்பு பயன்பாடும் மக்களிடையே ஒரு பாரிய மாற்றத்தை உருவாக்கியிருப்பது எழுத்துத்துறையை கேள்விக்குறியாக்கியுள்ளது. இவர்களைப் போன்று எழுத்தாளர்களின் உருவாக்கம் மற்றும் அவர்களை ஊக்குவிப்பது எமது கடமையாகும். அந்த வகையில் "ஒருபிடி மண்" என்ற இச்சிறுகதை தொகுப்பை எமது சார்பில் வெளியிடுவதில் பெருமிதமடைகின்றோம்.

**சி.குணபாலன்**
பிரதேச செயலாளர்,
துணுக்காய்.



# பதிப்பகத்தாரின்

## பார்வையில்...

மனிதகுலம் தோன்றும் போதே எழுத்துக்களும் தோன்றியது போல. எழுத்துக்களினூடாக தன்னுடையதும், தன் சமூகம் சார்ந்தது மான கருத்துப்பரிமாற்றங்களை வெளிப்படுத்தி வருகின்றான் மனிதன். அவ்வாறு தோற்றம் பெற்ற எழுத்து வடிவங்களைக் கொண்டு கருத்துரைப்பது, சுதந்திரம் பேணுவது, நாகரிகம் வெளிப்படுத்துவது போன்ற பண்புகளை தனதாக்கிக் கொண்டுள்ளான்.

அப்பண்புகளினூடாக இலக்கியம் படைக்க ஆரம்பித்த அவன். அவைகள் பாட்டுக்கள், கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நாடகங்கள் போன்றவைகளாக அமைந்தன. அந்தவகையில் கவிதை என்பது ஒரு நொடியில் எழுதிவிடக்கூடியதொன்று. ஆனால் சிறுகதைகள் அப்படி அல்ல. அவை திட்டமிட்டு, தூரநோக்கத்தில் சிந்தித்து, கரு, உத்தி, நடை போன்றவைகளை பின்பற்றியே எழுதவேண்டியுள்ளது. அதுவும் இந்த வேகமாக வளர்ந்துவரும் யுகத்தில் அவ்வளவு பொறுமையாக இருந்து சிறுகதைகள் எழுத யாரும் முற்படுவதில்லை என்பதே உண்மை.

எனவே, மல்லாவிக் கஜன் அவர்களது சிறுகதைகள் ஒவ்வொன்றும் தன்னை ஒரு சிறந்த படைப்பாளியாக, எழுத்தாளனாக அடையாளம் காட்டுவதாக அமைகின்றது. அவருடைய சிறுகதைகள் யாவும் வாசகர்களுக்கு திடமளிக்கக்கூடிய திருப்புமுனைகளாக அமையும் என எண்ணுகின்றேன். நாகரிகம் வளர்ந்து, யுகங்கள் மாறினாலும் இதுபோன்ற சிறுகதைகள், கட்டுரைகள் படைக்கப் படுவதிலேயே தமிழ் இலக்கியம் நின்று நிலைப்பது சாத்தியமாகின்றது.

எது எவ்வாறிருப்பினும் நூலாசிரியரின் இப்படைப்பை எமது பதிப்பகத்தில் பதிப்புச் செய்வதில் மன மகிழும் அதேவேளை, இவரை வாழ்த்துவதில் நிறைவு கொள்கின்றேன்.

**எஸ்.விஜய்**
விஜய் அச்சுப் பதிப்பகம்

# என்னுரை



நிற்க....

தமிழ் அன்னைக்கு தலை சாய்த்து,

இருள்நிறைந்த பிரபஞ்சத்தில், நகக்கீற்றாய் பளிச்சிடும் மின்னல் கொடியாய் துவளும் என் கன்னி நூலில், காலத்திற்குக் காலம் எழுதி கிடப்பில் போடப்பட்ட என் எழுத்துக்களை "ஒருபிடி மண்" என சிறுகதைத் தொகுப்பாய் தொகுத்திருக்கின்றேன்.

போர்ச்சூழலும், அடுத்தடுத்து இடம்பெற்ற இடப்பெயர்வுகளும், குடும்பத்திற்கு தனித்த பிள்ளையாய் இருந்த எனக்கு, என்சார் சமூகத்துடன் நின்று, பல வலிகளையும் நோவுகளையும் சந்திக்கச் செய்தன. உறவுகளின் உயிர்த்துடிப்பையும் நாடிபிடித்து அறிந்திட முடிந்தது. அவ்வெண்ணங்களின் பிரசவிப்பே இச்சிறுகதை நூலாகும்.

என் பாடசாலைக் காலத்துப் பருவத்திலிருந்து கலை இலக்கியத்துறையில் அதீத ஈடுபாடு கொள்வதற்கு ஏதோ ஒரு உந்துதல் எனக்கு கிடைத்தமையை, பெரும் பேறாக எண்ணுகிறேன். முடியாமை எனும் சூழலிலும் முடியும் என நம்புபவன் நான்.

வளர்ந்துவரும் இத் தொழில்நுட்ப வேகத்திற்கேற்ப, இத்தட்டச்சு ஆக்கப்பிரதிகள் வாசகர்களுக்கும் படைப்பாளிகளுக்குமிடையே கவனிக்கப்படாதிருக்குமோ எனும் ஆதங்கமும் எனக்குண்டு. ஆதலால் இதுவரை என்னுடன் பயணித்த பாடசாலை சமூகத்தினர், தேசிய பத்திரிகைகள், இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் வாசகர்களின் ஆதரவுக்கரம் பற்றியபடி, அடுத்த தொகுப்பிற்காய் காத்திருக்கிறேன்.

"ஓயாத முயற்சியே வெற்றியின் படிக்கல்"

அன்புடன்,
**நான்**

# பொருளடக்கம்


| தொ.இல. | விபரம் | பக்க.இல. |
|---|---|---|
| 01 | புல்லாங்குழல் ஊமையானது | 01 |
| 02 | கூடு | 06 |
| 03 | தேர்வு | 13 |
| 04 | கனவுடனே | 20 |
| 05 | பெற்ற மனம் பித்து | 25 |
| 06 | கானற் கனவுகள் | 30 |
| 07 | இறுதிக் கடன் | 35 |
| 08 | ஒருபிடி மண் | 41 |
| 09 | தொலையாத கனவுகள் | 50 |
| 10 | தொலைவு | 57 |

01



# புல்லாங்குழல் ஊமையானது

வெளியே மழை.....!

மழைக்கும் துயர நினைவுகளுக் கும் என்னதான் சம்மந்தம்? வெயில் மனதின் வெம்மையை உணர்த் துகிறதா? தெரியவில்லை. ஆனால், மழையின் சூழலோடு மனதின் துயரம் இணங்கிப் போகிறதே......

இங்கு வந்த பிறகு என்னிடம் என்னதான் இருக்கிறது....? அவளின் உள்ளக் கிடக்கைகள் எரிமலையாய் குமுறின. கதிரவ னின் வரவுக்காய் தாமரை காத்தி ருந்தாற் போல், அவளும் யாரோ வொருவனின் வரவுக்காய் காத்துக் கிடந்தாள்.

கரு மேகத்தை படர விட்டு கதிரவன் தொலைவு சென்று விட்டான். மழையோ "சோ" எனப் பொழிந்து கொண்டிருந்தது. வாடைக்காற்றோ தனது குளிர்க்கரங்களால் அவளைக் கட்டுப்போட்டது. அந்த சிறைச் சாலைச்சுவர்கள் அவளை நெருக்கி யபடியிருந்தன.

* * *

சிவலிங்கத்திற்கும், பார்வதிக்கும் ஒரேயொரு மகள் தான் காந்தி. சரியான சுட்டி; வாய்க்காரி;

● மல்லாவிக் கஜன்

அவளுக்கு ஆசையாய் ஒரு அண்ணன். அவன்தான் திலீப்.

"அண்ணா! வடிவாய் ஊஞ்சல் ஆட்டிவிடடா......"நீயொரு பாட்டுப் பாடு அப்பதான் நான் ஆட்டிவிடுவன்" "இல்லை நீ ஆட்டிவிட்டாத்தான் நான் பாடுவன். ஆசையண்ணா ஆட்டிவிடடா......"அந்த நாள் நினைவுகள் புல்லாங்குழல் நாதமாய் எதிரொலித்தன.

மௌனித்துப் போனாள்! ஊஞ்சலில் இருந்தவாறே முற்றத்தில் காயப்போட்டுக்கிடக்கும் புளுக்கொடியலையும் ஊறுகாயையும் கோழிகள் தட்டிவிடாமல் பார்த்தபடியே ஏழாம் வாய்ப்பாடு பாடமாக்கிய நினைவுகளும் இன்னும் இன்னும்.............

"கூகூ.................டும்ம்" "ஐயோ! அம்மா செல்........"

வன்னியை போர் ஆட் கொண்ட காலப்பகுதி.

திடீரென கூவி வெடித்த எறிகணையொன்று திலீப்பின் உடலை காவிச் சென்றது. "அண்ணா..........! அண்ணா....................!" கதறினாள் காந்தி.

அவையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காய்ப் போயின. மழைக்குள்ளும் காந்திக்கு வியர்த்துக் கொட்டியது. மூடுபனி மூட்டத்திற்குள் தொலைவிற் தெரியும் நிழலாய், அந்தக் கரிய உருவம் மனதை திகிலூட்டியபடியிருந்தது.

பாவம் இவள், என்னதான் செய்வாள்......? முன்பின் அறியாத உலகம்; பருவமறியா வயது; 'இறைவா! ஏன் எனக்கு இந்தக் கொடுமை.?' நாற்காலி கூட தொடர்ந்தும் அவளைத் தாங்கி வைத்திருக்க பொறுமையற்று சலனப்பட்டது. வானத்து மின்மினிகள் கூட அவளது துன்பத்தைத் தாங்காது ஒடி மறைந்தன போலும். நேரம் -நள்ளிரவு 12.30ஐ தெளிவாகக் காட்டியது. ஆனாலும், அவன் இன்னும் வந்திருக்கவில்லை.

* * *

சிவலிங்கத்திற்கு வயது அறுபதாகி விட்டது. வருத்தக்காறனா கிவிட்டார்; படுத்த படுக்கைதான்; "இஞ்சரப்பா பார்வதி, இவள் பிள்ளையெங்கையப்பா........?" என்று கூறியபடியே தோளில்க் கிடந்த சால்வையை உதறியபடி சாய்மனையில் அமர்ந்துகொண்டார் சிவலிங்கம். "கொம்பியூட்டர் கிளாசுக்கு போட்டாள்." "ம்.ம் இன்னும்

எத்தனை நாளைக்கு?" "ஏனப்பா...? ஏன்.....?" பரபரப்புடனே வினவினாள் பார்வதி.

"எங்கட புறோக்கர் பொன்னுத்துரையர் ஒரு வரன் கொண்டந்தவர். வெளிநாட்டு மாப்பிளை" என இழுத்தார் சிவலிங்கம். சிவலிங்கத்தாரின் வார்த்தைகளைக் கேட்டு அதிர்ந்து போனாள் பார்வதி. "யாருக்கப்பா....?" சின்னக்கேள்வி. "இவள் பெடிச்சிக்குத்தான்......" "என்னப்பா உங்கட கதை..........." "இல்லையப்பா, எனக்கும் வயது போட்டுது. உழைச்சுப்பார்க்க அந்தப்பிள்ளையும் இல்லை....இவள் காந்தியை ஒருகரை சேர்த்திட்டா நான் கண்ணை மூடினாலும் பறவாயில்லை." செருமியபடியே மீண்டும் சாய்மனையில் சரிந்து கொண்டார் சிவலிங்கத்தார்.

"அதுவும் சரிதானப்பா. அப்ப அவளட படிப்பு.....?" தடுமாறியபடியே கேட்டாள் பார்வதி. "படிச்சது காணும் கையெழுத்து போடுவாள் தானே........பிறகென்ன?" க.பொ.த (சாதாரணப்) பரீட்சை எழுதி விட்டு பெறுபேற்றுக்காய் காத்திருந்த காந்திக்கு வீட்டில் கல்யாணப் பேச்சு........

இவளுக்குத் தேவைதானா ஒரு கல்யாணம்........?"அப்பா நான் மேலும் படிக்கவேணும். தயவு செய்து என்னை படிக்கவிடுங்க....!" "பிள்ளை, வீடுதேடி வந்த சீதேவியை காலால உதைக்கிற கதையெல்லோ உன்ரகதை. பெடியன் நல்ல வடிவாம்; குடிவெறியில்லை; அங்க போனால் நீ ராசாத்திதான். கதையவிட்டுட்டு போற அலுவலைப் பார்."

"அப்பா எனக்கு கல்யாணம் வேண்டாம்.... வேண்டாம்....நான் வெளிநாடு போகேல்ல" மன்றாடினாள் காந்தி. ஆனாலும் பலன் கிட்டவில்லை. எழுதிய எழுத்து எப்படித்தான் மாறும்.....? தனது கருத்துக்கள் இனியும் எடுபடப் போவதில்லையென்பதை உணர்ந்து கொண்டாள் காந்தி.

தனது கற்பனைகளெல்லாம் ஊமையாய் உறங்கிக்கொள்வதை அவளால் சகித்துக்கொள்ள முடியவில்லை. எதுவும் பேசவும் முடியவில்லை. கண்ணீர்த்துளிகள் பூமழையாய்ச் சொரியத் தொடங்கின.

* * *

ஸ்ரீலங்கா எயார்லைன் விமானம் ஜேர்மனியை நோக்கி பறந்து கொண்டிருந்தது. பெற்றோரின் வற்புறுத்தலுக்காய் உறவுகளை

விட்டுப்பிரிந்து.....பாதிவயதிலே படிப்பைவிட்டு கல்யாணத்திற்காய் வானில் பறந்து கொண்டிருந்தாள் காந்தி. சலசலக்கும் காற்றையும் கீறிக் கிழித்தபடி பழைய நினைவுகள் அவளைப் பின் தொடர்ந்தன. விமானம் தரையிறங்கியது.

"ஹலோ காந்தி எப்படி? வந்திட்டியளா......?" காகத்தையும் விட கரியதோர் உருவம்; பருத்தஉடல்; உச்சந்தலை விமானத்திடலை நினைவுகூர்ந்தது. அதைச் சுற்றியுள்ள இளநரை சனிக் கிரகவளையத்தை பிரதிபலித்தது. பற்களில் நிறைந்த வெற்றிலைக்காவி; மெல்லியதொரு கந்தகவாசமாய் பிஃராண்டி. பார்க்கவே பயங்கரத் தோற்றத்தில்....... இவன்......யார்?

"நீங்கள்...............?? நீங்கள்.....??" தடுமாறியபடியே கேட்டுவிட்டாள் காந்தி. "காந்தி ஏன் இப்படி கேட்கிறீர்........? நான்தான் உங்கட Husband" என்று கூறிவிட்டு புன்னகைத்தான் முகுந்தன். அந்தப்புன்னகையே அவனது சுயரூபத்தை வெளிக்காட்டியது. காரொன்றில் இருவரும் ஏறிப் புறப்பட்டார்கள். காந்திக்கு கண்கள் இருட்டியது; மூச்சு நின்று விடும் போலிருந்தது; அவளது வாய் ஊமையாகிப்போனது.

ஆனாலும் ஒரு சிறைச்சாலை நோக்கியதாகவே தன் பயணமிருப்பதை அவள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. கார் நிறுத்தப்படுகிறது."காந்தி இறங்கம்மா............ "அவனது வஞ்சகமான பேச்சு தொனித்தது.

நாட்கள் வாரங்களாக, வாரங்கள் மாதங்களாக ஓடிக்கொண்டிருந்தன. காந்தி ஜேர்மனிக்கு வந்து ஒன்றரை மாதங்கள் உருண்டோடிப்போயின. வந்ததிற்கு ஒருமுறை மட்டுமே வீட்டாருடன் தொலைபேசியில் உரையாடியிருந்தாள்.

நாட்கள் செல்லச்செல்ல முகுந்தனின் நடவடிக்கையில் மாற்றத்தை உணர்ந்தாள். காந்தியை தனியாகவே விட்டு விட்டு வேலைக்குச் செல்பவன் இப்போது அவள் மீது சந்தேகப்படுகிறான். தொடக்கத்தில் மாலையிலேயே வேலை முடிந்து வீடு வருபவன், இப்போது நள்ளிரவில் வருகின்றான்.

"ஏனப்பா இவ்வளவு நேரமும்......?""உனக்கேனடி அந்தத் துளவாரமெல்லாம்......?? வாற நேரம் கண்டுகொள்." இப்படியாய் சிலசமயம் உலகமகாயுத்தமே வெடித்துவிடும்.

05

இது தானா எனக்குரிய சுதந்திரம்? நான் வாய் திறந்து கதைப்பதற்கு உரிமையில்லையா? எனது வாய் என்ன ஊமையா.? இதைத்தானா பாரதி பெண்விடுதலை என்றான்.????

தனிமையிலிருக்கையில் காந்தி இப்படியாய் புலம்பி அழுவாள். இந்த உலகத்தில் இன்னும் எத்தனையெத்தினை காந்திகள் ....?.இது மாதிரி எத்தனையெத்தனை பிரச்சனைகளோடு....?

ஒருநாள் "காந்தி. எடியேய் காந்தி.......?"

காந்தியின் உடலோ நடுக்கமுற்றது. "எடியேய் கதவைத் திறவடி முதல்......."வழமைக்கு மாறாக இன்று நல்ல போதையிலிருந்தான் முகுந்தன். காந்திக்கு பீதி பொங்கிப்பிரவாகித்தது. விரல்கள் நடுக்கத்துடனே மெதுவாக கதவைத் திறந்து கொண்டன.

அவன் பின்னேயொரு வெள்ளைக்காரப்பெண். மௌனித்துவிட்டாள் காந்தி.... "யேய். போய் ரெண்டு கூல்றிங்ஸ் கொண்டா.........."அதட்டியது அந்தச்சிங்கம்." "ஏனப்பா இந்தக்கோலம்...... என்ன நடந்தது உங்களுக்கு........?" என முனகினாள் காந்தி. "என்னடி வாய்காட்டுகிறாய். என்னைத்திருத்த நீயாரடி?" காந்தியின் பின்னலைப் பிடித்து சப்பாத்துக்கால்களால் உதைந்தான். தலை சுவரோடு அடிபட்டு குருதி சொட்டியது. "ஐயோ.......!!! என்னை கொல்லாதை..........." அங்கேயொரு காற்பந்தாட்டச்சுற்று நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்த வெள்ளைக்காரப்பெண் எக்காளமிட்டுச் சிரித்துக் கொண்டிருந்தாள். "திருப்பி வாய்காட்ட என்ன திமிரெடி உனக்கு?" சப்பாத்துக்கால்களால் மட்டுமல்ல. தனது இரு இரும்புக் கரங்களாலும் அவளை நையப்புடைத்தான். அவனிடம் மன்றாடிப் பார்த்தாள். இரக்கமேயில்லாதவனின் காதுகளில் எப்படி அவளது வேண்டுதல்கள் விழ.........? உயிர்ப்படங்கிய ஓவியம் போல இரத்தவெள்ளத்தில் மூர்ச்சித்துக் கிடந்தாள் காந்தி.

வெள்ளைக்காரப் பெண் பையிலிருந்த பிஃராண்டியொன்றை உடைத்து அவனது வாயில் பெற்றோலாய் ஊற்றிவிட்டாள். போதை தலைக்கேறியது

மீண்டும் தனது கால்களை அவள் மேல் படரவிட்டான் முகுந்தன். முன்பின் அறியாத ஜேர்மனிய தேசத்தில் அவளது வெற்றுடல் அநாதையாய்........

அவளது நாளங்கள் அறுக்கப்பட்டு இரத்தக்காட்டாற்றில் சப்பாத்துக் கால்களின் தாலாட்டுடன் ஊமையாய் உறங்கிக் கொண்டிருந்தாள்.......!!

(கொழும்பு பல்கலைக்கழக இந்துமன்றம் நடத்திய அகில இலங்கை ரீதியான சிறுகதைப் போட்டியில் ஆறுதல்பரிசு பெற்ற சிறுகதை)

● மல்லாவிக் கஜனி



# கூடு

கறுத்த கனத்த மேகங்கள்; குலைநடுங்கும் வாடைக்காற்று; அங்குமிங்குமாய் முறிந்துவிழும் மரங்கள்; இருளின் மாயைக்குள் மண்டியிட்டுக்கொண்டது ஊர். இத்தனைக்குமிடையில் வானைக் கீறிக்கிழித்து பளிச்சிடும் மின்னல். அந்தக் கீற்றுக்குப் பின்னால் அணு குண்டாய்ச் சிதறும் இடிமுழக்கம். அந்தக் கிராமமே சூனியப் பகுதியாய் இருந்தது.

இவை யாவற்றையும் ஒன்றுதிரட்டிப் பொழியும் கனமழை. இருளைக் கிழித்தவாறு எங்கோவொரு மெல் லிய மஞ்சள் வெளிச்சம் சிணுங்கிக் கொண்டிருந்தது. கொலைக் காற்று போல வாடைக்காற்று சுழன் றாடியது.

பற்கள் கிடுகிடுத்தன. உடல் குளிரால் உறைந்து போயிருந்தது. ஆனாலும் அந்த உருவம் குப்பி விளக்கின் முன்னால் குந்தியிருந்தது. கையி லேயிருந்த புத்தகமும் சோர்ந்து போனது. தூக்கம் வாரிப்போட்டா லும் தூங்க மனமில்லை.

விடிந்தால் பரீட்சை. காலின் கீழே சிறியதொரு பாத்திரத்தில் நீர். தூக்கம் வரும் போதெல்லாம் அதனுள் கால்கள் சென்றுவிடும்.

தாய் செல்லம்மாவுக்கு சரியான காய்ச்சல். குச்சியால் செய்ததைப் போன்ற உடல் வெளித்தள்ளும் என்புகள். நொய்ந்துபோன தேகத்தில் இப்பொழுது காய்ச்சலும்..வியர்வையால் உடல் நனைந்திருந்தது. நேற்று ஒரு பனடோல் போட்டிருந்தாள். வேறு பனடோலும் இருக்கவில்லை. குளிர் ஒருபுறம், காய்ச்சல் மறுபுறம், அவளது நிலை பார்க்கப் பரிதாபமாயிருந்தது."அம்மா... அம்மா என்னம்மா செய்யுது.....?"

தாயருகில் சென்று பரிவோடு வினவினான். "எனக்கொண்டும் இல்லை மோனை. நீ போய்ப் படியடா ராசா...." எல்லாவற்றையும் தனக்குள்ளே புதைத்து புன்னகைப்பாள் தாய். குப்பி விளக்கை காற்று எங்கே விட்டு வைக்கப்போகிறது? தீப்பெட்டியிலும் குச்சுகள் தீர்ந்து போய்விட்டன. இறுதிக்குச்சை உரசிப்பற்ற வைக்க முயல்கிறான். அதனையும் காற்று அணைத்துவிடுகிறது.

* * *

பொழுது புலர்ந்தது. மழை ஓய்ந்து போய்விட்டது. எழில் கொஞ்சும் அந்தக்கிராமம் காலையில் சுடுகாடாய் மாறியிருக்கும் என யாரும் எண்ணியிருக்கவில்லை. வடலிப்பனையின் மட்டையால் கட்டப்பட்ட படலையைத் திறந்து வெளியே வந்த அருணுக்கு, முற்றத்தில் கண்ட காட்சி அதிர்ச்சியளித்தது. "அம்மா...... அம்மா! இஞ்ச வந்து பாருங்கோ!" கூச்சலிட்டபடியே தாயிடம் ஓடினான். குறுக்கே தங்கை, "என்னடா அண்ணா...?" என்று வழிமறித்தாள்.

"மா....மா....மர...ம்" வார்த்தைகள் தொண்டையில் முள்ளாய் குத்திக் கொண்டு வெளியே வரமறுத்தன. மௌனித்துப் போய் நின்றான் அருண்.

"அப்பா சொன்னவர் இது அப்பப்பா வைத்த மாமரம். எத்தனை சந்ததிகள் கடந்தாலும் இந்த மரம் நிக்கவேணும். பரம்பரையாய் எல்லா சந்ததிக்கும் அது பயன் கொடுக்க வேணுமெண்டு. ஆனால் இன்று..." தந்தை சிவம் அடிக்கடி கூறும் வார்த்தைகள் அவன் அடி மனதிலிருந்து மேலெழுந்து வரலாயிற்று.

"இவ்வளவு மாங்காயும் அநியாயம்......?" தங்கை பிரியாவின் மனப்புகைச்சல் கனன்றது. நிலமெங்கும் சிதறிக்கிடக்கும் மாங்காய் களை விற்றுத்தான் அவளுக்கு சப்பாத்து வாங்கித்தருவதாக அம்மா வாக்களித்திருந்தாள். இனி அது நடக்காது. "அம்மா! இனி நீங்கள் எனக்கு சப்பாத்து வாங்கித் தரமாட்டியளென்ன? என்ர சாப்பாத்தைப் பார்த்து

பிள்ளையளெல்லாம் நக்கலடிக்குதுகள். முதலையாம்; நாக்கை நீட்டுதாம்; தங்களை விழுங்கிப்போடுமாம்; மரமும் முறிஞ்சிட்டுது. இனி எனக்கு சப்பாத்து.....?"

தள்ளாடியபடியே முற்றத்திற்கு வந்து சேர்ந்தாள் செல்லம்மா. வீட்டு வாசலால் இறங்கியதும் றோட்டை மறைத்தபடி முற்றத்தில் நின்ற கறுத்தக் கொழும்பான் மாமரம் அது. பருவத்திற்கு சும்மா குலைகட்டிக் காய்க்கும். பெரிய உயரம் என்றுமில்லை. சில நேரத்தில் காய்கள் தலையில்கூட முட்டும். பழமென்றால் தேன்தான். பெரியதும்கூட. போரில் மார்பு பிளந்த சூரனாக மரம் அவள் காலடியில் மல்லாந்து கிடந்தது. கோபம் தீராத சூரனாக, சாகும் போதும் நிலமெங்கும் பற்களை பரப்பி நரநரத்தவன் போல, மாங்காய்கள் சிதறிக்கிடந்தன. "இனி.........?" அவளுக்குத் தெரிந்தது அந்த மரத்திற்கு அவளிலும் பார்க்க வயது கூட. பல போர்களைக் கடந்து வந்த மரம் அது. எல்லாம் நாசம் செல்லம்மா தலையில் கை வைத்தபடி குந்தியிருந்தாள்.

"அம்மா... அம்மா... அண்ணா....அண்ணா...!" தங்கையின் ஒலம் இடியாய் இறங்கியது. தங்கையை நோக்கி ஓடிப்போனான் அருண். பாறிக்கிடந்த மரக்கொப்புகளுக்கு நடுவே பிய்ந்து போன குருவிக்கூடு. தூக்கிக் காட்டினாள் பிரியா. கொப்புகளுக்குள் சிக்குண்ட நிலையில் குருவிகள். மூன்று குஞ்சுகள் இறந்துபோய்.....தாய்க்குருவி காயப்பட்டிருந்தது. பறக்க முற்பட்டது; முடியவில்லை; சிறகு ஒடிந்திருந்தது.

பிரியாவும் அருணும், சேர்ந்து குருவிகளை மீட்டனர். அவற்றைத் தாயிடம் கொண்டு சென்று காட்டினார்கள்.

"ஏன் மோனை இதுகளை பிடிக்கிறியள். ஐந்தறிவு படைத்த ஜீவனுகளை கொடுமைப்படுத்தக்கூடாது. அதுகளை பேசாமல் விட்டிடுங்கோ...." "இல்லையம்மா, அதுகள் பாவங்கள். நான் அதுகளை வளர்க்கப் போறன்" என்றாள் பிரியா.

கையில் கிடந்த பிய்ந்து போன குருவிக்கூட்டையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் செல்லம்மா. காலம் ஈவு இரக்கமே இல்லாமல் எவ்வளவு எளிதாக எல்லாவற்றையும் சிதைத்துப்போடுகிறது என்று நினைத்த போது இயலாமை அவளை வாட்டியது.

* * *

அருணின் தந்தை ஒரு விவசாயி. ஒரு போகத்திற்கு எப்படியும் ஏழெட்டு ஏக்கர் நெல் விதைப்பார். சொந்தமாக ஒரு சோடி உழவுமாடு நின்றது. அப்ப இந்த மிசினுகள் இல்லை. எல்லாம் மனிதவலுதான். விதைப்புத் தொடங்கினால் ஊர் ஆம்பிளையள் ஒருதரையும் ஊரில் காணக்கிடையாது. வயலில்தான் நிப்பினம்.

இப்படித்தான் சிவமும் வீட்டிற்கு வர பிள்ளையள் நித்திரையாய்ப் போயிடுங்கள். பிறகும் காலங்காத்தால ஐந்துமணிக்கெல்லாம் சிவத்தை வயலில் பார்க்கலாம். பிள்ளைகள் அப்பாவை காண்பதே அரிதாய்த்தான் இருக்கும்.வயற்கரை வீதியால்தான் பள்ளிக்கூடம் போக வேண்டும். பிள்ளைகள் - அப்பா நாளாந்தச் சந்திப்பு அங்குதான் நடக்கும்.

சிவத்திற்கு நான்கு பிள்ளைகள். மூத்தவன் அருண் மற்றது மூன்றும் பொம்பிளைப் பிள்ளையள். அருண் உயர்தரம் படிக்கின்றான். மூன்றாவது மகள் பிரியா. அவள் பத்தாமாண்டு படிக்கிறாள். வயலில் உழுதுகொண்டு நிக்கேக்க ஏதோவொரு பொருள் வெடிச்சு கருவெள்ளை எருத்தனுக்கு பின்னங்கால் போட்டுது. அண்டையிலிருந்து சிவம் வயலுக்குள் இறங்கியதில்லை. ஒவ்வொரு போகமும் சின்னாம்பி மாமாவுக்குத்தான். வயலைக் குத்தகைக்கு கொடுப்பார். அன்று பிடித்த சனியன்தான் இன்றுவரையும் ஆனாலும் சிவம் சோர்ந்ததில்லை. உழைச்ச உடம்பு சும்மா இராதுதானே வீட்டில.

சைக்கிள் கடை போட்டார். குத்தகை நெல்லு சாப்பாட்டுக்கு மிச்சம் மிச்சம். ஆனாலும். மிச்ச தேவைகளுக்கு என்ன செய்வது? சைக்கிள் வேலையும் பெரிதாய் இல்லை. மாமரம்தான் அவ்வப்போது கைகொடுக்கும். குடும்பம். சுளையாய் ஆயிரம்ரூபா தாள்களைப் பார்ப்பது மாம்பழசீசனில் மட்டும்தான்.

"எட தம்பி! நான் செத்துப்போனாலும் எப்படியாவது நீ படிக்கவேணும். இந்த மாமரம் எத்தனை சந்ததியாய் நிண்டு பலன் தருகுது. அதுபோல நீயும் ஒரு டொக்டராய் வந்து இந்தச் சமூகத்திற்கு சேவை செய்ய வேணும். அம்மா சகோதரங்களை கண் கலங்காமல் பார்க்கவேணும்.." மாமரத்திற்கு கீழே இருத்தி வைத்து சிவம் அருணுக்கு மீண்டும் மீண்டும் சொன்னவைகள் இவ்வளவு தான்.

* * *

போர் வந்தது. கந்தகநெடில் மூக்குகளை உறுத்தியது. பிணமலையில் ஊன்றி நடந்த படி உயிர்தப்ப ஓட்டம். பதுங்குழிகள் சொர்க்கமாயின. அதன்மேலே விழுந்த போது நரகத்தை முன் காட்டின. நள்ளிரவு வேளை.....

வழமைக்கு மாறாக எறிகணைகள் சரமாரியாக வீழ்ந்து வெடித்த ஒருநாளில் வானைக் கீறிக்கிழித்து வந்த மிகையொலி விமானங்கள் சிவத்தின் தலையைக் கொய்து சென்றன.

கரிய இருளுடன் கலந்த வெடிமருந்தும், புகையுடன் அடங்கியபோது சிவத்தின் உடல், குண்டுச் சிதறல்களால் குதறப்பட்டுக் கிடந்தது. செல்லம்மாவுக்கு வயிற்றில் சிறு காயம். பெண்பிள்ளைகள் இருவரும் குருதியிலே மிதந்து கொண்டிருக்க, ஒருத்தி மட்டும் அதிஸ்ட்டவசமாக சிறு உரசல் காயம்கூட இன்றி உயிர் பிழைத்தாள். சாவு ஓலங்கள்கூட யார் காதுகளிலும் கேட்பதாயில்லை. சிவத்தையும் இரு தங்கைகளையும் அருகிலிருந்த பதுங்குகுழிக்குள்ளேயே போட்டு மூடிவிட்டு செல்லம்மாவைத் தாங்கியபடி தங்கையையும் அழைத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தான் அருண். உயிருக்கான போராட்டம் அவனுக்கு இன்னும் மிச்சமிருந்தது

முகாமிலே தங்கியிருந்த செல்லம்மாவும், பிள்ளைகளும் கடந்த வாரம் தான் சொந்தவூருக்கு வந்திருந்தார்கள். வீட்டைப் பிரிந்து ஏறத்தாள இரண்டு ஆண்டுகள் கடந்தாகி விட்டன. குச்சு வீதிகள் பற்றைகளால் மண்டிப் போயிருந்தன.

கிரவல் வீதிகள் சப்பாத்துக் கால்களை தாங்கித் தாங்கியே நொய்ந்துபோயிருந்தன. முற்றத்தில் ஒரு புல் கூட முளைக்கவிடாமல் செருக்கி துப்பரவு செய்துவிடுவார் சிவம். அந்தக் கடனுக்கு முற்றம் முழுவதும் நாயுண்ணிப் பற்றைகளும், நெருஞ்சி முட்செடிகளும் மலிந்து போய்க் கிடந்தன. மண்ணாலான அந்தக் குடிசை....இருந்த இடமே தெரியாமல் செடிகளால் மண்டிப் போயிருந்தது. தங்கைச்சியின் சாமர்த்திய வீட்டுக்கு பனையோலை வெட்டி அடைத்த வேலி ..... ஒட்டை ஒடிசலாய்...

ஆனால் மாமரம் மட்டும் ஒய்யாரமாய் நிமிர்ந்து நின்றது. போர் அழிவின் சாட்சியாய், பல்வேறு வடுக்களை தாங்கி நின்றாலும், தன்மானம் கொண்டு சிறிதேனும் பணியாமல் நிமிர்ந்து நின்றது. அப்பா போட்ட சைக்கிள் கொட்டில் மட்டும் ஓட்டை ஒடிசலானாலும் ஓரளவு நல்ல நிலையிலிருந்தது.

கொண்டு வந்த ஓரிரு பைகளை அந்தக் கொட்டிலுக்குள் வைத்து விட்டு மாமரத்தின் கீழ் வந்தமர்ந்து கொண்டான் அருண். பழைய நினைவுகள் அவன் மனதில் பம்பரமாய் சுழன்றன.

* * *

பங்குனி மாதத்து தகிக்கும் வெயிலுக்கு மாமரம் நல்ல சுவாத்தியமாய் இருக்கும். பிரியா அப்ப சின்னப்பிள்ளை. ஊஞ்சல் கட்டித்தரச் சொல்லி ஒரே கரைச்சல். ஒரு நாள் அம்மம்மாவோட பழைய சாறி ஒன்று எடுத்து ஊஞ்சல் கட்டி கொடுத்தன். அவள் ஆசையாக ஆடுவாள்.

இப்படித்தான் ஒரு நாள் சாமித் தட்டில் பத்து ரூபா காசு கிடந்தது. தங்கைச்சி பள்ளிக்கூடத்துக்கு எடுத்து வந்து விட்டாள். பள்ளிக்கூடம் முடிய நானும் அவளும் பக்கத்து கடையில சூப்புத்தடி வாங்கி சாப்பிடேக்க வயலால மாடு கொண்டு அப்பா வந்திருக்கிறார். அதை நாங்கள் கவனிக்கவே இல்லை. கடை வாசலில வைத்து, மாட்டுக்கு அடிக்கிற தடியால அடிச்சாரே ஒரு அடி.....!

காலின் கீழே கிடந்த தழும்பினை அவனையறியாமலே அவன் கைகள் வருடிக்கொண்டன. சின்னமாமாவின்ர பெடியனோட சேர்ந்து பனங்கூடலடி குளத்திற்கு போனம். போய் வரேக்க அப்பாவோட வேலை செய்யிற சிங்கன் மாமா கண்டு அப்பாக்கு சொல்லிப்போட்டார்.

இரவு அப்பா வரேக்க ஒன்பது மணியாச்சு. நான் நித்திரை. அடுத்த நாள் விடியக்காத்தால இந்த மாமரத்திலதான் கட்டிப்போட்டவர். பின்னேரம் தான் அம்மா அவிட்டுவிட்டவா.

அப்பா பொல்லாதவர்தான். என்றாலும் எங்களில நல்ல பாசம். வீட்டில நிறைய தென்னம்பிள்ளை தானே. தேங்காயில கொப்பறா போட்டு எண்ணெய் ஊத்துவம். அப்பா கூப்பன் மா வேண்டி வருவார். பனங்காயக் காலத்தில அம்மா பணியாரம் சுட்டுத்தருவா.

சுற்றும் முற்றும் திரும்பிப் பார்த்தான். கண்ணுக்கெட்டிய தூரம்வரை தென்னைகள் இல்லை. வட்டோடு பட்டுப்போய் முடமாக நின்றன. இனி................? எண்ணெய்..........? நினைவுகளிலிருந்து மீள முடியாமலிருந்த அருணை தாயின் அழைப்பு மீளச்செய்தது. கீச்.........கீச்கீச்கீச்...........கீச்

தனது காதினை கூர்மையாக்கிக் கொண்டான் அருண். குருவிகள்

அலறும் சத்தம் அவன் காதுகளில் தெளிவாகக் கேட்டது. பழைய நினைவுகளிலிருந்து மீண்டவனாய் குருவிகளை விட்டிருந்த கூட்டினை நோக்கி விரைந்தான்.

கறுத்தப் பூனையொன்று. பார்வதி மாமி வீட்டான் தான். அதே கறுத்தப்பூனை தான் கூட்டின் கீழே!

அருண் அமைதியாகிவிட்டான். இரத்தக்கறையேறிப்போயிருந்தது குருவிக்கூடு. பூனையால் குதறப்பட்டு கிடந்த தாய்க்குருவி குற்றுயிராய்க் கிடந்து துடித்தது. குஞ்சு பூனையின் வாயில் பௌவியமாகக் கிடந்தது. பூனையின் வாயால் குருதி சொட்டிக்கொண்டிருந்தது. என்னைக் கண்டும் கூட பூனை அசையவில்லை. அப்படியே நின்றது.

* * *

நேரம் அதிகாலை நான்கு மணியிருக்கும். சடீர்......

வாகனமொன்று படலையில் வந்து நின்றது. வாகனத்திலிருந்து இறங்கிய ஐந்தாறு தலைகள் முற்றத்தை அண்மித்துக்கொண்டிருப்பது ஓட்டை ஓடிசல்கள் நிறைந்த தறப்பாள் வெளிக்குள்ளால் தெரிந்தது.

சேவல்கள் தம் மார்புச் செட்டைகளில் அடித்து கூவிக்கொண்டிருந்தன. ஆனாலும் கிழக்கு வானில் கூட விடியலின் அறிகுறி சிறிதளவேனும் தென்படவில்லை. இருள் மண்டிப்போயிருந்தது. ஆனாலும் அதற்குள்ளாலும் முற்றத்தில் வீழ்ந்து கிடந்த மாமரக்கொப்புக்களைத் தாண்டி வந்த பாதச்சுவடுகள் தெளிவாகவே தெரிந்தன. என்னை தாண்டி நகர்ந்துகொண்டிருந்தன அந்தத் தலைகள்.

"அண்ணா.............???"

இருள் மெல்லச் சூழ்ந்துகொண்டது.

(தமிழ்த்தந்தி 29. டிசம்பர் 2013.
உதயன் - சூரியகாந்தி. 17.05.2015.)



# தேர்வு

நிகழ்ந்து கொண்டிருப்பது குளிர்காலம். இது ஒரு நடு இரவு. வானத்தில் சின்னஞ்சிறிய நட்சத்திரங்கள் வைரக்கற்கள் போல.... பிறைநிலாவின் மெல்லிய வெளிச்சத்தில் அந்தக்கிராமமே வேறேதோ புது உலகம் போன்று தோற்றமளித்தது. அமைதியாகத் தூங்கிக் கொண்டிருக்கின்ற அந்தக் கிராமத்திற்கு தாலாட்டுப் பாடியது இளங்காற்று.

தீபனுக்கு நித்திரையோ எட்டிப் போனது. "தம்பி ஏன் நித்திரை வரேல்லையே..............?" இது தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட அவனது தாயின் குரல். "இல்லையம்மா........!!" ஒற்றைப் பதில் "ஏனப்பு.......!!"

மௌனம் தொடர்கிறது. நேர்முகத் தேர்வொன்றுக்காய் காலையில் கொழும்புக்குப் புறப்படவேண்டியிருந்தது. எத்தனை எத்தனை நேர்முகத்தேர்வுகள் ................? எல்லாமே விளலுக்கிறைத்த நீராய்......?

இருந்தாலும் துவண்டுவிடா மனவுறுதியுடன் தொடர்ந்து கொண்டிருக்கின்றான். அனேகமாக நேர்முகத்

தேர்வுகளில் மறைமுகமாக ஏற்கனவே ஆட்கள் தேர்வாகிவிடுவார்கள். அடுத்து என்ன நடக்கப்போகிறது என்று யோசித்துக் கொண்டிருந்தான் தீபன்.

நீதியே இல்லாத இந்த உலகத்தில் வாழும் மனிதமற்ற மனிதர்களின் அநீதியான அதிகாரத்திற்கு அடிமையாகிப்போன என்னைப்போல இன்னும் எத்தனை ஏழைகள், என்று தீபன் அடிக்கடி நொந்து கொள்வான். கேட்கப்பட்ட தகுதிகள் இருந்த போதும், தட்டிக் கழிக்கப்படுகிறோம். மேலும், அவன் நினைவுகள்...வழமை போல் - யுத்த காலத்தில் தன் குடும்பம் கடவுள் புண்ணியத்தால் உயிரிழப்பு ஏதுமின்றி மீண்டதையும், தனது தந்தை கால்களை இழந்ததையும் அதைத் தொடர்ந்து அவர் நோயாளியாகப் படுக்கையில் போய்விட்டதையும் ஒன்றும் விடாமல் கடந்து சென்றன. இப்படித்தான் அடிக்கடி அந்த நினைவுகள் அவனது நித்திரையைப் பறித்துவிடுவதுண்டு. ஊரில் படித்ததன் மீதிப்படிப்பை அவன் முகாமில்தான் படித்திருந்தான். முகாமில் படித்துத்தான் அவன் வணிகப்பிரிவில் படிக்க பல்கலைக்கழகம் தெரிவாகியிருந்தான். ஆனாலும் படிப்பைத் தொடர வறுமை விட்டு வைக்கவில்லை.

எப்படியாவது ஒரு வேலை - அரச உத்தியோகம் எடுத்துவிட வேண்டுமென்பது அவன் கனவு மட்டுமல்ல, அவனது குடும்பத்தில் அப்பா, அம்மா, தங்கை எல்லோரினதும் கனவும் கூட.

இந்தத் தடவையும் நேர்முகத் தேர்வில் பலனில்லையென்றால்... என்று நினைத்துப் பார்க்கவே அவனுக்குக் கஸ்ரமாக இருந்தது.

நித்திரையின்றி எவ்வளவு நேரம்தான் உளல்வது? எப்படியோ அவனை மீண்டும் நித்திரை ஒருவாறாகப் பற்றிக் கொண்டது.

விடிந்ததும் கடிகாரத்தை எட்டிப் பார்த்தான். நேரம் ஆறு முப்பதைத் தாண்டியிருந்தது.

இந்த கடிகாரமுள்தான், எவ்வாறு இப்படி தலைதெறிக்க ஓடிக்கொள்கிறது என்று எண்ணிக்கொண்டான். இப்போ தான் தூங்கியது போலிருந்தது அவனுக்கு.

"எத்தனை மணிக்குத் தம்பி பஸ்?""ஒன்பது மணிக்கு அம்மா""நேரத்துக்கு வெளிக்கிடப்பு" ஈனமாய் தாயின் குரல். தீபன் கிணற்றடியால் வரவும்

செல்லம்மா சமைத்து முடிக்கவும் சரியாக இருந்தது."இந்தாப்பு சாப்பாடு மேசையில் வைக்கிறன்" "ஓமம்மா நான் சாப்பிடுறன்."

"இஞ்சராடா மோனே. போகேக்க ஆலடிப் பிள்ளையாருக்கு மறக்காமல் கற்பூரம் கொளுத்தீட்டுப் போ ராசா." என்று கூறியபடியே மேசையில் கற்பூரத்தையும் வைத்து விட்டு தன் வேலையைத் தொடர்ந்தாள் செல்லம்மா.

நாடிநரம்பெல்லாம் ஒட்டிப் போய். கிழித்துப் போட்ட பனங்கிழங்கு போல ஒட்டியுலர்ந்து போய் மண் திண்ணையில் சாய்ந்து கிடந்தார் சுந்தரம். அவருக்கும் வயது அறுபதைத் தாண்டி விட்டிருந்தது. இப்போ அவருக்கு வருத்தமும் நல்லாய் கூடிவிட்டது. "அப்பா...! அப்பா...!""என்னடா மோனை..."

"அப்பா! நான் போய்வரப் போறன் குளிசயள மறக்காமப் போடுங்க." "ஓமடா மோனை."

என்று கூறிவிட்டு சிரமப்பட்டுத் திரும்பிப்படுத்தார் சுந்தரம்.

பாடசாலைக்குச் செல்ல நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. தோள்கள் வலிக்க ஒரு பெரிய புத்தக மூட்டையுடன், "அப்பா... அம்மா... அண்ணாக் குட்டி போயிட்டுவாறன்" என்று அவனது அன்புத் தங்கை கார்த்திகா புறப்படத் தயாரானாள்.

தீபனும் கொண்டு செல்ல வேண்டிய அனைத்து ஆவணங்களின் பிரதிகளையும் நேற்றே எடுத்து வைத்துவிட்டான். சிறியதொரு கைப்பையில் அவற்றை வைத்துக் கொண்டு புறப்பட்டுச்சென்றான்.

வவுனியாவுக்கு வந்து கொழும்பு ரயிலில் ஏறிக்கொண்டான் தீபன். இரவு முழுவதும் பயணம், காலையில் நேர்முகத் தேர்வு.

* * *

காலையிலேயே மழையின் அறிகுறி. எப்ப மழை வரும் என்று சொல்ல முடியாது. மழை பிடிப்பதற்கு முன் நேர்முகத் தேர்வு நடக்கும் இடத்துக்கு சென்று விட வேண்டும் என பஸ்சால் இறங்கி வேகமாக நடந்தான்.

முழுக்கை. சேர்ட்; கரிய நிற நீளக் காற்சட்டை; கறுப்பு கால்மேசு; கையில் நிறைந்த கோவைகள்; மிடுக்காய் கம்பீர நடையில் அந்தக் கட்டடத்திற்குள் உள்நுழைந்தான் தீபன்.

தீபனின் தோற்றத்தில் எத்தனை எத்தனை பேர்...? ஹோலில் நிரை நிரையாய் ஆசனங்கள்... அதிலொன்றில் மௌனமாய் அமர்ந்து கொண்டான்.

உள்ளுக்குள்ளே ஒருவித படபடப்பு... இந்த முறையாவது நான் தேர்வாவேனோ...?

மனுசனை மனுசன் நிர்மூலமாக்கும் இயந்திர மனுசர் இருக்கும் வரை எப்படித்தான் நாங்கள் உயருறது?

நெரிசல் மிகுந்திருந்தது. ஆசனங்கள் நிரம்பிவிட்டன. கறுப்புக் கண்ணாடியிலான ஒரு அறை. வாசலில் காக்கிச் சட்டையுடன் ஒருவன். ஹோல் எங்கும் ஒரே சலசலப்பாய் இருந்தது.

அங்குள்ளவர்கள் ஒவ்வொருவரினதும் முகங்களை தீபன் நோட்டம்விட்டான்.

களைத்துப் போய் வெளிறிய முகங்கள்; பயத்தின் சாயல் படந்த விழிகள்; ஒரு வித பதற்றத்துடன் பலரும் அமர்ந்திருந்தார்கள்.

அப்படியே அவர்களில் ஒருவனாக அவனும் உட்கார்ந்திருந்தான். பலர் மனதில் அவநம்பிக்கை தான் ஓடிக் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் முகங்களில் விரக்தி தென்பட்டது. பெண்களோ ஆண்களோ பலரும் அப்படித்தான் தெரிந்தனர். பிறகு இருக்காதா....? பலநூற்றுக்கணக்கான பேர் நேர்முகத் தேர்வுக்காக வந்திருக்கினம். ஆனால், தேர்வாகப் போவது பத்தோ இருபதுபேர்தானே.

இனி அதுக்குள்ள எத்தனை பேர் பிரமுகர்களின் அறிமுகங்களுடன் வந்திருப்பினம். எத்தனை பேர் கையூட்டுக் கொடுத்து ஏற்கனவே ரெடி பண்ணியிருப்பினம்.

"கடவுளே, இந்தத் தடவையாவது எனக்கு அதிஸ்ட்டத்தைக் காண்பியப்பா. என்னை இந்தத் தேர்வுக்கு தகுதியாக்கிக் கொள்றதுக்கு எவ்வளவு பணத்தைச் செலவு செய்து மேலும் மேலும் படிச்சனப்பா. கடவுளே! கைவிட்டுவிடாதேயப்பா... உன்னை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுறன் கைவிட்டு விடாதையப்பா...!"தீபன் மனதுக்குள்ளே கடவுளை வேண்டியவாறிருந்தான்.

"இஞ்சை, சத்தம் போடாம இருக்க மாட்டியளோ?" காக்கிச் சட்டைக்காரன் "வள்" என்று பாய்ந்தான். திடீரென அங்கே அமைதி பரவியது. ஒருவன்

காக்கிச் சட்டைக்காரனை நோக்கி ஏதோ குசுகுசுத்தான். கைகள் உறவாடிப் பிரிந்தன. அவன் அறைக்குள் நுழைந்து கொண்டான்.

இப்படிச் சந்தர்ப்பங்களில் இது வழமைதான். எத்தனை நேர்முகத் தேர்வுக்கு போயிருக்கிறான். ஆனாலும், தீபனின் மனம் "திக் திக்.." என்று அடித்துக் கொண்டது. இன்டர்வியூவிற்கு வந்திருந்த இன்னொரு பெண், காக்கிச் சட்டைக்காரனை அணுகினாள். அவள் பின்னால் இன்னும் நாலைந்துபேர். அவன் அவர்களையும் உள்நுழையவிட்டான்.

இந்தக் கூத்துக்களை எந்த அதிகாரியும் கண்டு கொள்வதாயில்லை. தேர்வுக்காக வந்திருந்தவர்களிலும் எத்தனை பேர் இதை அவதானித்தார்கள் என்று தெரியவில்லை. அப்படித்தான் தெரிந்து கொண்டாலும் என்ன செய்ய முடியும்...?

அமர்ந்திருந்த மீதிப்பேர் வரிசைப்படி போய்க் கொண்டிருந்தார்கள். எப்படியோ தீபனின் முறை வந்தது மெதுவாய் எழுந்து அந்த அறையை அடைந்தான்.

அங்கிருந்தவர்கள் ஆங்கில மொழியையும், சிங்கள மொழியையும் அதிகம் பயன்படுத்தினர்.கேள்விகளை அதிகம் ஆங்கிலத்திலேயே கேட்டுக் கொண்டனர். ஆயினும் அங்கே பெரிய ஆர்வத்தோடு அவர்கள் தன்னை அணுகியதாக தீபன் நினைக்கவில்லை.ஏதோ தப்பு இருக்கிறது போலத்தான் அவன் உணர்ந்தான்.

கேள்விகளை கேட்டு கோவையைப் பார்த்து முடித்ததும் ஒருவர் ஆங்கிலத்தில் சொன்னார். "வெயிற் போர் ரிசல்ற் இன் கோல்"தீபனும் காத்திருக்கின்றான். இன்னும் ஒரு சில பேர்தான் தேர்விற்காக எஞ்சியிருக்கிறார்கள். முடிந்ததும் அனேகமாக அரைமணித்தியாலம் அல்லது ஒரு மணித்தியாலத்தில் முடிவு கிடைத்திடும் என்று அவன் நம்பினான்.

மனதிலிருக்கும் பதட்டத்தைத் தணிப்பதற்காக அலைபேசியை வைத்து நோண்டிக்கொண்டிருந்தான்.இருந்தாலும் எல்லாவற்றையும் மீறி அவனுக்கு யோசனை பலமாக ஓடியது.

என்ன செய்யப்போகிறேன் அடுத்து என்ன செய்யப்போகிறேன்.அதுதான் இந்தத் தேர்விலயும் தோற்றுப் போய்விட்டால்... இல்லை! இது தோல்வியல்ல எனக்கு. நேர்மையான வழியில் இந்த வேலை

கிடைக்காமல் போய்விட்டலாம். அப்படி நடந்தால்? என்ன செய்யப் போகிறன்.....??

அப்படி எண்ணிப் பார்த்த போது அவனால் அங்கு இருக்கவே முடியவில்லை. எழுந்து நின்றான்; சுற்றும் முற்றும் பார்த்தான்; உலாத்தினான்.

ஒரு பொறுப்பானவர் வந்தார். அவருடன் அந்தக் காக்கிச்சட்டைக்காரனும் வந்தான். அந்தப் பொறுப்பானவர் கையில் வைத்திருந்த அச்சடித்த பேப்பர் ஒன்றை அங்கிருந்த விளம்பரப் பலகையில் ஒட்டச் செய்தார். அதன் பிறகு கூட்டத்தின் முன்னே வந்தார். "ஓல் ஒவ் யூ கான் சி றிசல்ற் ஒன் த போர்ட்" என்று கூறிவிட்டு புன்னகையுடன் அவர் போய்விட்டார். அடித்துப் பிடிச்சு எல்லோரும் விளம்பரப் பலகை முன் நின்றனர்.

சிலர் சந்தோசத்தில் குதித்தனர். சிலர் சட்டென்று கவலையுடன் அவ்விடம் விட்டு விலகினர். அவர்களில் தீபனும் ஒருவன். மிகவும் சோர்ந்துபோனான். அவன் நேரே ரயில்வே ஸ்ரேசன் நோக்கி நடந்தான். மதியம் ஆகியும் தான் இன்னும் எதுவும் சாப்பிடவுமில்லை குடிக்கவுமில்லை என்பதை மறந்து விட்டான். ரயிலைப்பிடித்து விட்டான். முன்றாம் வகுப்பு பெட்டிதான். ஆனால் ஆசனம் கிடைத்திருந்தது.

* * *

ரயிலில் உட்கார்ந்து கொண்டு அலைபேசியை சைலன்சிலிருந்து சத்தத்திற்கு மாற்றி விடுவதற்காக எடுத்தான். அப்போது தான் பார்த்தான். பதினொரு மிஸ்ட்கோல்ஸ் வந்திருந்தது. நம்பரை பார்த்தான். அவன் நண்பன் மாதவனுடையதாயிருந்தது. அவன் இப்படியொரு முறையும் செய்ததில்லையே....

அவனுக்கு அழைப்பை எடுத்தான். உடனே லைன் கிடைத்தது. "தீபனா....?மச்சான் தீபன்....?" "என்னடா சொல்லடா........." "மச்சான் மனதை திடப்படுத்திக் கொள்ளடா" "என்ன விசயமடா....?" "அத..டா உங்கப்பாவை ஆஸ்பத்திரில வைச்சிருக்கிறம். வருத்தம் கடுமையாய் இருக்கு." " எங்க.....?" "வவுனியா ஆஸ்பத்திரிதான்....." டாக்டர்ஸ் என்ன சொல்லினம்? "அதடா...மச்சான்....அப்பா.....இப்ப.....உயிரோட......" "என்னடா என்ன செல்லுறாய்!" "ஓமடா மச்சான் அதைச் சொல்லத்தான் ட்ரை பண்ணினனான். தீபனின் கை கால்கள் பதறின. இதயம் வேகமாக அடித்துக்கொண்டது.

எப்படித்தான் நோய்வாய்ப்பட்டிருந்தாலும், அவர் பேசாமல் ஒரு மூலையில் படுத்துக்கிடந்தாலும் அப்பா இருக்கிறார் என்ற தெம்பு இவ்வளவு நாளும் இருந்தது.இப்போ....அதுவும் நான் பக்கத்தில் இல்லாதபோது....!

மறுபக்கமாக திரும்பி சீற்றின் மீது தலையைக் கவிழ்த்தவாறு சீற்றை இறுக்கிப்பிடித்தான். வெடிக்கும் விம்மலை அடக்கியவாறு.

கண்கள் நீரை இறைத்து ஓய்ந்தன.......அவன் எப்படி அமைதியடைய முடியும்? அப்பாவுக்கு அவனது வேலை பற்றி ஒரு எதிர்பார்ப்பு இருந்திருக்குமல்லவா? அவன் மிகவும் எதிர்பார்த்திருந்த அந்த வேலையும் கிடைக்கவில்லையே!

ஒரு முடிவுக்கு வந்தான். இனி இன்ரவியூ என்று ஒரு போதும் புறப்படுவதில்லை.குத்தகைக்காவது அப்பா செய்த மாதிரி தோட்டம், வயல் செய்யவேண்டியது தான்.அது தான் அப்பா எல்லாவற்றையும் பழக்கித்தந்திருக்கிறாரே.என்ன கொஞ்சம் மழை வெயில் என்று பாராது கஸ்ரப்பட வேண்டியிருக்கும். மண்ணே நிரந்தரம் என்று இருக்க வேண்டியிருக்கும்.இந்த ஞானம் ஏன் முதலே வராமல் போய்ச்சு......

இந்த மண்ணுக்காகத்தானே எத்தனைபேர் இரத்தத்தையும் சதையையும் குடுத்திருக்கினம். முன்னமே இந்த முடிவை நான் எடுத்திருக்கலாம்.இப்ப அதிலாவது கொஞ்சம் முன்னேறியி ருந்திருப்பன்......

என்று தனக்குள்ளே சிந்தனையில் மூழ்கிப் போயிருந்தவன். அந்தக் கோவைகள் அடங்கிய பையை கையில் எடுத்தான். ரயிலில் அவன் அமர்ந்திருந்ததற்குப் பக்கத்தில் இருந்த கண்ணாடி யன்னலைத் திறந்தான்.கோவையைத் தூக்கி வீசினான் வெளியே........!அவை சிதறி காற்றில் பறந்தன. பட்டம் போல்......!

இனி தொழிலுக்காக என்னைத் தேர்வுக்குள்ளாக்கப் போவதில்லை. நானே எனக்கான தொழிலைத் தேர்ந்தெடுத்துவிட்டேன். தீபன் உறுதியாயிருந்தான். ரயில் வேகமாக நகர்ந்து கொண்டிருந்தது. அவனது குருவாகிய தந்தைக்கு அவன் இறுதிக் கிரியைகளைச் செய்யவேண்டுமல்லவா....!!

(வலம்புரி - சங்குநாதம் 21.06.2015)



# கனவுடனே

அர்ச்சுணனின் நாகாசுரத்திலிருந்து பாயும் சரங்களாய் உடலை பொசுக்கிக் கொண்டிருந்தது கதிரவனின் வெம்மை. மல்லாக்காக கிடந்த ஆறுமுகம் மெல்ல எழுந்து கொண்டார். "கனகு.........கனகு....." கனகுவிடமிருந்து பதிலெதுவும் இல்லை. பாயருகில் கிடந்த துவாய்த் துண்டை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொள்கிறார். இதுவரை மின்குமிழாய் ஒளிர்ந்துகொண்டிருந்த வியர்வைத்துளிகள் அத்தனையும் துவாயில் ஒட்டிக்கொண்டன. மீண்டும் ஒரு தடவை குரல் கொடுக்கிறார். "கனகு.. இஞ்சரப்பா கனகு..எங்கையப்பா நிக்கிறாய்....?"

நான் இந்த மனுசியைக் கூப்பிடுற சத்தத்துக்கு பக்கத்து வீட்டுக்காறர் தான் 'ஓய்' எண்ணப்போகுதுகள். தனக்குள்ளே புறுபுறுத்துக் கொண்டார் ஆறுமுகம். "ஓமப்பா வாறன்......." கனகுவின் குரல் கேட்டது. "என்னப்பா என்னத்துக்கு இப்ப ஓலம் வைக்கிறியள்?" சினந்து கொண்டாள் கனகு.

அனலாய் எரிந்து கொண்டிருக்கும் வெயிலையும் ஊடறுத்து வந்த கனகுவின் சினப்பு, ஆறுமுகத்திற்கு

கோபத்தையூட்டினாலும் சமாளித்துக் கொண்டார். கனகுவின் மீது அவருக்கு அளவு கடந்த பாசமிருந்தது. "இந்த மனுசன் இப்பிடித்தான். அங்கால இஞ்சால அரக்கவிடாது. ஏதோ காதல் ஜோடிகள்தானே..." மௌனமாகவே இருந்தார் ஆறுமுகம். "எங்கயப்பா போய்வாறாய் இப்ப?" சின்னக் கேள்வி "ஒருடமுமில்லை. இவ பாக்கியம் மாமி வீட்டில் இருந்தனான். அவவோட கதைச்சுக் கொண்டிருந்ததில் நீங்கள் கூப்பிட்டது கேக்கல்லையப்பா." நான் அப்பவும் நினைச்சனான், பாக்கியம் மாமியோடதான் அரசியல் வைக்கப் போட்டாயென்டு. ம்ம்...ம்" "இல்லையப்பா இந்தத் தறப்பாள் கொட்டிலுக்குள்ள எவ்வளவுக் கெண்டுதான் இருக்கிறது. அதில கொஞ்சம் மரங்களாவது நிக்குது அதுதான்." "ஏதோ சமாளிச்சுப்போடுவாய். அமைதியானார் ஆறுமுகம்.

சில சமயங்களில் ஆறுமுகம் கண்டிப்புடன் நடந்து கொண்டாலும் அதிலும் ஒருவித அன்பும், தன்மீதான கரிசனையும் இருப்பதை எப்போதும் உணர்ந்திருந்தாள் கனகு. "அதுசரி சமையலறையில சாப்பாடு குடுக்க வெளிக்கிட்டாச்சோ....?"

பசியின் ஆற்றாமையினால் வினவினார் ஆறுமுகம். "இல்லையப்பா மரக்கறி வர பிந்திப் போச்சுதாம். கொஞ்சம் செல்லுமாம்" என்றாள் கனகு.

"ம்.என்ன செய்யிறது. அவங்கள் தரேக்கதானே சாப்பாடு. அதுவரைக்கும் வயிறு குடையக் குடைய இருக்க வேண்டியதுதான். சொந்த இடத்தில், சொந்தவீட்டில் நினைத்த நேரத்தில் உண்டு குடித்து சந்தோசமாய் இருந்தவர்களுக்கு, இவற்றையெல்லாம் சமாளிப்பது என்பது பாகற்காயாக கசத்தது. தறப்பாள் கொட்டிலின் மூலையில் கிடக்கும் மகளை நினைத்தால்....அது ஒரு புறம் தாங்க முடியாத வேதனை.

நாட்கள் எத்தனைதான் ஓடி மறைந்தாலும் அவர்கள் வாழ்வில் சூழ்ந்து கொண்ட இருள் மட்டும் ஏனோ விலகியிருக்கவில்லை. அது சாதாரண இருளில்லை..... வன்னி மக்கள் எல்லோரையும் சூழ்ந்த பேரிருள் அல்லவா....?

"எங்கட இடத்திற்கு எங்களை விட்டால் ஏன் இந்தப்பாடு? இவையளை சாப்பாடு, தண்ணி நாங்கள் கேட்கவாபோறம்?" தன் மனதிலிருந்த எண்ணக் குமுறலை கொஞ்சம் கொஞ்சமாக கட்டவிழ்த்துவிட்டார் ஆறுமுகம்.

"என்னப்பா செய்யிறது ஏதோ உயிரைப் பாதுகாக்கவெண்டு இஞ்ச வந்தா, இங்க அணுவணுவாய் உயிரைக் குடிக்கிறாங்கள். இஞ்சரப்பா' தண்ணிவாளியை வரிசையில அடுக்கீற்றுவாறன் இருங்கோ" கூடாரத்தின் அருகில் கிடந்த வாளிகள் இரண்டையும் எடுத்துக்கொண்டு குழாய்க்கிணறு நோக்கி நடந்தாள் கனகு. மதியம் வாளி வைத்தால் கடைசி மறுநாள் மதியமாவது கொஞ்சம் தண்ணீர் எடுக்கலாம்.

கிணத்தில தண்ணியள்ளி என்ன சௌந்தர்யமாய் குளிச்சம். இது இப்ப பத்து லீற்றர் தண்ணியில தொட்டுத் துடைக்க வேண்டியதாய்ப் போய்ச்சு.. எல்லாம் எங்கட விதி ......ம். அவளது உள்ளக் குமுறல்கள் அவளை சுனாமி அலையாய்ச் சுருட்டிப் போட்டன..

* * *

வன்னி நிலப்பரப்பை போர் ஆட்கொண்டதாலே மழைக்கு முளைக்கும் காளான்களாய் உதயமான முகாம்களில் ஒன்றுதான் "மெனிக்பாம்" முகாம். அங்கு தான் ஆறுமுகம் குடும்பமும் இருந்தனர்.

காடுகளாய்க் கிடந்த நிலங்களை புல்டோசர் மூலமாக இடித்துத் தரைமட்டமாக்கி, அதில் அடுக்கடுக்காய் முளைத்துப் போன பல்லாயிரம் குடிசைகள்.அவையாவும் சனக்கூட்டத்தால் நிரம்பி வழிந்து போயிருந்தன. சில கூடாரங்களுக்கு அருகில் சின்னச் சின்ன மரங்கள் நின்றிருந்தன.ஆனாலும் அனேக வீடுகளுக்கு அருகில் நெருஞ்சி முட்செடிகூட இல்லை.

ஆறுமுகத்திற்கு இரண்டு பிள்ளைகள். போரின் பிடியில் மூத்தவன் மறைந்து போக..... இளையவளுடன் முகாம் வந்து சேர்ந்தார்கள். ஆறுமுகமும் கனகுவும். மகள் சாதனா. அவளிற்கும் வயது இருபத்தைந்து ஆகிவிட்டது. போரின் வடுவை அவளும் தாங்கியிருந்தாள்.

கால் ஒன்று இயங்கமறுத்து விட்டது. வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த சாதனா போனவாரம் தான் முகாம் வந்து சேர்ந்தாள். எல்லா வேலையும் கனகுதான். என்ன செய்வது அவளும் வருத்தக்காரியாகி விட்டாள். யாரை யார் நோக?

"ம். சாப்பாடு குடுபடுது போல பிந்தினால் அடிச்சோறுதான் கிடைக்கும்." சமையலறை நோக்கி விரைந்தாள் கனகு. தண்ணீர் எடுக்க

வரிசை.......சாப்பாடு எடுக்க வரிசை.... சாமான் ஏதும் கொடுத்தால் அதற்கும் வரிசைதான்.. மலசலகூடம் போகக்கூட வரிசைதான். வரிசையில் நின்று நின்றே வலியேறிப் போய்விட்ட கால்களுக்கு இன்னும்தான் விடுதலையில்லை.

வீட்டிலிருக்கையில் ஞாயிற்றுக்கிழமைகளில் அநேகமாக கனகு கூழ் வைப்பாள். பனம் பனுவலால் கூழ் அருந்தும் போது அப்பப்பா!! என்னவொரு சுகம்! தடிமன் காய்ச்சல் பறந்திடும். அவ்வளவுக்கு உறைப்பு கூழைக்குடிச்சிட்டு மாமர நிழலிலே சோபாக் கட்டிலில் ஒரு குட்டித்தூக்கம் போட்டால்....அதைவிட ஆறுமுகத்திற்கு வேறொன்றும் வேண்டாம்.

காலையிலே எழுந்தவுடன் ஆறுமுகத்திற்கு தேநீர் கொடுப்பதுதான். கனகுவின் முதல்வேலையாய் இருக்கும். அதன் பிறகு தான் அடுத்தவேலை.சாதனாவும் வேளையாக எழுந்து கனகுவுடன் கூடமாட வேலை செய்வாள்.

ஆனால் இன்று....எல்லாம் தலைகீழாய்......எடுத்து வந்த உணவை மூன்று கோப்பைகளில் போட்டு மூவரும் உண்டனர்.அம்மா எங்களை இவங்கள் எப்ப எங்கட ஊருக்கு விடப்போறாங்கள்? எத்தனை நாளைக்குத்தான் இந்த பருப்பையும் லீக்சையும் சாப்பிடுறது.? சாதனாவுக்குள் அடங்கியிருக்கும் குமுறல்கள் இப்படித்தான் இடையிடையே வெளிப்படுவதுண்டு.

"யார்தான் பிள்ளை இதுகளைக் கேக்கிறது? விடுறநேரம் கண்டு கொள்ளவேண்டியதுதான். "மகளைச் சற்று ஆறுதல் படுத்தினாள் கனகு. ஒரு நாள், முகாமிலிருந்த பல இளைஞர் யுவதிகள் கைது செய்யப்பட்டனர். சந்தேகத்தின் பேரில் கைதாம்! இவர்களில் சாதனாவும் ஒருத்தி விசாரித்துப் போட்டு விடுவம் என்று கொண்டுசெல்லப்பட்டவர்கள் ஒன்றரை மாதமாகியும் விடப்படவில்லை.

மகளை யோசித்து யோசித்து கனகுவும் ஆறுமுகமும் இன்னும் வருத்தக்காரராகி விட்டனர். நாட்கள் ஒடி மறைந்தன. "இஞ்சரப்பா நாளையான் பேப்பரில பிடிச்சுக்கொண்டு போன பிள்ளையளிட பெயர் விபரம் வருகுதாம். எந்தெந்த இராணுவமுகாமில் பிள்ளையள் இருக்கினம் எண்டு அதில போடுப்படுமாம்."

"ஆரப்பா உனக்குச் சொன்னது? ஆவலுடன் கேட்டார் ஆறுமுகம் "பரஞ்சோதி அண்ணர் தான் சொன்னவர்." என்றாள் கனகு. ஆறுமுகத்திற்கு போன உயிர் மீண்டது போலிருந்தது.

"பொத்திப் பொத்தி வளர்த்தன், ஒரேயொரு பொம்பிளைப் பிள்ளையெண்டு. அதற்கு ஏதுமொண்டெண்டால்..பிறகேன் நான்........? கடவுளே என்ர பிள்ளைக்கு ஒண்டுமே நடக்கக் கூடாது...." "நீங்கள் ஒன்றும் யோசிக்காதையுங்கோ அவளுக்கொண்டும் நடக்காது."

ஆறுமுகத்தாரின் கண்கள் குளமாகின. உதடுகள் ஏதேதோ பேச உன்னியது. ஆனாலும் வார்த்தைகள் வெளிவர மறுத்தன. கனகுவுக்கும் கண்கள் குளமாகிக் கொண்டது. பிள்ளைகளுக்கு நடந்த சம்பவங்கள் கண்ணில் நிழலாட என்றும் போல் அமைதியற்ற நாளாக அன்றைய நாளும் கழிந்து போனது.

* * *

மறுநாள் அதிகாலையிலேயே எழுந்துவிட்ட ஆறுமுகம் பரபரப்புடனிருந்தார். எத்தனை எத்தனை பெற்றோர்கள் ஆவலுடன் இருந்தனர் பத்திரிகையைப் புரட்டுவதற்காக அவர்களில் ஒருவராய் ஆறுமுகம் இருந்தார். ஆறுமுகத்தாரின் கையில் பத்திரிகை கிட்டியது. விபரம் வந்திருந்த பக்கத்தை ஆவலுடன் புரட்டினார்.

நீண்டு விரிந்து கிடந்த அந்தப் பட்டியலில் இருந்த ஒவ்வொரு பெயர்களையும் ஆறுமுகத்தின் கண்கள் வாசித்தன. விரல்களினால் தொட்டுக்கொண்டு தேடினார்.....ஆ.....சா.....என்ற எழுத்துக்களில் தொடங்கும் வரிகளை மிகவும் கவனமாக வாசித்தார். ஆனால் அவரது பிள்ளையின் பெயரான "சாதனா" அதைக் காணவில்லை. உடலில் பதற்றம் குடியேறியது. ஆயினும் இன்னொரு முறை மீண்டும் எல்லாப் பெயர்களையும் வாசித்தார். அங்கே கடைசியில் போடப்பட்டுடிருந்தது. ஒரு குறிப்பு. "மேலே குறிப்பிட்ட பெயர்களைத்தவிர வேறு எவரும் எம்மால் கைதுசெய்யப்படவில்லை". "அப்ப என்ர பிள்ளை......?என்ர பிள்ளை......!என் பிள்ளைக்கு என்ன நடந்தது?" நிற்க முடியாமல் கீழே விழுந்தார். கனகுவிற்கு விடயம் காதுக்கு எட்டியது. அவள் கதறியவாறு அவ்விடத்தை நோக்கி ஓடிவந்து கொண்டிருந்தாள்....பிள்ளை மீளவில்லை, ஆனால் அம்புலன்ஸ் வண்டி மட்டும் வேகமாக வந்து நின்றது. அந்த அநாதைகளை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்காக........!

(வலம்புரி - சங்குநாதம் 10.05.2015)



# பெற்ற மனம் பித்து

நேரமாகிவிட்டது. பரபரவென தனது காரியங்களை முடித்துக் கொண்டே அவன் புறப்பட ஆயத்தமானான். "ஜெஸ்மின் மை ஒஃபிஸ் பாக்" ஐ ஒருக்கா எடுத்து வாரும்." " ஓ.கே நான் பக்கெண்டு எடுத்து வாறன்."

கார் சாவியை எடுத்து திறந்து காரை இயங்கு நிலைக்கு கொண்டு வந்தான். "இஞ்சரப்பா ஆசையா வெல்லா நான் நெய்த்தோசை சுட்டனான். சாப்பிட்டுப்போங்களன்". "நேரம் போட்டுதப்பா நான் வாறன் போட்டு" என்று கூறியபடியே காரை செலுத்தத் தொடங்கினான் மனோஜ். திவலை திவலையாகக் கொட்டிக் கொண்டிருந்த பனிப்படலத்தைக் கிழித்தவாறு கார் புறப்படலாயிற்று. காலை நேரமாகையினால் விலக முடியாதளவு வாகன நெரிசலினால் வீதி தவித்தபடி யிருந்தது.

பனிப்போர்வையினால் சில சில இடங்கள் மூடப்பட்டுப் போயிருந்தன. அவற்றை அகற்றும் பணிகளில் கனரக வாகனங்கள் ஈடுபட்டுக்கொண்டிருந்தன.

காரையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்த ஜெஸ்மி னின் பார்வைகள் திசை மாறின.

● மல்லாவிக் கஜன்

வளைவொன்றில் திரும்பிய கார் அவள் கண்களிருந்து விலகிப் போனது. வெளிக் கதவினை மூடிவிட்டு அறைக்குள் நுழைந்து கதவினை தாழிட்டுக்கொண்டாள்.

* * *

வன்னிமண்ணை போர் ஆக்கிரமித்த காலமது. அல்லோல கல்லோலமான பொழுதுகள். இந்த நிமிடம் உள்ளவரை அடுத்த நிமிடம் உயிரோடு காணமுடியாத கணங்கள். பசி, பட்டினி, எறிகணை ஓசைகள், அவலக்குரல்கள் இப்படியாய் மாறிப்போன காலத்தில்தான் மனோவின் குடும்பத்தார் மனோவை வெளிநாடு அனுப்பி வைக்க முடிவுசெய்தார்கள்.

உயிருக்கு உத்தரவாதமற்ற பொழுதுகளில் ஒரேயொரு மகனான மனோவையாவது காப்பாற்றிவிட வேண்டுமென்பதில் குறியாயிருந்தார்கள். "தம்பி மனோ, இஞ்ச இருக்க சரிவராது. எங்களுக்குத்தான் வயது போட்டுது. செத்தாலும் பறவாயில்லை. வாழுற வயசில நீயாவது போய் சந்தோசமாய் இருமோன. தங்கைச்சியையும் ஏதோ ஒரு வழி பாப்பம்."

என தனது எண்ணங்களை சில்லறையாய் சிதறவிட்டார் தந்தை சிவலிங்கம். "என்னப்பா சொல்லுறியள்....? வெளிநாடோ? நான் போகமாட்டன். போகமாட்டன். மனோவின் உறுதியான முடிவு சிவலிங்கத்தாரை சிந்தனையில் ஆழ்த்தியது". "எட தம்பி, எங்களுக்கு நீதான் ஒரேயொரு ஆம்பிளைப்பிள்ளை. எங்களோட வைச்சிருக்க விருப்பமில்லாமல் நாங்கள் உன்னை அனுப்பேல்ல. காலம் இப்படியாய் போய்ச்சு. ம்...ம். என்ன மேனை செய்யிறது". இழுத்தாள் தாய் பார்வதி

"அம்மா நான் போகேல்லை. உங்களையெல்லாம் விட்டிட்டு.... நான். ஐயோ! நான் செத்தாலும் அங்க போமாட்டன். தயவு செய்து என்னை அனுப்பாதேங்கோ".

முகிற்கூட்டத்தோடு பூமியில் விழுந்த சந்திரனாய் அவன் முகம் வாடிப்போனது. "எடமேனை, எங்கட மண்ணை விட்டிட்டு என்னாலையும் கூட போகேலாதுதான் . உன்ர நிலைப்பாடு எனக்கும் விளங்குது. ஆனாலும் காலம் அப்படியாய் போட்டுது. என்னை மோனை செய்யிறது.?"

மனோவின் எதிர்மறையான முடிவை படிப்படியாக மாற்றமுனைந்தார்

சிவலிங்கம். ஆனாலும் மனோவிற்கு எள்ளளவும் விருப்பமில்லை. பெற்றோரது சொல் தட்டாது வாழ்ந்து பழக்கமுடைய வனாதலால் தனது முடிவை படிப்படியாக மாற்ற முனைந்தான். 'கூ.....டும்.......டும்டும்ம்ம.."

எறிகணை மழைக்குள்ளும் நனைந்தபடி வன்னிக் குருவியொன்று வெளிநாடு நோக்கி மெது மெதுவாய்ச் சிறகடிக்கலானது.

* * *

லண்டன் வந்து மாதம் கடந்து போனது. மாமனார் வீட்டிலேயே மனோ தங்கியிருந்தான்.

வெளிநாடு என்பது அவனுக்கு நரகமாகவே தென்பட்டது. உயிரற்ற வெறும் உடலாய் கடந்து சென்ற நாட்களோடு தன் வாழ்நாட்களையும் கரைத்துக்கொண்டான்.வன்னியில் நடக்கும் அவலங்களில் ஒருதுளி மாத்திரமே மனோ அனுபவித்திருந்தான். தற்போது நடக்கும் நிலைமைகளை எண்ணும் போது கண்கள் பனித்தது. இணையம் மூலமாகவே ஒரு சில விடயங்களை அறியமுடிந்தது.

அன்றொரு நாள் இணையவலையில் மூழ்கிப்போயிருந்த மனோவின் கண்கள் அப்படியே நிலைக்குத்தி நின்றன. பிஞ்சுப் பாலகனொன்று குண்டுச் சிதறல் பட்டு இரத்தாற்றில் மூழ்கிக் கிடந்தான். அருகே கதறியழும் தாய்.

கண்கள் குளமாகின. உதடுகள் ஏதேதோ உச்சரிக்க எண்ணின. ஆனாலும் வார்த்தைகள் வெளிவர மறுத்தன. அப்படியே நாற்காலியில் சாய்ந்து கொண்டான். அந்தப்புகைப்படம், பழைய நினைவுக்குள் அவனை மூழ்கடித்தது. "மச்சான், என்ன நித்திரையோ..? இந்தாங்கோ.ரீ ஐ குடிச்சிட்டு இருங்கோ" அவள் வேறுயாருமல்ல, மச்சாள் ஜெஸ்மின் தான். கணீரென ஒலித்த அந்தக் குரல் அவனைத் தட்டியெழுப்புவதாய் இருந்தது. ஏன் இவள் இண்டைக்கு ரீ கொண்டு...? அவனுக்கு மனதில் ஒரு வித சலனம் குடிகொண்டது. "ஓ கே தங்கியூ" ரீ ஐ வேண்டி மேசையில் வைத்துவிட்டு சிந்தனையிலாழ்ந்தான்.'ஓகே..'என்று விட்டு சட்டென அவள் அவ்விடம் விட்டு நகர்ந்தாள்.

அத்தைதான் வழமையாக ரீ கொண்டு வந்து கொடுப்பா. ஆனால் வழமைக்கு மாறாக இன்று.. நாட்கள் வேகமாக நகர்ந்தன. ஜெஸ்மின், இப்போது அடிக்கடி மனோவுடனிருந்து உரையாடுவதை வழக்கமாக்கிக் கொண்டாள். சாப்பாடு கொடுப்பது, தேநீர் கொடுப்பது, இன்னும் பல்வேறு வேலைகளை அவளே செய்து கொடுத்தாள்.

இவை யாவும் மனோவிற்கு சந்தேகத்தையும், சங்கடத்தையும் ஏற்படுத்துவதாய் அமைந்தது. பால் போன்ற வெண்மை; கட்டையான சுருள் முடி; வெளிநாடுகளில் வாழ்வோருக்கு அநேகமாக முடி செம்படையாகவே இருக்கும். ஆனாலும், வன்னியில் பிறந்து ஐந்து மாதத்தில் லண்டன் வந்துவிட்ட அவளுக்கு கருமையான கூந்தல். மாதுளம்பழம் போல சிவந்த உதடுகள்; அவை எந்நேரமும் புன்னகையை உதிர்ந்தபடியே இருக்கும். அடுக்கான பல் வரிசை; அளவான உடற்கட்டு; மெல்லிய வாழைத்தண்டு இடை; அவை அத்தனையும் ஒருங்கே சேர்ந்து அழகு தேவதையாய் மிளிர்ந்தாள்.மாமாவிற்கு இவள் தான் ஒரேயொரு பிள்ளை. அவளில் நல்ல வாரப்பாடு. அது போலவே மனோ மீதும் அவருக்கு அளவு கடந்த அன்பு இருந்தது.

"மனோ, சின்னனில ஜெஸ்மின் இங்க வந்ததால் உங்களை அவளுக்குத் தெரியாது. போட்டோவில் தான் உங்களை காட்டினனான். பிறகு தான் அவளுக்கு உங்களை மச்சான் என்று தெரியும். அதுக்குப் பிறகு எந்தநேரமும் போட்டோவோட தான் இருப்பாள். இவர் தான் உங்கட கஸ்பன்ட் என்று சொன்னால், விழுந்து விழுந்து சிரிப்பாள். போட்டோவை எந்த நேரமும் எடுத்து களவாய் கொஞ்சுவாள். ஏன், இரவில படுக்கேக்கையும் தலையணியுக்க வைத்துக் கொண்டு தான் படுப்பாள். "மாமா பேசி முடித்து விட்டு சுவரில் மாட்டியிருந்த அந்தப் போட்டோவைப் பார்த்தார்.

"இதுதான் அந்தப் போட்டோ" அவரது சுட்டுவிரல் அந்தப்போட்டோவை இனங்காட்டியது.மௌனமாயிருந்த மனோ, தலையை அசைத்துக் கொண்டான். லண்டன் வந்த ஒரிரு நாட்களிலேயே மாமானார் கூறி வந்த கதைகள், அவனை சங்கடப்படுத்தியது. இருவருக்கும் இடையில் காதல் மேகமொன்று மெல்ல மெல்ல கருவானது.

"மச்சான், மச்சான்" என்று அவள் அழைக்கும் ஒவ்வொரு வார்த்தையும் மனோவை தனது குடும்பத்தையே மறக்கச் செய்தது.

"மனோ, மகள் ஜெஸ்மினை உங்களுக்கு செய்து வைக்கலாமெண்டு நினைக்கிறன். அவளுக்கு நல்ல விருப்பம். அத்தையும் சம்மதம் அக்காவை கேக்கோணும் என்றில்லை. உங்களுக்கு பிடிச்சால்" என இழுத்தார் மாமா. ஜெஸ்மின் கதவோரம் ஒட்டியபடி நின்றுகொண்டிருந்தாள். மனோவின் கனவுகள் நனவாகும் தருணம்;

உள்ளத்தில் கொள்ளை மகிழ்ச்சி; தனது காதலை படிப்படியாக வெளிப்படுத்தத் தொடங்கினான்.

மாமானார் சாய்மனைக் கதிரையை விட்டகன்றார். மனோவும் தனது அறையை நோக்கி விரைந்தான்.

* * *

திருமணமாகி இரண்டு மாதங்கள் ஓடி மறைந்தன. இணையத்தளத்தில் வன்னி நிலைமைகளை பார்த்து கண்ணீர் வடித்த மனோ தற்போது அவற்றையெல்லாம் மறந்து, நண்பர்களுடன் இணைந்து பேஸ்புக்கில் அரட்டையடித்தான்.மாமனார் மனோவை கம்பனியொன்றில் சேர்த்து விட்டார். கை நிறையக் காசு. ஜெஸ்மினை மகாராணியாக வைத்திருந்தான்.

வன்னியில் தனது அம்மா, அப்பா, தங்கை, மற்றும் உறவுகள் படும் வேதனைகளை மறந்தவனாய், தங்கையின் கையில் கிடந்த ஒரு ஜோடி காப்பினையும், தாயின் தாலிக்கொடியையும் தோணிக்காரனுக்கு கொடுத்து அனுப்பிய தாயை ஒரு கணம் எண்ணிப் பார்க்க மறந்தவனாய்.

* * *

டும் டும் டும்ம்ம்.. "ஐயோ அம்மா!" குண்டுச் சிதறல் பட்டு குற்றுயிராய்க் கிடந்து துடித்தாள் தாய் கனகம்மா. "மனோ, அம்மாவை இனிக் காணமாட்டாய். திரும்பி வரேலாத இடத்துக்கு அம்மா போய்ட்டான். நீயாவது சந்தோசமாய் இரு மேனை". கடைசிக் கணத்திலும் மகனின் சிந்தனையோடே அவளது உயிர் பிரிந்து போனது. அருகிலிருந்து கதறியழுதாள் தங்கை சசி. சிவலிங்கத்தாருக்கும் கால் ஒன்று பறி போய் விட்டது.

கூவி வந்த ரவை ஒன்று சசியின் உயிரையும் பறித்துச் சென்றது. சிவலிங்கத்தார் இப்போது தனிமரமாகிவிட்டார். "தம்பி மனோ, இஞ்ச இருக்க சரி வராது. எங்களுக்குத் தான் வயது போய்ட்டுது. செத்தாலும் பறவாயில்லை. வாழுற வயசில நீயாவது போய் சந்தோசமாய் இரு". மீண்டும் அந்தக்குரல் ஓங்கியொலித்தபடியிருந்தது."இருள்தன் போர்வைக்குள் அவர்களை இழுத்து மூடிக்கொண்டது.

(தமிழ்த்தந்தி 17 நவம்பர் – 2013)



# கானற் கனவுகள்

கிழவனின் கதை... திண்ணை... மூலையில் சரிந்திருந்தவாறு மீசையிலே அரும்பிக் கொண்டிருந்த நரைத்த முடிகளை தேடிக்கண்டறியும் வேட்டையில் தீவிரமாயிருந்தார் மயிலு. ஒரு கையில் உடைந்த கண்ணாடி. மறு கையில் கத்தரிக்கோல் இப்பவும் இருபது வயது இளந்தாரியென்ற நினைப்பு அவருக்கு.

'அம்மா பசிக்குதணை......" தாயின் சேலைத் தலைப்பினைப் பிடித்து விடாப்பிடியாகச் சிணுங்கினான் கடைசி மகன். மறு புறத்தில் இரண்டாவது மகள் சேலைத் தலைப்பை பிடித்திருந்தாள். இவர்களது இத்தகைய செயற்பாடுகளால் தான் அவளது சேலை இப்படியாக சல்லடைபட்டுப் போனதோ.. இவையெதுவும் காதில் விழாததுவாய் தன்பாட்டில் சுருண்டு கிடந்தார் மயிலு.

"இந்த மனுசனுக்கு இன்னும்தான் குடும்பக் கஸ்ரம் விளங்கேல்ல. பிள்ளையளிட கண்ணால வழியிற கண்ணீர் கூட இந்த மனுசனை கொஞ்சம் கூட இரங்க வைக்கேல்லையோ...?" ஒருவித அங்கலாய்ப்பும், கோபாவேசமும், துடிப்பும் நிறைந்த தாய் அவள் பேச்சிருந்தது.

சாராய நெடில் கந்தக வாசமாய் வீசியது. மயிலு குடித்துவிட்டு இரவில் வந்து கும்மாளம் போடுவதும், சரசுவை கண்டபடி துன்பப்படுத்துவதும் வழமையானவை தான் ஒரு பெண் என்னென்ன துன்பங்களை யெல்லாம் அனுபவிக்கக்கூடாதோ அவையனைத்தையும் சரசு அனுபவித்துவிட்டாள். "செல்லங்கள், கொஞ்சத்திற்கு பொறுங்கோ. அம்மா சாப்பாடு சமைத்துத்தாறன். அது வரை நீங்கள் போய் விளையாடுங்கோ...."ஒருவாறு குழந்தைகளை சாமாளித்து மாமர நிழலில் விளையாட அனுப்பிவிட்டு குசினுக்குள் நுழைந்நு கொண்டாள் சரசு.

அப்பச்சட்டியிலுருந்து கருகிய நெடில் வீசியது. அதனோடு இணைந்து சாராய நெடிலும் காற்றோடு காற்றாய் கலந்து போனது. வீட்டில் உலையேற்றி கடைசியாக சோறு சமைத்த நாள் எப்போதெனத் தெரியாது. ஒரு நேரத்து கஞ்சிக்குக்கூட நாதியற்று பசியால் சிணுங்கிடும் பிள்ளைகளுக்கு உணவு கொடுப்பதற்கு சரசு படும்பாடு யார்தான் அறிவார்.?

கட்டிய கணவன் வீட்டுமூலையிலே சாராயப் போத்தலுடன் சுருண்டு கிடக்க, தனியொரு பெண்ணாய் நின்று தலை கனக்கும் அப்பக்கூடை சுமந்து, உலகத்து வீதிபூராய் நாயாய் அலைந்து திரிந்து அப்பம் விற்று கிடைக்கும் சிறுதொகைப் பணத்தில், ஒரு நேரக் கஞ்சியையாவது பிள்ளைகளுக்கு சமைத்துக் கொடுக்கும் சரசுவின் நிலையை வரிகளால் வடிக்க முடியாது.

குடும்பச்சுமை ஒரு புறம், அப்பக்கூடையின் சுமை மறுபுறம், இவ்வாறு நகரும் இவள் வாழ்விற்கு எப்போதுதான் விடிவு? " அம்மா நீ எப்ப சோறு சமைத்துத்தருவாய்?" முற்றத்தில் நின்ற கடைசியின் குரல் அடுப்படியை நிறைத்தது.

"இண்டைக்கு அப்பம் விக்கிற காசிலை எப்படியாவது அரைக்கிலோ அரிசியாவது வாங்கி வந்து அம்மா சோறு சமைத்துத்தாறன். செல்லங்கள் போய் விளையாடுங்கோ."

பக்கத்துவீட்டு பார்வதி மாமியிடம் வாங்கிய காசு கொடுக்கவில்லை. கடைக்கணக்கு கொப்பி முடிந்து விட்டதாய் போனமாதம் மூர்த்தி அண்ணன் கூறியிருந்தது ஞாபகத்திற்கு எட்டியது. பின் வீட்டு பரிமளம் மாமியிடம் போன மாதம் வாங்கிய அரிசியும் கொடுக்கவில்லை.

மூத்தவனுக்கு பள்ளிக்கூட பரீட்சைக் கட்டணம் கொடுக்கவில்லை. இத்தனைக்கும் மத்தியில் பிள்ளைகளுக்கு சோறு சமைத்துக் கொடுப்பது என்பது........

தனிமரமாய் நின்று அவளால் என்ன செய்ய முடியும்? ஊரே கடன்காரராய் போய்விட்ட நிலையில் அவளால் என்ன செய்ய முடியும். ஆனாலும், அவள் தைரியசாலிதான். உழைக்கின்ற பணத்தை வயிறு நிறையக் குடித்துக் கருக்கிவிட்டு நள்ளிரவில் வந்து நாடகமாடிவிட்டு மீண்டும் நாளை காலையில்....

இப்படியாய் கலைந்து போகும் கணவனின் வாழ்க்கையையும் சமாளித்து, தன் மூன்று குழந்தைகளையும் ஒருநேரக் கஞ்சியையாவது கொடுத்து வளர்த்துவரும் சரசு, உண்மையில் தைரியசாலிதான்.நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

"இஞ்சரப்பா நீங்கள் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இப்படி இருக்கப்போறியள்? பிள்ளையள் மூண்டையும் கொஞ்சமாவது யோசித்துப் பாருங்களன். கொஞ்சம் கூட குடும்பப் பொறுப்பில்லாத ஆளாயிருக்கிறியளே."

குமுறி வந்த தனது வேதனைகளை வார்த்தைகளாய் அள்ளிக் கொட்டினாள் சரசு. கண்கள் குளமாகின. சேலைத்தலைப்பினால் துடைத்துக் கொண்டாள்.

"எடி, நான் உழைக்கிறன், நான் குடிக்கிறன், நீ யாரடி கேட்கிறது? நீயாடி குடிக்க காசு தாறாய்...? நீயும் உன்ர பிள்ளையளும் போடி" பொறுப்பில்லாத பதில்களாய்......போதையின் உஸ்ணத்தால் ஏதோதோ உளறித் தள்ளினான் மயிலு.

"என்னப்பா கதைக்கிறியள். நீங்கள் கதைக்கிற கதையா இது? நீங்கள் இப்படிச் சொன்னால் நான் என்ன செய்யிறது.?"அடக்க முடியாமல் கண்ணீர் திவலை திவலையாகச் சொட்டியது. அவளுக்குள்ளிருந்த எரிமலை எட்னாவாக குமுறியது.

சரசு மயிலுவைத் திருமணம் முடித்து ஓரிரு மாதங்கள் தான் நிம்மதியாய் இருந்திருப்பாள். புற்றிலே பால் ஊற்றுவதைப் போல, மெல்ல மெல்ல தனது வாயில் விஷத்தை ஊற்றி தனது சுயரூபத்தை காட்டத் தொடங்கினான் மயிலு. கறையான் கட்டிய புற்றிலே கருநாகம் குடிகொண்டாற் போல அவளது வாழ்க்கை நிலைகுலைந்து போனது.

சரசுவிற்கு இரண்டாவது பிள்ளை பிறந்த நேரத்தில் பிரசவம் பார்க்கக்கூட அவள் பட்ட தவிப்பு.... பின்னர் அவளது துன்பத்தைப் பார்த்து இரங்கிய பக்கத்துவீட்டு கனகம் மாமி பிரசவம் பார்த்ததும். இவையெல்லாம் எப்படி மறைந்து போகும்?

சரசுவின் நிலை எப்போது தான் மாறிப்போகும்? இது கலையாத காவியமோ? அல்லது என்னவோ....?

* * *

ஆகாயம் போர்க்கோலம் பூண்டு நின்றது. மேலே ஆகாயம்; கீழே பூமி; தலையிலே அப்பக்கூடை; வயிற்றிலே ஆறுமாதத்தில் பிள்ளை;

மௌனித்து நின்றாள் சரசு. அப்பக்கூடையை பொலித்தீன் பையினால் மூடியவள், மழையின் குளிர்ச்சியில் தோய்ந்தவாறு வீடு நோக்கி விரைந்தாள்.அப்பக்கூடை தலையேறுகையில் இரண்டாவது மகன் கூறிய வார்த்தையும், அதற்கு தான் கூறிய பதிலும் அவள் கண்முன் நிழலாடியது.

நேரே கடைக்கு விரைந்தவள் அப்பம் விற்ற காசில் அரைக்கிலோ அரிசியை வாங்கி பையில் எடுத்துக் கொண்டு வீடு நோக்கி வேகமாக விரைகிறாள். சின்னக்குடிசை; சுற்றி வர பனம்மட்டை வரிச்சல்; மேலே ஒரு படைக் கிடுகு; பாற்கிளுவைத் தடியால் ஊடு மரம் வைத்து ஒலை வேய்ச்சல்.

மழையோ விடுவதாயில்லை. மழைக்குள்ளும் நனைந்தபடி விரைந்தாள் சரசு. நேரகாலத்தோடு மழை வந்துவிட்டதால் எதிர்பார்த்தளவு வியாபாரம் இன்று கிடைக்கவில்லை. ஆனாலும் பிள்ளைகளின் பல நாள் கனவை நனவாக்க வேண்டும் என்ற நோக்கில் கிடைத்த பணத்தில் அரிசியை வாங்கி விட்டாள். நாளை அப்பம் சுடுவதற்கு தேவையான பொருட்களை வாங்குவதற்கு பணம் இருக்கவில்லை. பளிச்சிடும் மின்னல் கீற்றுகளின் ஊடாக ஒருவாறு வீட்டை நெருங்கிவிட்டாள் சரசு. கொடூரமாய் தாண்டவமாடிய காற்றின் கட்டளைக்கு பணிந்தாற்போல குடிசையின் ஒரு பகுதி தாழ்ந்து தலைகுனிந்து நின்றது. "ஐயோ என்ர பிள்ளையள்?"

குளிரின் கொடுமை தாங்கமுடியாமல் கிடுகிடுத்தவாறு ஒரு மூலையில் ஒதுங்கியவாறு பிள்ளைகள் மூவரும் நின்றிருந்தார்கள். மற்ற

மூலையில் மழை பெய்வது கூட தெரியாததாய் சாராயப்போத்தலுடன் சுருண்டு கிடந்தார் மயிலு. "இறைவா என்ன கொடுமையிது?" அவள் மனம் தடுமாறியது. என்ன, ஏது செய்வதென்று புரியாமல் ஆடாது அசையாது நின்றாள் சரசு. "அம்மா நீ எப்ப சோறு சமைத்துத் தருவாய்?" முற்றத்தில் நின்று கடைசி கூறிய அதே குரல் அவளது காதில் எதிரொலித்தது. நனைந்த ஒரிரு சுள்ளித்தடிகளையும் பொறுக்கிக் கொண்டு அடுப்பங் கரைக்கு விரைந்தாள் சரசு. பானையில் நீர் நன்றாக நிறைந்திருந்தது. ஒரு பிடி அரிசியை பானையில் போட்டுவிட்டு அடுப்பை ஊதத் தொடங்கினாள் சோறு சமைப்பதற்காய்.....

(தமிழ்த்தந்தி 12 ஜனவரி 2014)



# இறுதிக் கடன்

"டாங்.....டாங் .......டாங்........." ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தின் ஆயத்தமணி. நேரம் அதிகாலை 4.00 மணி ஆகிவிட்டதை பறைசாற்றிக் கொண்டிருந்தது. "இஞ்சரப்பா எழும்புங்கோ. 4.00 மணியாகிட்டுது...." என்றவாறு கணவனின் தோள்களை தட்டினாள் ராதிகா.

"ம்....ம்...நான் வேளைக்கே கண் முழிச்சிட்டன். பொறும் எழும்புவம்" என்றவாறு மறுபுறம் சரிந்து கொண்டான் அரவிந். இப்போது லண்டனில் பனிப்பருவம். பனியானது சிறு சிறு கட்டிகளாக வீட்டின் மேல் கொட்டிக்கொண்டிருக்கும். வீதிகள் எங்கும் பனிப்படலம் உறைந்து போய்.... அதிகாலையிலே பாரிய இயந்திரங்களை கொண்டு வீதிகளை நிறைத்துள்ள பனிகளை அகற்றுவார்கள்.

என்றாலும் முற்றாக அகற்றிவிட முடியாது. ஒரு புறம் அகற்ற மறுபுறம் பனிக்கட்டி வீழ்ந்தபடியே இருக்கும். ஏறத்தாள ஆறு மாதங்கள் பெரிய பிரச்சினைதான். ஒன்றுக்கு மேல் ஒன்றாய் குளிருடைகளை அணிந்து வெப்ப வெளியேற்றிகளை

● மல்லாவிக் கஜன்

பயன்படுத்தினாலும் கூட குளிரின் பிடியிலிருந்து தப்பிக்க முடியாது. காலையில் நடைபெறவிருக்கும் ஞானவைரவர் ஆலய இரதோற்சவத்திற்கு செல்வதற்கு ஏற்கனவே முடிவெடுத்திருந்தனர்.

"இஞ்சரப்பா. வாற புதன்கிழமை ஞானவைரவர் தேர். இரண்டு நாளைக்கு லீவு எழுதிக்குடுத்திடுங்க. கட்டாயம் போகவேணும்." என்று ஒரு வாரத்திற்கு முன்னதாகவே ராதிகா அரவிந்தனுக்கு நினைவூட்டியிருந்தாள்.

* * *

நேற்று மத்தியானம் அவன் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது திடீரென ஒரு தொலைபேசி அழைப்பு. வேலைப்பளு காரணமாக உடனடியாக அந்த அழைப்பை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மீண்டும் தொடர்ச்சியாக வெவ்வேறு இலக்கங்களிலிருந்து அவனுக்கு அழைப்பு. "ஹலோ..... ஹலோ..... யாரு?

சின்னக்கேள்விகள்"எப்ப நடந்தது.?" எதிரிலிருந்து வந்த அழைப்புக்குரல், கூறப்பட்ட செய்தி அனைத்துமே அவனைத் தூக்கிவாரிப் போட்டது.

இதுவரை நடந்தவை; இப்போது நடப்பவை; இனி நடக்கப் போறவை என ஒவ்வொரு விடயங்களைப் பற்றியும் தனித்தனியாக சிந்திக்க முனைந்தாலும் அவனுக்கு மனம் இடம் கொடுக்கவில்லை தொடர்ச்சியாக அவனுக்கு வேலையில் ஈடுபட முடியவில்லை.

அரை நேரத்துடன் லீவு எடுத்துக்கொண்டு வீடு செல்ல நினைத்தாலும் அவ்வாறு செய்வது மனைவிக்கு சந்தேகத்தை ஏற்படுத்தலாம் என்பதால் அதனையும் கைவிட்டான். உயிர் அற்றுப்போன வெறும்கூடாய் சுழல் கதிரையில் இருந்த அவன் எண்ணங்கள், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளாக சீறிப் பாய்ந்தன.

மறு நாள் லீவு எடுப்பதற்காக கொண்டு வந்த லீவுக் கடிதம், காலையில் திருவிழா செல்வதற்கான மனைவியின் அழைப்பு, இவை யாவும் அவன் கண் முன் நிழலாடியபடி.....அடிக்கடி கடிகார முட்களை அவன் நோக்கிக் கொண்டிருந்தான். நோய்வாய்ப்பட்டு படுக்கையில் கிடக்கும் நோயாளியாக அதுவும் அமைதியாய்க் கிடந்தது.

கண்கலக்கத்துடன் வெளிவரமறுத்த வார்த்தைகள் ஒவ்வொன்றையும் வலுக்கட்டாயமாக கோர்த்தெடுத்து கண்ணீர் மல்கிய தங்கையின்

அந்தக்குரல், அரவிந்தனின் செவிப்பறையில் தொடர்ந்தும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. மாலையில் வீட்டுக்கு வந்தவன் சாய்மனையில் கிடந்தவாறு கண்ணயர்ந்துவிட்டான்"என்னப்பா, இண்டைக்கு வேளைக்கு தூங்கிட்டியள்? எழும்புங்கோ....கீற்றறில கொஞ்சம் தண்ணி சுடவையுங்கோ. தம்பிக்கு மேல்கழுவவேணும்."

மகன் "திலக்ஸ்" ஐ இடுப்பில் ஏந்தியவாறு அருகில் வந்து தோள்களில் ராதிகா மெல்லத் தட்டியதும் அரவிந் விழித்துக் கொள்ளலானான். நித்திரையிலிருந்து விழித்தானேயொளிய வாழ்க்கைப் பாதையில் தொடர்ந்தும் அவன் இருளிலேயே மூழ்கிக்கிடக்கலானான்.இரவு அவனால் சாப்பிடக்கூட முடியவில்லை. ஏதோ மனைவிக்கு சந்தேகம் ஏற்படாத வகையில் ஓரிருபிடி உணவை வலுக்கட்டாயமாக வாய்க்குள் திணித்துக் கொண்டான்.

"இஞ்சரப்பா, காலமை நீங்கள் எந்த ஜீன்ஸ் போடப்போறியள்? என்றவாறு நான்கைந்து ஜீன்ஸ்களை கையில் ஏந்திவாறு அவன் முன் ராதிகா நின்று கொண்டிருந்தாள்.அவன் உள்ள நிலையில் அவளது இத்தகைய வார்த்தைகள் அவனை ஏதோ செய்து விடவேண்டும் போலிருந்தது.

"நான் வந்தவுடனே உமக்கு சொல்லவேணுமெண்டிருந்தனான் நாளைக்கு பெரிய மனேஜர் வரமாட்டாராம். அதால அவரிட வேலையும் சேர்த்து நான்தான் பார்க்க வேணும். அது தான் லீவை கான்சல் பண்ணிட்டினம்." தயங்கியவாறே கூறிமுடித்த அரவிந்தை ராதிகாவின் கண்கள் ஏறெடுத்துப்பார்த்தன. அவள் கண்ணிலிருந்து பாய்ந்த ஒவ்வொரு கணைகளும் அவனை ஆட அசையாமல் கட்டிப்போட்டன."
"இஞ்ச பாரும்" உமக்கு நான் போன கிழமையே என்ன சொன்னான். நீர் சொல்லியிருக்கலாம்தானே.? மனேஜர் லீவு எடுக்கிறார் எண்டால் அப்ப நாங்கள் கோவிலுக்குப் போறேல்லையா..?" வார்த்தைகள் கடுகடுத்தன."என்னப்பா செய்யிறது. லெற்றர் குடுத்தனான் கடைசியில லீவு கான்சல் பண்ணியிருக்கு எண்டினம். நான் என்ன செய்யிறது.நீங்கள் திலக்சையும் கூட்டிட்டு போய்வாங்கோவன் என்னப்பா......."

என்று மனைவியை நோக்கி உதிர்ந்த அரவிந்தனின் வார்த்தைகள் அவளை உஸ்ணப்படுத்துவதாய் அமைந்தன போலும்."ஓ நான் போறன். நீர் எங்கேயாச்சும் போம், வருசம் ஒருநாளைக்கு கோயில்குளம் போறதுக்கு லீவு எடுக்கேலாட்டி பிறகென்ன". கடுகடுத்தாள் ராதிகா.

* * *

அரவிந்தன் தான் குடும்பத்தில் மூத்தபிள்ளை. அவனுக்கு பின்னால் இரண்டு தங்கைமார். முதலில் நல்ல வசதியாய் வாழ்ந்த குடும்பம் தந்தை பாரிசவாத நோயினால் படுக்கையாய் போனபின்னர் மெல்ல மெல்ல வறுமையிருள் சூழ்ந்து கொண்டது.பல்கலைக்கழகத்தில் தனது உயர் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருந்த அரவிந்தனுக்கும் ராதிகாவிற்கும் இடையில் காதல் மலர்ந்தது.

ராதிகாவின் குடும்பத்திற்கு அரவிந்தை நல்லாகவே பிடித்திருந்தது. அரவிந்தனின் வீட்டிற்கு தெரியாமலே அவனையும் ராதிகாவையும் வெளிநாட்டிற்கு அனுப்பும் ஏற்பாடு ராதிகாவின் வீட்டாரால் சூட்சுமமாக மேற்கொள்ளப்பட்டது.இதனை ராதிகா வாயிலாக அறிந்த அரவிந் தன் வீட்டாருக்கு அதனைக் கூறவில்லை. தனக்கு கீழ் இரண்டு தங்கைமார் இருக்கும் நிலையில் தான் இப்படியொரு முடிவை வீட்டிற்குத் தெரியப்படுத்தும்போது நிச்சயம் அதை வீட்டார் ஏற்கமாட்டார்கள் என்பதை அவன் அறிந்திருந்தான். திடீரென ஒரு நாள் அவசர அவசரமாக கொழும்பு செல்ல வேண்டியுள்ளது எனக்கூறி புறப்பட்ட அரவிந். மீண்டும் வீடு திரும்பவில்லை.அரவிந் அவள்மீது கொண்ட காதலின் பிரதிபலனாக லண்டனை அடைந்துவிட்டான். சென்ற பிறகுதான் தொலைபேசி வாயிலாக வீட்டாருக்கு தெரியப்படுத்தினான். தனக்கு கலியாண எழுத்து முடிந்து லண்டனில் இருக்கும் விடயத்தை.

தந்தை நோய்வாய்ப்பட்ட நிலையில் தாய் அழகம்மாவின் உழைப்பில் அந்தக் குடும்பத்தின் சீவியம் நடந்து கொண்டிருந்ததை அவன் மறந்துவிட்டான்.

தோட்டக்கூலியாளாக வேலை செய்து நாளொன்றுக்கு ஐந்நூறுரூபா கொண்டுவந்து அழகம்மா குடும்பத்தைக் காப்பாற்றிக்கொண்டிருந்தாள். நித்தம் பனி, மழை, வெயில் பாராமல் உழைத்து உழைத்து அவள் நூலாய்ப்போன விடயத்தை அவன் மனங்கொள்ளவில்லை.

அண்ணா! அண்ணா! என்று குழையும் தங்கைகள், அவனை ஆளாக்கிய தந்தை, தாய் யாவரும் அவனின் மனவோட்டத்திலிருந்து காணாமற் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுவிட்டனர்.

அவன் வெளிநாடு வந்து சேர்ந்து இரண்டரை ஆண்டுகள் கடந்துவிட்டது. ஆசையாய் செல்லம் கொண்டாட மகன் திலக்சை இருவரும் பெற்றெடுத்தனர்.

நெருப்பில் விழுந்த தேள் எடுத்தவனையே கொட்டுவதாய் ராதிகாவின்

காதல் வலையில் வீழ்ந்த அரவிந், இப்போது அவளது நடத்தைகளில் மாற்றங்களை படிப்படியாக உணரத் தொடங்கினான்.

* * *

ராதிகாவின் குடும்பத்தில் ஐந்து பெண்பிள்ளைகள். அதில் மூத்தவள் ராதிகாதான். தந்தையும் சயரோக நோயாளி. அரவிந் மீது அவள் கொண்ட காதல் உண்மையில் அவன்மீது ஏற்பட்டதாக இருக்கவில்லை. அதனை இப்போது படிப்படியாக உணரத்தொடங்கிவிட்டான். "இஞ்சரப்பா உழைக்கிற காசை பாங்கில போடுங்க. அநாவசியமாய் செலவழிக்காதீங்க. சும்மா வீட்டுக்காரருக்கு போன் எடுத்து அலட்ட வேண்டாம். எவ்வளவு காசு போன் பில்லில போகுது."

படிப்படியாக அரவிந்துக்கு தடைக்கட்டளைகள் அவ்வப்போது பிறப்பிக்கப்பட்டன. அவனும் அப்போ புரியாமல் அவள் கூறுவன எல்லாம் மந்திர வார்த்தைகளாய் நம்பி இசைந்து கொண்டான். "இஞ்சையுங்கோ, வாறமாதம் என்ர இரண்டாவது தங்கைச்சிக்கு கலியாணமாம் மாப்பிள்ளை முப்பது லட்சம் சீதனம் கேட்கிறாராம். நாங்களும் எங்களால இயன்றதை அவளுக்கு செய்யத்தானே வேணும்.....?" ராதிகாவின் உதடுகளில் இருந்து வந்த ஒவ்வொரு வார்த்தைகளும் அரவிந்தின் இதயத்தைக் கீறிக் கிழிப்பதாய் இருந்தது.

தனது உறவுகளோடு கதைக்கவிட்டால் இரண்டு தங்கைகளுக்கும் சீதனம் கொடுக்க வேண்டி வந்துவிடும் என்பதால் அவனது குடும்பத்தினருடனே கதைக்கவிடாமல் தடுக்கும் அவள் தன் தங்கைக்கு சீதனம் தேடும் படலத்தில்.......எப்படித்தான் இவளுக்கு மனசு வருகிறதோ.......?

தந்தையின் இறுதிச்சடங்குக்கு வருவதாக எடுத்த எடுப்பில் கூறிவிட்ட அவன், நாட்கள் இரண்டு கடந்தும் அது தொடர்பான எந்த செயற்பாட்டிலும் இறங்கியிருக்கவில்லை. தந்தை இறந்த செய்தியை மனைவிக்கு கூறுவதற்குக்கூட அவனுக்கு பயமாக இருந்தது.

ராதிகா வைரவருக்கு ஆயிரம் வடை கோர்த்து மாலை சார்த்தியோ அல்லது பிள்ளையாருக்கு ஆயிரம் தேங்காய் உடைத்தோ சந்தோசப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அங்கு மரண வீட்டில் "பிள்ளை, அண்ணா என்ன சொல்லுறான்...?" அழுதழுது அடைத்துவிட்ட தொண்டையிலிருந்து சத்தமே வெளிவரவில்லை அழகம்மாவிற்கு.

"வாற ஒழுங்கு செய்யிறானாம்.... மூன்று நாளைக்குள்ள

வந்திடுவானாம்"அவள் காதில் மெதுவாக, இப்பவே மணம்தாவிவிடும் போல கிடக்கு....முடிவாய்ச் சொல்லச் சொல்லுபிள்ளை" "நான் சொன்னனானம்மா அலுவல் பார்க்கிறானாம்...." என்று கூறியவாறே கிடுகுச் செத்தையுடன் சாய்ந்து கொண்டாள் தங்கைகளில் ஒருத்தி.

"உயிரோடு இருக்கேக்க இந்த மனுசன் எத்தனை தடவை கேட்டிருக்கும் தம்பி வருவானோ தம்பி வருவானோ.... ஒருக்கா வரச்சொல்லு.... அப்ப வந்து பார்க்கேல்லை...இப்ப என்னத்திற்கு.?"

காய்ந்து கிடந்த அவள் கன்னங்களில் மீண்டும் தாரை தாரையாக கண்ணீர். அரவிந்துக்கு மீண்டும் தங்கையின் அழைப்பு "என்னண்ணா முடிவைச் சொல்லு......" "வீசா இன்னும் தரேல்ல இவங்கள் இழுத்தடிக்கிறாங்கள்....நான் என்ன செய்ய?"

தான் சொன்னது அனைத்தும் பொய் என்பது அவனுக்குத் தெரிந்தும் உண்மையை வெளியில் சொல்ல முடியவில்லை அவனால். அழைப்பு நிறுத்தப்படுகிறது. அரவிந்தனும் அமைதியானான். தன்னை பாராட்டி சீராட்டி வளர்த்த தந்தையை இறுதி நாட்களில் பராமரிக்கும் பாக்கியம் கிட்டாமலும், இறுதிச்சடங்கில் கூட கலந்துகொள்ள இயலாமலும், பெற்ற கடனை அடைத்துக்கொள்ள முடியாதவனாய் மனைவியின் கட்டுக்குள் அடங்கிக் கிடந்தான் அவன்.

* * *

நான்காவது நாளாகிவிட்டது. அழுது புரண்டு கண்ணில் நீர்வற்றிப் போய்விட்டது. ஆனாலும் எவராலும் கண்கலங்காமல் இருக்கமுடியவில்லை. உடலம் பாடையில் ஏற்றப்படுகிறது. அயலவர் துணையுடன் சுற்றம் சூழ பாடை சுடலைக்கு நகர்ந்து கொண்டிருந்தது. முன்னால் மூத்த மகள் அபர்ணா தந்தையின் இறுதிக்கடனை நிறைவேற்றுவதற்காக......

(வலம்புரி – சங்குநாதம் 19.07.2015)



# ஒரு பிடி மண்

வேகமாக வந்த அந்த வண்டி மிச்சசொச்சமின்றி புளுதியை வாரித்திணித்தபடி கடந்து சென்றது. "சீ....சீ என்ன புளுதியப்பா. இந்த மாதிரிக் கிடங்காய் கிடக்கிற இந்த றோட்டில கூட இவ்வளவு வேகமாய்ப் போறாங்களே." என்று தனக்குள் தானே எண்ணியபடி தோளில் கிடந்த சால்வைத் துண்டால் முகத்தை அழுத்தித் துடைத்துக்கொண்டார் ஆறுமுகம். உச்சிச் சூரியன் உடலை உஸ்ணப்படுத்தயபடி சோர்வையே பரிசாக்கிக் கொண்டிருந்தான். வீதியின் இருமருங்குகளும் ஏறத்தாள பத்துப் பதினைந்தடி வெட்டையாக்கப்பட்டிருந்தது. அப்பால் ஓரளவு பறட்டைப் பற்றைகள் பரவியிருந்தது.. விரல் விட்டு எண்ணக்கூடியளவில் அங்கொன்று இங்கொன்றாக உயர்ந்த மரங்கள் தங்களையும் இனங்காட்டிக் கொண்டன. பசுமை படர்ந்து போயிருந்த தாவரங்கள் இப்போது புளுதி படிந்து போய்.....இந்த றோட்டில வாகனப் போக்குவரத்து கூடப் போல, என்று மனதுக்குள் எண்ணியபடி திரும்பி வீதியை நோக்கவும் கூடாரமிடப்பட்ட

● மல்லாவிக் கஜன்

பச்சை வர்ணம் தீட்டப்பட்ட வண்டியொன்று புளுதியை செமையாக வாரிக் கொட்டியவாறு கடந்து செல்லவும் சரியாகவிருந்தது. "இதென்ன கறுமம் இப்படி புளுதி கொட்டுதே....."

என சினந்தவாறே மீண்டும் துவாய்த்துண்டை நாடினார் ஆறுமுகம். "இஞ்சரப்பா பார்வதி, ஊர் கிடக்கிற கிடையப் பாரும்? எங்கட ஊரிலதான் நிக்கிறமோ எண்டு கூட சந்தேகப்பட வேண்டியிருக்கு இரண்டரை வருசத்திற்குள்ள இப்படி மாறிப்போச்சு" "என்றவாறு தோளில் கிடந்த பொதியை சற்று கீழே இறக்கி வைத்துக்கொண்டார் ஆறுமுகம்.

வயல் பூமி எண்டு எவ்வளவு சந்தோசமாய் அடுத்தவனிட்ட கையேந்தாமல் வாழ்ந்த நாங்கள் கையேந்த வேண்டியதாய்ப் போச்சு. இனியாச்சும் எங்கட மண், எங்கட வீடு வளவு என்று வாழ்வம் எண்டு வாறம்........ இடம் கிடக்கிறத பார்க்கவே எங்கட வீடு வளவுகள் இருக்குமோ இல்லையோ என்று யோசிக்க வேண்டியிருக்கு. என்றவாறு இடையில் குறுக்கிட்டார் சிவம். "ஓமடா சிவம் எங்கட மண்ணைப்போல வருமோ? ஒரு நேரக் கஞ்சியை குடிச்சாலும் மிச்ச ரெண்டு நேரமும் ஊர்க்காற்றைக் குடிச்சு வாழுவமடா" என்று தன் நெஞ்சை நிமிர்த்தி சற்று கடுகடுப்பாய் ஆக்ரோசத்துடன் கூறினார் ஆறுமுகம். "அது மெய்தான். சாப்பாடு வேண்டாம். எங்கட காணி பூமியளுக்கு எங்கள போகவிட்டால் போதும். கொஞ்ச நாளைக்குள்ள பழைய நிலையை நாங்களெல்லோ ஏற்படுத்துறது".

என்று தன் மன உளைச்சலையும் கொட்டித்தீர்த்தார் சிவம். "என்னப்பா இப்படியே இதில கதைச்சிட்டு நிண்டா வீட்டை போறதில்லையே. நடவுங்கோவன்....."என்றவாறு கீழே இறக்கி வைக்கப்பட்டிருந்த பொதிகளை மீண்டும் பாரமாக்கிக் கொண்டு புறப்படத் தொடங்கினார்கள்.

வட்டுகளின்றி முண்டமாய் நிற்கும் பனைகள் ஆங்காங்கே இவர்களைப் பார்த்து கண்சிமிட்டின. தூரத்தே பறந்து செல்லும் குருவிகளின் கூட்டங்கள், வெறிச்சோடிப் போயிருக்கும் வீதிகள், பசுமை மறந்து போய் நிற்கும் புல்வெளிகள், தேனருந்த மலரின்றி தேம்பும் வண்டுகள், வீதியோரத்து பறட்டைப் பற்றைகள் இவையாவும் ஒன்று சேர்ந்து இவர்களை வரவேற்றுக் கொண்டன.

"இஞ்ச பாரும் பார்வதி, உந்த பனையளில எங்கையேனும் ஒண்டுதான் வட்டோட நிக்குது. பனையிட அருமை எங்களுக்கெல்லோ

தெரியும்........?"என்றவாறு பார்வதியின் பக்கம் பார்வையைச் செலுத்தினார் ஆறுமுகம்."ஓமப்பா, நாங்கள் இப்பவும் தெம்பா இருக்கிறதுக்கு பனம்பொருள் சாப்பாடுதான் காரணம். கூழ், கருப்பணி, பனங்காய்ப் பிட்டு இப்படியெண்டு இன்னும் எத்தனை சாப்பாடுகள். இனி?" என்று இழுத்தாள் பார்வதி. "ஓமக்கா" இனி பனம்பழமும் காசுக்குத்தான் வாங்கவேணும் போல......." என்ற சிவத்தை நோக்கிய பார்வதி, "ஓமடா சிவம், அதுதான் நடக்கப் போகுது..." என்றவாறு நடந்து கொண்டிருந்தார்.

* * *

2008 இல் வன்னிப் பகுதியை யுத்தம் ஆக்கிரமித்துக் கொண்டதை அடுத்து கிளிநொச்சி சிவபுரம் கிராமத்திலிருந்து வெளியேறிய குடும்பங்களில் நான்கைந்து குடும்பங்கள் மீள்குடியமர்விற்காக கொண்டு வந்து இறக்கப்பட்டனர்.அவர்களில் ஆறுமுகம், மற்றும் சிவம் குடும்பம், அயல் அயல் வீட்டுக்காரர்களும். பச்சைப்பசேலென பரந்து விரிந்த வயல் வெளிகளும், பனந் தோப்புகளும், வற்றாது பாய்கின்ற அருவிகளும் நிறைந்த அந்தப்பூமியை விட்டு விலகி இற்றைக்கு இரண்டரை ஆண்டு கடந்தாகி விட்டது.

சல்லிக்கற்கள் போடப்பட்டு செப்பனிடப்பட்டிருந்த வீதிகள், இன்று அடியோடு கிழறப்பட்டு கிரவல் மண் கொட்டப்பட்டு கிடந்தது. அவையும் தேய்ந்து போய் குன்றும் குழியுமாகி வருடத்துக்கு மூன்று போகம் நெல் விளைகின்ற பூமி, செல்கள் விதைக்கப்பட்டு சின்னாபின்னமாய் போயிருக்கும் அடையாளச் சுவடுகளாய், ஆங்காங்கே எச்சங்களாய் நிற்கும் கட்டிடங்கள்... அரித்தட்டையும் விட மிக நெருக்கமாக றவைகள் துளைத்த தடையங்களை கட்டிடச் சுவர்கள் தாங்கி நின்றன.

* * *

ஆறுமுகம் ஒரு சிறந்த விவசாயி. போகத்திற்கு பத்து ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை குத்தகைக்கு எடுத்து விதைப்பார். சொந்தமாக நான்கு சோடி உழவுமாடு நின்றது. செல்லமாக மூன்று பிள்ளைகள். பிள்ளைகள் என்றால் அவருக்கு உயிர். சற்று நேரம் கூட பிரிந்திருக்க மாட்டார். அவ்வாறு தான் பார்வதியும்.

இப்படியிருக்கையில் யுத்தத்தின் சாயல் மெல்ல மெல்ல புலப்படத் தொடங்க, நிலைமையை புரிந்த ஆறுமுகம், மூத்தவனை மத்திய கிழக்கு

நாடொன்றுக்கு அனுப்பி வைத்துவிட்டார். இரண்டாவது மகள் சோபனா, கடைசி கபில், மாத்தளன் பகுதியில் யுத்தத்தில் பிரிந்து போய் விட்டார்கள். நிரந்தரமாகவே "இஞ்சார் பார்வதி, வாழ வேண்டியதுகள் பாழாய் போட்டுதுகள் இண்டைக்கோ நாளைக்கோ எண்டு கிடக்கிற எங்களை மட்டும் இந்தக் கடவுள் மிச்சம் விட்டிருக்கு..."

என்று பல தடவைகள் கண் கலங்கியிருப்பார் ஆறுமுகம். "என்னதான் நடந்தாலும் நான் என்ர வீட்டை போகணும்; என்ர மண்ணில வாழ வேணும்; அங்க தான் நான் சாவன்; ஒரு பிடி மண்ணை என்ர பெட்டியில் போட்டு எரிக்க வேணும் என்று தனது தன்மான உணர்வையும், தணியாத தாகத்தையும் அடிக்கடி இயம்பிக் கொள்வார் ஆறுமுகம். "பின்னையென்னப்பா, எங்கட மண்ணில இருக்கிற போல ஒரு சௌந்தர்யம் எங்க இருக்கப் போகுது..."என்று பதிலுக்கு பார்வதியும் கதையை தொடங்கி விடுவாள். ஆனாலும் ,

கூட்டத்திலுள்ள ஒரு யானைக்கு மதம் பிடித்து விட்டால் அக் கூட்டத்திலிருந்து பிரிந்து, எதிர்ப்படும் யாவற்றையும் எவ்வாறு துவம்சம் செய்யுமோ அதுபோல அந்த பூமியை போர் துவம்சம் செய்திருந்தது.

"இஞ்சார் ஆறுமுகண்ணை, இந்த றோட்டாலதான் போக வேணும் போல..."பற்றைகளால் மண்டிக் கிடந்த ஒரு குச்சு வீதி பிரதான வீதியிலிருந்து வளைந்து வளைந்து சென்றது. இருமருங்கும் வீதிக்கு குடைபிடிப்பதாய் பறட்டைப் பற்றைகள் மொய்த்துக் கொண்டிருந்தன. அவர்களது பயணம் தொடர்ந்து கொண்டிருந்தது.

பங்குனி வெயிலின் பரிதவிப்பு, பறட்டைப்பற்றைகளின் ஓரப் பார்வை, பிளந்து போய்க் கிடக்கும் செம்மண்.... இவையெல்லாம் அவர்களை எங்கோ ஓர் புதைகுழி நோக்கி அனுப்பி வைப்பதான ஒரு பிரமை. "இஞ்சபாரப்பா... குஞ்சன் குள வயல் வெட்டை கிடக்கிற கிடை. பார்க்கவே வயித்தைப் பத்தி எரியுது..."என்று அங்கலாய்த்தபடி நின்றார் ஆறுமுகம்.

குஞ்சன் குளத்தின் கீழ் ஏறத்தாழ நூற்று ஐம்பது ஏக்கர் வயற்காணி இருந்தது. குளம் எப்பவும் தண்ணியோட தான் இருக்கும். நல்ல ஆழம். நெல்லும் அந்த மாதிரித்தான் விளையும். ஆறுமுகத்திற்கும் இப்பகுதியில் ஐந்து ஏக்கர் வயல் நிலம் இருந்தது. இடப்பெயர்விற்கு முதல், மூன்றாவது வருசத்து காலபோகம் சம்பா நெல் நான்காயிரம் ரூபாவிற்கு மேல் விற்றது நல்ல பொலியும்.

சோபனாவின் சாமர்த்திய சடங்கிற்கு பட்ட கடனை ஓரளவு அடைக்க முடிந்திருந்தது. இப்போது அந்த நிலம் பெரிய மண் அணைகளால் நிரப்பப்பட்டு... ஏன் கண்ணிகளாலும் கூடத்தான்...வெறிச்சோடிப் போய்க்கிடந்த வயல் வெளிகளின் ஊடாக நிஸங்கமல்லனது ஆயிரங்கால் மண்டபமாக பனங்கூடல் தோப்புக்கள் தலையிழந்து தென்பட்டன. " அடிச்ச செல் எல்லாம் பனையளுக்கு தான் பட்டிருக்கு போல. ஒண்டுக்கும் வட்டு எண்டதையே காணம்.... "என்று தனக்குள் தானே நொந்து கொண்டாள்- பார்வதி.

முகாமிருள் மெல்லச் சூழ்ந்து கொள்ள தறப்பாள் குடிசைக்குள் அடக்கியொடுக்கப்பட்டு. வெயிலில் கருக்கப்பட்ட வாழ்வுக்கு இனியேனும் விடுதலை என்றால்...?மெளனம் தான் மிச்சமாய்!

வீதி திடீரென இரண்டு கிளையாகப் பிரிந்தது. ஒரு கிளை வீதியை மறித்து இரும்புத்தடை போடப்பட்டிருந்தது. அறிந்தோ அறியாமலே அவ்வழியை மாற்றி மற்றைய வீதியால் தொடர்ந்தும் நடந்து கொண்டிருந்தார்கள்.

"என்ன ஆறுமுகண்ணை. றோட்டெல்லாம் சரியா மாறிப் போய்க் கிடக்கு. ஐம்பது வருசத்துக்கு மேல இங்கேயே வாழ்ந்த எங்களுக்கு கூட பாதைய இனாங்காண முடியாம இருக்கு..."

இரண்டரை ஆண்டுகளில் ஊர் மாறியிருந்த கோலம் அனைவரையும் ஆச்சரியத்திலும் ஒரு வித அச்சத்திலும் ஆழ்த்தியது. குச்சு வீதி மெல்ல மெல்ல இப்போது குடிமனைகளை அண்மித்தது.

வீதியின் வலது புறத்தில் முதலாவது பரமரின் வீடு. வெளிநாட்டில இருக்கிற மூத்த பெடியன் காசு அனுப்பி வீடு கட்டி, சண்டை இடம் பெற இரண்டு மாதத்திற்கு முன்தான் குடிபுகுந்தார். மொட்டைமாடியுடன் கூடிய அந்த வீடு இன்று..... நினைத்து பார்க்க முடியவில்லை.

ஆங்காங்கே மண்டையோடுகள் கொழுவப்பட்ட பதாதைகள். மஞ்சள் நிறப்பட்டிகள் முற்றுப்புள்ளிகளாய்..........

வாழ்வளித்த வீடுகள், வரமளித்த கோவில்கள், கல்வி புகட்டிய கல்விக் கூடங்கள் இன்னும் இன்னும்...அழிவின் சாட்சிகளாய் அரைகுறையாகக் கிடந்தன. நல்ல சண்டைதான் நடந்து கிடக்கு போல... என்று தோன்ற வைத்தது.

தன் வீடு அப்படியே இருக்கும். தான் சென்று நிம்மதியாய் மீண்டும்

வாழலாம் என்ற அவாவில் வீறுநடை போட்டு வந்த ஆறுமுகத்தின் பாதச்சுவடுகள், ஏனைய வீடுகளின் நிலை கண்டு விம்மின.

"எட சிவம், அப்ப எங்கட வீடுகளும் இப்படித்தான் கல்லுக்குவியல்தான் மிஞ்சிக் கிடக்கும் போல..."என்று தனது மனவோட்டத்தை சிவமுடன் பகிர்ந்து கொள்ளலானார் ஆறுமுகம். "அதுதானண்ணை, எனக்கும் ஒண்டுமாய் விளங்காம இருக்கு இன்னும் கொஞ்சத்தூரம் தானே. வாங்க போய்ப் பாப்பம்" என்று பெருமூச்செறிந்தார் சிவம்.

மௌனமாய் நின்ற ஆறுமுகத்தின் நடையில் மீண்டும் ஒரு உத்வேகம் உதயமானது.தேவி அக்கா வீடு, காத்தமுத்தர்ட வீடு, சின்னாம்பிட மூத்த பெட்டையின்ர வீடு அடுக்கடுக்காய் எல்லா வீடுகளும் வெறும் கற்குவியலாக எஞ்சிப் போய்....

தெய்வம் வீட்டிலிருந்து பரஞ்சோதியர் வீடு மட்டும் மண்டையோடு அபாயக்குறியீடுகள் நிறைக்கப்பட்டிருந்தன. அங்கே வெடி பொருட்கள் தொடர்பான அபாயம் விடுக்கப்பட்டிருப்பதை உணர்த்தின.

"ஒரு வேளை எங்கட காணியளும் இப்படி..." ஆறுமுகத்தின் எண்ண அலைகள் காற்றோடு கரையாமல் விம்மிப்புடைத்துத் தரித்தன. "அங்கரப்பா, தேவி அண்ணை வீடு இஞ்சாலை சின்னம்மா அக்கா வீடு ஐயையோ! அத்திபாரம் மட்டும் தான்....." மீண்டும் மௌனம் படர்ந்தது.

"வீடு தான் இல்லாட்டிலும் போகட்டும் ஒரு கொட்டிலை சரி போட்டுக் கொண்டு என்ர காணில இருந்து செத்தன் என்டா, அதுவே காணும் உச்சிப் பிள்ளையாரப்பா" என்றவாறு கரங்களை தலைநோக்கி உயர்த்த முற்பட்டாலும் தலையிலிருந்த பொதி தடுத்தது ஆறுமுகத்தை....

* * *

ஆறுமுகம் ஐந்தாம் ஆண்டிற்கு பிறகு படிக்கவில்லை. பள்ளிக்கு போக மறுத்துவிட்டார். தந்தை அடித்துத்தான் பார்த்தார். முடியவில்லை. பள்ளியில் கொண்டு போய் விட்டு விட்டு தம்பர் வீடு வர முன்னர் மகன் வீட்டில் நிற்பான். நான்காம் ஆண்டிலே வேலிக் கம்பி கடந்து வீடு வந்து சேர்ந்த பேர் வழி. "உனக்கு படிப்புச்சரிவராது என்னோட சேர்ந்து வேலைக்கு வா என்று தன் வியாபாரத்தில் மகனையும் இணைத்து விட்டார் தம்பர்.

யாழ்ப்பாணம், வன்னியில் மலிவாகக் கிடைக்கும் பொருட்களை தென்னிலங்கைக்கும், அங்கு மலிவாகக் கிடைக்கும் பொருட்களை இங்கேயுமாக வியாபாரத்தில் ஈடுபட்டனர்.

ஒரு கட்டத்தில் தந்தை வன்னியில் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட காணியைத் திருத்தி கொலணித் திட்டத்தில் வீட்டினையும் பெற்று இங்கேயே தங்கி விட்டார். ஆறுமுகம் தந்தையுடன் நின்றுவிட்டார் அதற்குப் பிறகு விவசாயம், வீட்டில் தோட்டம் என்று சற்று தன்னை பலப்படுத்திக் கொண்டார்.

நாலைந்து சோடி உழவு மாடு; பதினைந்து இருபது ஏக்கர் நெற்காணி; குத்தகைக்கு எடுத்து விதைப்பு; இப்படியாக நல்ல நிலையில் இருந்த போதுதான் தம்பர் ஆறுமுகத்திற்கு வரன் ஒன்றை அமைத்து பார்வதியை திருமணம் செய்து கொடுத்தார். அதன் பின்னர் தம்பரும் நோய்வாய்ப்பட்டு இறந்து போக, ஆறுமுகம் தோட்டம் துரவோடு தன் வேலைகளை மட்டுப்படுத்தி விட்டார்.

வீடு வளவு எல்லாம் எப்பவும் வெள்ளை மண் தரையாய் இருக்க வேணும். வளவு நாலு பக்கமும் பனையோலை அடைப்பு. கொஞ்சம் கறையான் ஏறிட்டு என்றாலும் முழுவதையும் பிரித்து வேலியை அடைத்து விடுவார்.

"பொம்பிளைப் பிள்ளையை வைச்சிருக்கிறானாங்கள், வீடு வாசல் துப்புரவாய் இருக்க வேணும். வேலி நல்ல அறிக்கை தேவை" என்று அடிக்கடி பார்வதிக்கு கூறிவைப்பார்.

இடப்பெயர்விற்கு இரண்டு மாதங்களுக்கு முன்தான் சோபனாவின் 21 வது பிறந்தநாள் செய்தது. வயல் வேலையளுக்கு மிசின்கிசின் வந்தாப்பிறகு மாட்டை யாரும் ஏறெடுத்துப் பார்ப்பதில்லை. ஆனாலும் ஆறுமுகம், குஞ்சன் குள வயலை தன் சிவலை எருத்தனுகளை வைச்சுத்தான் உழுது விதைப்பார். காலம் மாறட்டும்; நாங்களும் மாறுவம்; ஆனால் எங்கட மரபுகள் எல்லாம் மாறிப்போய்விடக் கூடாது. என்று அக்கடி கூறிக் கொள்வார்.

மகளின் பிறந்தநாளை செய்வதற்கு கையில் காசும் கொஞ்சம் மட்டாகவே இருந்தது. நரையன் எருத்தனுகள் இரண்டையும் விற்றுவிட்டு பிறந்தநாள் வைபவத்தை சிறப்பாக செய்து முடித்தார். அப்போது வளவு நிறைந்த சனம்; வீடு வாசலின் நிறைவு; மனதில் ஏற்பட்ட தனிச்சுகம்;

இத்தனையும் இலவம்பஞ்சாய்...... இப்போது நினைத்துப் பார்க்கையில் தன் எண்ண அலைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு,"பார்வதி, அங்கரப்பா ஒரேயொரு வீடு மட்டும் ஓட்டுக் கோப்பிசத்தோட மிஞ்சிக் கிடக்கு.

பனங்கூடலின் கீழ் விரிந்த பற்றைகளைத் தாண்டி நின்ற அந்த வீட்டை ஆறுமுகத்தின் கைககள் தெளிவாகச் சுட்டின. "அண்ணை, அது உங்கட வீடு போலதான் கிடக்கு. பத்தையள் மறைக்குறதால வடிவாத் தெரியுதில்லை..." என்று ஆறுமுகத்தின் தோள்களை தட்டியவாறே சிவம் கூறிமுடித்தார்.

"கிணத்துக்கட்டுக்கரையில் நிண்ட தென்னைமரம் தெரியுற மாதிரி இருக்கடா சிவம் கடவுளே, வீடாச்சும் கிடந்திட்டுது எண்டா.... ஆறுமுகத்தின் உள்ளம் பிரலாபித்துக் கொண்டது. ஓமண்ணை, அங்கால அக்கம்பக்க வீடொண்டும் தெரியுறமாதிரியில்லை. நான் நினைக்கிறன் எல்லாம் தரைமட்டம் போல....

என்றவாறு சிவத்தின் பார்வை அந்த வீடுகளை நோக்கி அம்பாய்ப் பாய்ந்தது. ரெண்டு மூண்டு வீடு கோப்பிச மரத்தோட தெரியுறமாதிரி கிடக்கடா சிவம் பாரொருக்கா "ஓமண்ணை, ஓம் கிடக்குத்தான். எல்லாம் கழட்டிற்றாங்கள் போல" என்றவாறே ஆறுமுகத்தின் பின்னால் சிவமும் நடந்து கொண்டிருந்தார். நேசம் கொண்டு வாழ்ந்த உறவுகளை பிரிந்து இரண்டரை ஆண்டுகளாக கண்ணீர் சிந்திய அந்தப்பூமி இவர்களை அழைப்பதாக வழிகள் விரிந்து சென்றன.

"இந்த வளைவு தாண்ட எங்கட வீடு வந்திடும். ஆனால் பத்தையள் தான் இப்படி மொய்ச்சுப் போய் நிக்குது..." என்றார் ஆறுமுகம். பதிலுக்கு ஆமா போட்டபடி பார்வதியும் சிவமும், சிவத்தின் மனைவியும் நடந்து கொண்டிருந்தார்கள்.

"அண்ணை இங்காலிப்பக்கம் ஒரே மிதிவெடி போல. மஞ்சள்ப்பட்டி கட்டிக்கிடக்கு. இஞ்சால சின்னாம்பியரின்ர வீடும் குறைக் கோப்பிசத்தோட கிடக்கு. ஆனால் வேலி நீளத்துக்கு மஞ்சள் பட்டி கட்டியிருக்கு"

என்ற சிவத்தின் மனம் ஒரு தடவை அந்தக் காணிகளின் பழைய நிலைகளை உந்தியது. காணி நெருங்க நெருங்க ஆறுமுகத்தின் மனதிலும் நடையிலும் ஒரு வித புதுத்தெம்பு குடியேறிக் கொண்டிருந்தது.

* * *

ஆறுமுகத்தால் அவரால் உள்நுழைய முடியவில்லை. பனையோலை அடைப்பு வேலி மிச்சசொச்சமின்றி கறையான்கள்பிடித்துப் போய்..... வீடு ஓரளவு சேதங்களுடன் வேலியோரம் வரிசையாக கொழுவப்பட்டு கிடந்த மண்டையோட்டு பதாதைகள். அவர்களைப் பார்த்து புன்முறுவலித்தன.

இதுவரைக்கும் மனதிலிருந்த ஆசைகள், கற்பனைகள் யாவும் உதிர்ந்து போக, இலையுதிர்கால மரமாக இப்போது ஆறுமுகம்.... "இவ்வளவு நாளாய் என்ர வீட்டை, வளவை, ஊரைப்பார்க்க எவ்வளவு ஆசையளோட வந்தன் இப்ப... இப்ப.. நடு றோட்டில நிக்க வேண்டியதாய் போச்சே. கடவுளே....கடவுளே....!"

ஆறுமுகத்தின் கண்களிலிருந்து சொரிந்த கண்ணீர் முத்துக்கள் வரண்டு போயிருந்த தரையை பசுமையாக்கிக் கொண்டிருந்தன. "அண்ணை, அழாதையண்ணை, இனி என்ன செய்ய? எங்கட வீடும் அத்திபாரம் மட்டும் தான். மிச்சம் கற்குவியலாக கிடக்கு எழும்பண்ணை, எங்கட காணிக்கு போவம். என்றவாறு ஆறுமுகத்தை அணைத்துத் தூக்குவதற்கு முற்பட்டான் சிவம்.

நடு வீதியில் கொண்டு வந்த பொருட்கள் யாவும் சிதறி வீழ்ந்தன. பார்வதியும் மௌனித்துப் போயிருந்தாள். "இல்லடா சிவம் இல்ல" நான் என்ர காணியுக்க போக வேணும்; நான் போயாகியே வேணும்; நான் வரமாட்டன்; நீ போடா போ....! என்று சிவத்தின் பற்றுதலிலிருந்து விடுபட்ட ஆறுமுகம் தன் காணிக்குள் காலடி எடுத்து வைக்கலானார்.

ஆறுமுகத்தை இப்போது எவரும் தடுத்துவிடவில்லை. வாரியெழுந்த புளுதி ஆறுமுகத்தை கட்டிப் போட்டது.... சொந்த மண்ணில் சரிந்து கிடந்த ஆறுமுகத்தின் வலது கரங்களில் பற்றிக் கிடந்த ஒரு பிடி மண் மட்டும் பறி போகாமல்......

(வலம்புரி - சங்குநாதம்)



# தொலையாத கனவுகள்

"அண்ணை, அக்கா எங்க போறீங்கள், யாழ்ப்பாணம் போறாக்கள் ஏறுங்கோ......" கூடி நின்ற பயணிகளை குசலம் விசாரிப்பது போல போகுமிடம் விசாரித்தார் நடத்துனர். யாருமே ஏறிக் கொள்ளவில்லை "மரக் கிளைகளில் தொங்கிக் கொண்டிருக்கும் வௌவால்களாக மிதிபலகை தாண்டியும் ஒற்றைக்கால், ஒற்றைக் கைகளின் பற்றுதலில் பிரயாணிகள் பிரயாணமாகிக் கொண்டிருந்தனர்.

"கால் கை கூட வைக்க இடமில்லாமல் கிடக்கு, அதுக்குள்ள என்னடாவெண்டா பிறகும் ஆக்களை ஏத்தப்பாக்கிறான், எங்களை என்ன சாக்காட்டவே போறாய்...." வண்டிக்குள் நின்ற பாட்டிகள் சிலரது புறுபுறுப்பு..." ஓமணை, இந்த வயசு போன நேரத்தில இப்பிடி போட்டுக் கொல்லுறானே, மூச்சுக்கூட எடுக்க முடியேல்ல....." பக்கத்தில் நின்ற அப்புவும் பதிலுக்கு.

பகல் முழுவதும் மேய்ந்துவிட்டு படுத்திருந்து அசை போடும் மாடுகளைப் போல, வண்டியுள் பிரயாணிகள்...."இதென்ன அநியாயமாய் கிடக்கு. அங்கால இஞ்சால கூட அரக்க முடியாதாம்" என்றவாறு

பக்கத்தில் நின்ற இளம்பெண் ஒருவரை சற்றுத் தள்ளியவாறு வயது போன அம்மா ஒருவர் திரும்பி நின்று கொண்டார்.

"எடி புள்ள, உந்த செருப்புக்காலாலை மிதியாத மோனை..."அருகில் நின்ற நடுத்தர வயதுப் பெண்ணொருத்தியின் குதியுயர்ந்த செருப்பினுள் பாட்டி ஒருத்தியின் வலது கால் மாட்டிக் கொண்டது. ஆடியசைந்து அம்மன் பவனி வருவது போல அந்த மினிபஸ் பயணித்துக் கொண்டிருந்தது. அது.கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிக்கும் தனியாருக்கு சொந்தமான மினிபஸ்.

முந்தியென்றால் மினிபஸ்களையோ அல்லது பெரிய பஸ்களையோ காண முடியாது. மாட்டு வண்டியில் பயணித்த காலம் மருவிப் போக, தட்டி வான் பயணம். தட்டி வானில் பயணிப்பது சும்மா லேசுப்பட்ட விடயமில்லை. அதுவும் ஒரு தனி சுகம் தான். இப்ப? விதம் விதமான பேருந்துகள் . வகை வகையாக பயணங்கள்.

"நாவற்குழியில் இறங்குறவை முன்னுக்கு வாங்கோ..." நடத்துனரின் கூவுதல், இறுதி ஆசனத்தில் இருந்தவர்களுக்கு கேட்டிருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் அவ்வளவிற்கு சன இரைச்சல்.

ஒரு சிலர் இறங்கிக் கொள்ள மீண்டும் வண்டி பயணமானது. ஆனாலும், இறுதி ஆசனத்தில் அமர்ந்திருந்த ஆரபியின் நினைவுகள் மட்டும் இன்னும் இறங்கிக் கொள்வதாயில்லை.......

* * *

இன்று யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா. அதில் கலைத்துறைப் பட்டதாரியான ஆரபி BA பட்டத்தை பெறுவதற்காய் பல்கலைக்கழகம் நோக்கி தன் பெற்றவர், உற்றவர், மற்றவர்கள் என்றல்லாமல்.....

ஆரபிக்கு இப்போது துணையும் ஆறுதலும் அவளது அம்மம்மா தான். இறுதி யுத்தத்தில் தனது உறவுகள் அனைவரையும் ஆரபி பறிகொடுத்து தான் மட்டும் எஞ்சிப் போனாள் .......

"கடவுளே! ஏன் என்னை மட்டும் விட்டாய்? அதுகளோட சேர்த்து என்னையும் எடுத்திருக்கலாமே..." என தனக்குள் தானே எண்ணி எண்ணி அடிக்கடி கண்ணீர் சிந்திக் கொள்வாள்...

பத்தொன்பதாவது வயதில் தன் உறவுகளை பிரிந்துவிட்ட ஆரபியை

அவளது அம்மம்மா ஒருவாறாக யாழ்ப்பாணத்திற்கு அழைத்து தன்னுடன் வைத்து வளர்த்தாள். அவவுக்கு அறுபத்தைந்து வயதாகி விட்டது. அடிக்கடி நோய்கள் ஆக்கிரமித்துக் கொள்ளும். ஆனாலும், எவ்வாறெனினும் தான் ஆரபியை கற்பித்து நல்ல நிலைக்கு உயர்த்திவிட வேண்டும் என்பதில் அவர் குறியாகவிருந்தார்.

அவாவுக்கு ஒரேயொரு மகன்தான். அவரும் திருமணமாகி வெளி நாட்டில். மகனிடமிருந்து கார்த்திகைப் பிறை கண்டாற் போல, எப்போதேனும் சில்லறை உதவிகள் கிடைக்கும். அதனைக் கொண்டு ஆரபியை கற்பித்தார். க.பொ.த உயர்தரப் பரீட்சையில் நற்பெறுபேறு களைப் பெற்ற ஆரபி, யாழ் பல்கலையின் கலைப்பீடத்திற்கு தெரிவாகிக் கொண்டாள்.

"இஞ்ச மோனை நீ ஒண்டுக்கும் யோசியாம படி. நான் எப்பாடு பட்டாவது உன்னைப் படிப்பிச்சு ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வந்து விட்டுத்தான் சாவன்..." என்று ஆரபியை நோக்கி கனகம்மா இவ்வாறு அடிக்கடி கூறிக் கொள்வாள்.

"இல்ல அம்மம்மா, நீங்கள் கஸ்ரப்படாதேங்கோ. உங்களுக்கும் யாரிட உதவி? மாமாவும் கல்யாணம் முடிச்சுட்டார். நாங்கள் அதையிதை எண்டு அவரிட்டயும் கேக்க ஏலாது. பிறகு...?

மௌனம் மட்டும் இழையோடியது. "அவனும் ஏதாச்சும் செய்வான். அதை நான் பாப்பன். நீ படிச்சால் சரி பிள்ளை..."

ஆரபியை கற்பித்து நல்ல நிலைக்கு ஆளாக்க வேண்டும் என்ற கனகம்மாவின் உறுதிப்பாடு அவளது ஒவ்வொரு பேச்சிலும் தொனிக்கும்.

"வேண்டாம் அம்மம்மா! நான் படிக்கேல்ல பார்த்து எங்காவது ஒரு வேலைக்கு போனனென்டா உங்களையும் வடிவாய்ப் பார்ப்பன்..." உறவுகளின் இழப்பு, தொடர்ந்து கற்பதற்கு முடியாத சூழல், இவை யாவற்றையும் கருத்திற் கொண்டு ஆரபியின் முடிவு கனகம்மாவினது முடிவிற்கு எதிர்மறையான தன்மையிலிருந்தது.

"இல்ல பிள்ளை, மருமோன் கண்ட கனவை நிறைவேற்றினால் தான் அவரிட ஆத்மா சாந்தியடையும். கதைய விட்டுட்டு படிக்கிற வேலையைப்பார் பிள்ளை...."

கனகம்மாவின் முடிவில் எந்தவித மாற்றமும் இல்லை. படிப்பு

என்ற உயர்ந்த நோக்கிலிருந்து இம்மியும் அகலவில்லை. தனியார் நிறுவனமொன்று ஆரபியின் குடும்ப நிலையை கருத்திற் கொண்டு தையல் இயந்திரம் ஒன்றை வழங்கியது. தைப்பது என்றால் ஆரபிக்கு நிகர் ஆரபியே.

க.பொ.த சாதாரணதரப் பரீட்சை எழுதிவிட்டு தையல் வகுப்பிற்கு போய் சான்றிதழ் கூட வாங்கியிருக்கிறாள். அவளது திறமைக்குப் பரிசாக தையல் இயந்திரம் ஒன்றை வழங்கியிருந்தனர். இப்போது அது....மாத்தளன் கடற்கரையில் என்ன நிலையிலோ...?

பல்கலைக்கு செல்வதும் கிடைக்கும் நேரங்களில் வீட்டில் தையலில் ஈடுபடுவதுமாய் தனது வாழ்நாட்களை பயனுள்ளதாக மாற்றிக் கொண்டாள் ஆரபி. காலம் உருண்டோடியது.

* * *

ஆரபிக்கு இரண்டு சகோதரர்கள். மூத்தது அண்ணா. இரண்டாவது பிள்ளை இவள். கடைசி தங்கை.அப்பா அம்மாவுடன் அளவான சின்னக் குடும்பம்.ஆரபியின் தந்தை தறுமு ஒரு சிறந்த விவசாயி. சொந்தமாகவுள்ள காணிகளிலும், குத்தகைக்கு எடுத்தும் மூன்று போகங்களும் விவசாயம் செய்வார்.

சந்தோசமாகக் கழிந்த அந்தக் காலங்களை சூறையாடிக் கொண்ட போர், உயிர்களையும் விட்டுவிடவில்லை. எத்தனை குடும்பங்களில் அம்மா, அப்பா, அண்ணா தங்கை என தனித்தனியாக ஒவ்வொருவரையும் விட்டு விட்டு ஏனையவர்களைப் பிரித்து விட்டபடி. வழமைக்கு மாறாக அன்று எறிகணைகளும் ரவைகளும் சற்று அதிகமாகவே இருந்தன. இரவையே பகலாக்கிகொண்டு பளிச்....பளிச் வெளிச்சங்கள். எவரது உயிருக்கும் எவரும், ஏன் தமக்குத்தாம் கூட உத்தரவாதமளிக்க முடியாத நேரம். அமைதியாய் வந்த ஐந்து அங்குல எறிகணையொன்று தறுமுவின் தறப்பாள் கொட்டைகையின் மேல் வீழ்ந்து வெடிக்கிறது.

"ஐயோ ! அம்மா......." அவலக்குரல்கள் வானளாவ, புகையினதும் புளுதியினதும் எழுச்சியானது விழியோரம் கருகிக் கொண்ட கண்ணீர்த் துளிகளை மூடி மறைத்துவிடுகிறது. "என்ர.....அப்பா...அம்மா...... எல்லாரும் என்ன விட்டுட்டு போட்டியளே......ஐயோ! என்ன மட்டும் ஏன் தவிக்க விட்டியள்..." புளுதியில் கிடந்து புரண்டு அழுது கொண்டிருக்க மட்டுமே ஆரபியால் முடிந்தது.

தொடர்ந்தும் வெடிச்சத்தங்கள் ஓய்ந்தபாடில்லை. அதுபோலத்தான் ஆரபியின் கண்ணீர்த்துளிகளும் இன்னும் சிந்துவதை நிறுத்திக் கொள்ளவில்லை.

* * *

*செம்மணி* வெளியைத் தாண்டி வண்டி பயணித்துக்கொண்டிருந்தது. வெளிகள் தாண்டியும் ஆரபியின் மனவெளியை நிறைந்திருந்த சோகங்கள் இன்னும் அவளை விட்டு அகலாமல்...... அவள் அருகில் அம்மம்மா.

தறுமுவிற்கு தனது மகள் படித்து ஒரு ஆசிரியராக வரவேண்டும் என்பதே ஆசை. அவரது ஆசை சற்று வேறுபட்டதுதான். மற்றைய பெற்றோர்களாயின் தனது மகனோ அல்லது மகளோ வைத்தியர் பொறியியலாளர், சட்டவாளர் என பெரிய பெரிய துறைகளில் வரவேண்டுமென ஆசைப்படுவார்கள். ஆனால் தறுமுவின் ஆசை சாதாரணமான ஆசிரியத்துறையே நாடியது.

அவரது அந்த ஆசைக்கு காரணம் இருக்கவே செய்தது. வைத்தியர், பொறியியலாளர், சட்டவாளர் இன்னும் இன்னோரென்ன துறைகளில் வரவேண்டுமாயின் அதற்கேற்ற கல்வி தேவை. அந்தக் கல்வியை புகட்டுபவர் ஒரு ஆசிரியர் தானே.

எந்தத் துறையில் இருப்பவனையும் அந்தத்துறைக்கு உயர்த்திவிடும் ஏணிகளாய் இருப்பவர்கள் ஆசிரியர்கள். ஆகவே அத்தகைய ஒரு நல்லாசிரியராக தன் மகளையும் காணவேண்டும் என்ற அவா இறுதிவரை தறுமுவிற்கு இருந்தது. இன்னும் இருந்துகொண்டேதான் இருக்கிறது. ஆசிரியத் தொழிலுக்கு ஆரபிக்கும் நிறைந்த விருப்பம் இருக்கத்தான் செய்தது."அப்பா நீங்கள் என்ன கனவு கண்டியளோ அதை நிச்சயம் நான் நிறைவேற்றுவன்! சாறிகட்டி, கான்பாக் கொழுவி பாடசாலைக்கு போற அந்த அழகை நீங்கள் காணுற பாக்கியத்தை நிச்சயம் நான் ஏற்படுத்துவன். ஏற்படுத்தியே ஆகுவன்." என உறுதிபட உரைக்கும் ஆரபியின் ஒவ்வொரு வார்த்தைகளும் தறுமுவின் பசுமை போர்த்த நெஞ்சில் வீழ்ந்து நிறைக்கும்.அந்த ஒவ்வொரு விதைகளும் நிச்சயம் விருட்சமாக விழுதெறியும் என்பதில் தறுமுவிற்கு அசையாத நம்பிக்கை இருக்கத்தான் செய்தது.

ஆசிரியத் தொழிலுக்கு தாய்க்கும் நல்ல விருப்பம்.பல அறிவுரைகளை

அவ்வப்போது மகளுக்கு கூறி அவளை தாய் நல்வழிப்படுத்திக் கொள்வாள். சிறுவயது முதலே ஆரபி படிப்பிலும் விளையாட்டிலும் சாதனைக்காரி எந்தப்போட்டி நிகழ்வு நடந்தாலும் அங்கு ஆரபியைக் காணமுடியும். சரியான துணிச்சல்காரி; எதற்கும் தயங்கமாட்டாள்; சோர்வடையாத பேர்வழி; அவளுக்குள் இருந்த நல்ல நண்பிகளும் அவளை நல்வழியில் கொண்டு செல்ல பெரிதும் துணையா யிருந்தார்கள்..... "சரீர்............"

எதிர்பாராத விதமாய் போடப்பட்ட பிறேக் பழைய நினைவுகளை கலைத்து ஆரபியை மீண்டும் நிஜத்துள் தள்ளியது. "பிள்ளை பஸ் ஸ்ராண்ட் வந்திட்டுது. இறங்கி புன்னாலைக்கட்டுவன் பஸ்சில ஏறணுமெல்லே......" என்றவாறு ஆரபியின் தோள்களை தட்டினாள் கனகம்மா. "ஓம் அம்மம்மா, நிப்பாட்டட்டும் இறங்குவம்." வைத்தியசாலையை அடுத்துள்ள வளைவால் நுழைந்து தரிப்பில் தரித்துக்கொண்டது மினிபஸ். சனக்கூட்டம் மெல்ல இறங்கிக் கொள்ள இறுதியாய் கனகம்மாவும் ஆரபியும் இறங்கிக் கொண்டார்கள். மீண்டும் புன்னாலைக்கட்டுவன் பஸ்ஸில் ஏறியமர்ந்து கொண்டனர் இருவரும்.

கடந்து போன நிகழ்வுகளும் நடக்கப்போகும் நிகழ்வுகளும் ஆரபியை புளுவாக குடைந்து கொண்டன.

மற்றப் பிள்ளையள் அம்மா, அப்பா, சகோதரங்கள், உற்றார், உறவினர் என்று எத்தனை பேரோட வந்து நிற்க, ஆரபி மட்டும் அம்மம்மாவுடன் நிற்க வேண்டியநிலை. ஆசைத்தீயை அடிமனதுக்குள் வளர்த்து வளர்த்து அது கொழுந்து விட்டெரியும் நேரத்தில் அதனைக் கண்டு சந்தோசமடைய முடியாமல் ஓய்ந்து போன ஜீவன்கள் ஆரபியின் கண்களில் விம்பங்களாய்.......

* * *

பிரதான வீதியிலிருந்து பல்கலைக்கழக வாயில் மற்றும் உட்புறம் என எல்லா இடங்களும் வண்ணமயமாக அலங்கரிக்கப்பட்டுகிடந்தது. பல்கலை வாயில்தாண்டி ஆரபியும் கனகம்மாவும் காலடி எடுத்து வைத்தபடியிருந்தனர். கடிகார முட்கள் தலைதெறிக்க ஓடியிருக்க வேண்டும்.

நிகழ்வு ஆரம்பமாகும் நேரத்தை கடிகார முட்கள் தெளிவாகக் காட்டிக்கொண்டன. விம்மிப்புடைத்த கண்ணீர்த்திவலைகள் அணைக்கட்டைத்தகர்த்து வெளியேறும் நீராய் கண்ணீர்க் குளத்தை

விட்டு தரையில் பட்டுச்சிதறின.

பட்டமளிப்பு விழாவிற்கு என அணியப்படும் அந்த ஆடை; தலையை அலங்கரிக்கும் ஒரு தொப்பி; கைகளை நிறைக்கும் பட்டம்; கழுத்தில் அசைந்தாடும் பதக்கம்; இவையெல்லாம் பல மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஆனந்தப்பெருக்கை ஏற்படுத்துவனவாய் அமைந்தாலும், ஆரபி போன்ற ஒருசிலருக்கு அவை சோகத்தையே சுமையாக்குவனாய்.........“அம்மம்மா, என்ர அப்பா, அம்மா சகோதரங்கள் இப்ப நிண்டிருந்தால்.....................”

வார்த்தைகள் தொண்டைக்குழியிலிருந்து வெளியேற துடித்தாலும், வர மறுத்தன. “பிள்ளை, அழாதையம்மா. இப்ப ஏன் நீ அழுறாய். அப்பா இப்ப இல்லாட்டியும்கூட அப்பாட ஆசையை நீ நிறைவேற்றிட்டாய் தானே. பிள்ளை, நீ அழக்கூடாது. இந்தக் கோலத்தில் அதுகள் உன்னை நேரில பார்க்கத்தான் கிடைக்காட்டிலும் வானத்தில் இருந்து நிச்சயம் பாப்பினம்.” என்று ஆரபிக்கு ஆறுதலளிக்க முனைந்த கனகம்மாவின் கண்களும் இனியும் பொறுப்பதாயில்லை.

அம்மம்மாவை கட்டியணைத்து கதறியளவேண்டும் போல் ஆரபிக்கு இருந்தது. அவள் கைகள் அம்மம்மாவை இறுகப்பற்றி அணைத்துக் கொண்டன.

கனகம்மாவின் கரங்களும் அவளை ஆரத்தழுவிக்கொண்டன. “சரி அம்மம்மா, அப்பாட ஆசையை நான் நிறைவேற்றிட்டன் அது போதும். அப்பாவின்ர ஆத்மா நிச்சயம் இனியாவது சாந்தியடையும். எல்லாத்திற்கும் நீங்கள்தான் அம்மம்மா காரணம். நான் படிப்பை கைவிட இருந்த நேரத்தில் நீங்கள் விடாப்பிடியாநின்று என்னை படிப்பிச்சியள். அப்பா, அம்மா, சகோதரங்களும் இல்லாமல் தனிமரமாய் நின்ற எனக்கு தண்ணீர் ஊற்றி விருட்சமாக்கிய தாய் நீங்கள் தான்.” அம்மம்மாவின் கரங்களை ஆரபியின் கரங்கள் மேலும் இறுக்கப் பற்றிக் கொண்டது.

இழப்புக்கள், வலிகள் என்பது ஈடுசெய்யமுடியாதவை. ஆரபிக்கும் அப்படித்தான். பீடாதிபதிகளினால் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் மேடையில் வைத்து பட்டமளிப்பு நடைபெற்றுக்கொண்டிருந்தது. பட்டத்தை பெற்ற ஆரபி மேடையை விட்டு மெல்ல இறங்கிக் கொள்கிறாள். தந்தையின் ஆசையை நனவாக்கி விட்ட திருப்தியில், தன் அடுத்த கட்ட பணிக்காக அடியெடுத்து வைக்கும் அவளின் ஒவ்வொரு பாதச்சுவடுகளும் மண்ணில் ஆழமாகப் பதிந்து கொள்கின்றன.

(வலம்புரி - சங்குநாதம்)



# தொலைவு

"பிள்ளை பிள்ளை . " முற்றத்தைப் பெருக்கியவாறு நின்ற தாயின் குரல் அது. "என்னம்மா?" கண்களைக் கசக்கியவாறு முற்றத்திற்கு வந்தாள் அம்பிகா. "விடிஞ்சு இவ்வளவு நேரமாச்சு எவ்வளவு வேலையள் செய்யக்கிடக்கு. தங்கைச்சியாக்களையும் எழுப்பி கூட்டிக்கொண்டு போய் அதுகளை செய்யனம்மா."

பரிவுடன் வந்த தாயின் ஒவ்வொரு வார்த்தைகளும் அடிநெஞ்சில் குமுறிக்கொண்டிருந்த எரிமலைக் குழம்பின் சுவாலைகளைத் தணிப்பதாய் இருந்தாலும்.... அவளுக்கு இதிலும் எள்ளளவேனும் நம்பிக்கை இருக்கவில்லை. "சரியம்மா......."

என்றுவிட்டு குசுனிக்குள் நுழைந்தவள் அடுப்புள் நீறுபூத்துக் கிடந்த சாம்பலை தட்டொன்றில் அள்ளியெடுத்தவளாய். "பிரியா, ஆரணி எழும்பலயோ இன்னும். 6.00 மணி ஆகிட்டு எழும்புங்கோ" என குரல் கொடுத்தவளாய் சாம்பலைக் கொட்டினாள்.

"அம்பி .....அப்பா எழும்பப் போறார். அடுப்புக்குள்ள கிடக்கிற சாம்பலை அள்ளிப் போட்டு அடுப்பை

● மல்லாவிக் கஜன்

மூட்டம்மா......." என்றாள் தாய் சரசு."நான் சாம்பலெல்லாம் அள்ளிப்போட்டனம்மா. ஓம் மூட்டுறன்." என்றவாறு தாவாரத்துள் அடுக்கப்பட்டுக் கிடந்த பன்னாடை இரண்டை கிழித்தெடுத்து அடுப்புக்குள் வைத்தாள் அம்பிகா நெருப்பை மூட்டுவதற்கு தீப்பெட்டி இருக்கவில்லை. "அம்மா......... நெருப்புப் பெட்டி இல்லையோணை." தாயின் பதில் வருவதற்கு முன்னதாகவே,

"இஞ்ச வா மோனை இந்தப் பெட்டியுக்க பார். இரண்டோ மூண்டு குச்சுகளோட ஒரு பெட்டி கிடந்தது போல." என்ற தந்தை சிவத்தின் அழைப்பு, அம்பிகாவை தீப்பெட்டியை எடுப்பதற்காய் காத்து நின்றது.

தீப்பெட்டியை எடுத்து வந்து ஒரு குச்சியை உரசி பன்னாடையில் பற்ற வைத்துக் கொள்கிறாள் அம்பிகா.

அவளது ஆழ்மனதுள் எரிந்துகொண்டிருக்கும் ஆசைத்தீயின் உச்சத்தை அடையமுடியாமல் பதுங்கிப் பதுங்கி தீ மெல்லக் கனன்றது.தந்தையின் நிலை, தங்கைமாரது கல்வி; அண்ணனது உழைப்பு; குடும்பவறுமை; தனதுநிலை....

இவை யாவற்றையும் சீர்தூக்கி வாழ்க்கையை நகர்த்திச் செல்லும் தாயின் மனோபாவம்......

எரிந்து கொண்டிருந்த தீயுள் இவையெல்லாம் விம்பங்களாய் தெரிவது போலிருந்தது அவளுக்கு. குடுவைப்பானைக்குள் கொஞ்சமாய் தண்ணீரை ஊற்றி அடுப்பில் தூக்கி வைத்தாள். வெந்து கொண்டிருந்த தீயின் நாக்குகள் பானையை பற்றிச் சூழ்ந்து கொள்கின்றன.

* * *

சிவத்திற்கு நான்கு பிள்ளைகள். மூத்த மகன் உள்ளூரிலே வேலை எதுவும் போதுமானவரை கிடைக்காமையால் கிடந்ததுகளை சுட்டுவிற்று கடனையும் பட்டு இப்போது மத்தியகிழக்கு நாடொன்றில் பணிபுரிகிறான்.அடுத்தது அம்பிகா.அதனைத் தொடர்ந்து இரு பெண்பிள்ளைகள். அளவான சின்னக்குடும்பம். சிவம் சிறந்த ஒரு விவசாயி. காலநேரம் பாராது உழைத்து உழைத்து தேய்ந்து போனவர்.உழைத்த அந்த கரங்களும் ஓடித்திரிந்த கால்களும் இன்று மூன்றுசில் வண்டியுள் முடங்கிப் போய்விட்டன.

* * *

வழமைக்கு மாறாக அன்று எறிகணைகள் அதிகமாகவே வீழ்ந்து வெடிக்கத் தொடங்கின. ரவைகளின் சடசடப்புக்களும் மிக நெருக்கமாக..... வேகமான நகர்வு ஒன்று நடைபெறுவதைத் துலக்கியது. திடீரென அமைதியாய் வந்த ஐந்துஅங்குல எறிகணை ஒன்று சிவத்தின் தறப்பாள் கொட்டகை அருகில் வீழ்ந்து வெடித்தது. எங்கும் புகை மண்டலம்!

சிதறிய சன்னமொன்று சிவத்தின் வலது காலை துண்டாடிப் போனது. இவ்வாறாய் ஒருவாறாக இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் நுழைந்து கொண்ட மக்களுடன் மக்களாக சிவத்தின் குடும்பமும் இணைந்து கொண்டது. வவுனியா செட்டிகுளம் நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்ட இவர்கள் மீளக்குடியமர்வைத் தொடர்ந்து சொந்தக் காணியில் குடியமர்ந்து கொண்டனர்.

முந்தைய போன்று சிவத்தால் இயங்கமுடியவில்லை. குடும்பநிலை மோசமாகிக் கொண்டிருந்தது. மூன்று குமர்கள். அண்ணன் ஒருவனது உழைப்பில் ஐவரின் வயிற்றுப்பசி ஆற்றவேண்டிய நிலை. காலங்கள் உருண்டோடின.

அண்ணனின் சீவியத்திலும், நிறுவனங்களின் உதவியுடனும் குடும்பச் சக்கரம் ஓரளவேனும் சுழன்று கொண்டிருந்தது. தாய் கர்ப்பகம், வீட்டில் ஆடு, மாடு, கோழி என வளர்த்து அவற்றின் மூலம் கிடைக்கக் கூடிய சிறுதொகை வருமானத்தையும் சிக்கனமாக்கி அன்றாட வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்தார். உழைத்த கரங்கள் ஓய்ந்துகிடக்காது என்பதற்கு முன்னுதாரணமாய், மூன்று சில் வண்டியில் அமர்ந்தவாறே சிவம் விளக்குமாறு, தும்புத்தடி என்பவற்றைத் தயாரித்துக் கொடுக்க, அதனை கர்ப்பகம் ஊர்க்கடைகளில் போட்டும் ஏதோ ஒருவாறாய் அன்றாட உணவுக்கு பஞ்சமின்றி, இடம்பெயர்ந்து போகமுன்னர் காணி பூராகவும் தென்னை நாற்றுக்களை சிவம் வைத்திருந்தார். அவற்றுள் ஒன்றிரண்டுதான் தப்பியிருந்தது. ஏனையவை போதிய நீரின்றி கருகி மடிந்துவிட்டன. காய்த்துச் சொரிந்த தென்னைகள் வட்டுக்களை இழந்துபோய். அம்பிகாவுக்கும் வயது முப்பதை தாண்டிவிட்டது.

"இஞ்சரப்பா கற்பகம், இவள் பிள்ளையை இனியும் இப்படியே எத்தனை நாளைக்கு வைச்சிருக்கிறது. ஏதேனும் ஒருவழியாய்..." என்றவாறே இடுப்பில் சுற்றியிருந்த துவாய்த்துண்டை கழற்றி முகத்தை துடைத்துக்கொண்டார் சிவம்.

"அதுதானப்பா எனக்கும் ஒரே யோசனை. சண்முகம் புறோக்கர் எத்தனை கொண்டந்திட்டார். ஆனால் அவர்கள் கேக்கிற உவளா காசுக்கு நாங்கள் எங்கையப்பா போறது? எனக்கும் இப்ப கொஞ்ச நாளாய் சரியாய் நித்திரையும் இல்லை. வீட்டில ஒரு குமர் இப்படியே இருக்க எப்படி நித்திரை வரும்........"அம்பிகாவுக்கு எத்தனையோ குறிப்புகள் பொருந்தி வந்தாலும் சீதனப்பிசாசு அவளது திருமணத்திற்கு தடைபோட்டது.

"இஞ்சார் சிவமண்ணை, நீங்களும் உந்தநிலைமையில் இருக்கேக்க என்னாலயும் ஒண்டும் சொல்லேலாம இருக்கு. நானும் இயன்றவரை கதைத்துப்பார்த்தன். இருபதைவிட ஒரு ரூபா குறைஞ்சாலும் வேண்டாமாம். தொடக்கத்திற்கு முப்பது கேட்டவை. ஒரு மாதிரி நான் கதைச்சு இவளாத்திற்கு குறைச்சன். மாப்பிள்ளை பிறைவேற் கம்பனி ஒன்றில வேலை".

கடந்த வாரம் வீட்டிற்கு வந்த புறோக்கர் சண்முகத்தார் கூறியவை நினைவிற்கு வந்தது.

எத்தனையோ வரன்களை புறோக்கர் கொண்டுவந்தாலும் சீதனைப்பிரச்சினையால் அது குழம்பிப்போய்விடும் எத்தனை தடவைகள் அவளை பெண்பார்க்க வந்திருப்பார்கள். வந்தவர்கள் மீண்டும் வருகிறோம் என்று செல்லிச்சொல்வார்கள். போனவர்கள் திரும்பி வருவதில்லை.

அம்பிகாவின் அழகிற்கு எந்தக் குறையும் இல்லை. பொதுநிறம்; சுருட்டைக்கூந்தல்; அளவான உயரம்; ஆனாலும் அவளிடம் இல்லாத ஒரேயொரு குறை சீதனம் மட்டுமே. இப்படி இன்னும் எத்தனை ஏழைக் குடும்பங்களில் எத்தனை முதிர்கன்னிகள்.

பருவ வயதில் எல்லை மீறும் ஆசைகளை இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் அவளாலும் அடக்கிக் கொள்வது? ஆனாலும் தன் கற்பை எவருக்கும் வீணாகத் தானம் செய்யும் அளவிற்கு அவள் இழிவான ஒருத்தியும் அல்ல; அத்தகையதொரு நடத்தையுள்ள குடும்பத்தில் பிறந்தவளுமல்ல.

மனதில் குமையும் ஆசைத்தீயும், குடும்பச்சுமையும் தாங்கியவளாய் ஒவ் வொரு வயதையும் தொலைத்துக்கொண்டிருந்தாள். "சிவமண்ணை, ஏதோ பார்த்துச் செய்யுங்கோ அம்பிகாவுக்கும் வயது போக போக

வாறவங்களும் வரமாட்டாங்கள். ஏதோ உங்கட முடிவு....."

"நீ சொல்லுறதும் சரிதான் சண்முகம், என்னாலயும் ஒண்டுமே செய்யேலாமலிருக்கு. கிடந்த நகைநட்டெல்லாம் வித்துச் சுட்டுத்தான் முரளியை வெளிநாட்டிற்கு அனுப்பினது."

அது சரிதான் அண்ணை. அப்ப இப்படியே பொடிச்சியை வைச்சு என்ன செய்யப்போறியள்? எனக்கே கவலையாய்க் கிடக்கு எத்தனை தடவை எத்தனை பேர் வந்து வந்து பார்த்துப் போற......." சண்முகத்தின் கண்கள் கலங்கியது. ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் பலர் இன்று வெறும் காட்சிப் பொருட்களாக சீதனம் சீதனம் என அலையும் ஆண்வர்க்கத்தால் எத்தனை பெண்கள் வாழ்வு, கனவு, யாவும் அடியோடு கருக்கப்படுகிறது.?

"சரி அண்ணை,கடைசியா வந்த குறிப்புக்கு மாப்பிள்ளைக்கு பொடிச்சிட போட்டோ கொண்டு போய் காட்டினன். அவருக்கு சரியாய்ப் பிடிச்சுப் போச்சு. நேரிலையும் பார்க்கவேணுமாம்." "உண்மையாகவா சண்முகம்? பிள்ளைக்கும் போட்டோ பிடிப்பு எனக்கு மனிசிக்கு எல்லாருக்கும் தான்"ஆனா சீதனம்......." என இழுத்த சிவத்தின் மௌனத்தை கலைப்பதாய்...

"அதுதானே நான் சொன்னன் சிவமண்ணை, நான் உங்கட குடும்ப நிலையை வடிவாய்ச் சொல்லி கதைத்தன். இயன்றவரை மாப்பிள்ளைக்கு விளங்கக்கூடிய வரை சொல்லினன். எண்டாலும்..."

"எண்டாலும் என்னவாம் சண்முகம்..........?" சிவத்தின் கண்கள் சண்முகத்தின் முகத்தையே உற்று நோக்கின. "இருபதை விட குறையாதாம் என்டுட்டினம்" சிவம் மௌனமாகிவிட்டார்.

"சரி இனி என்னத்தச் செய்ய சண்முகம். காணியை ஈடுவைத்தாவது பிள்ளையிட கலியாணத்தை பாப்பம் அதுக்குப் பின்னாலையும் இரண்டு இருக்கு. இந்தப் பிள்ளையை ஏதோ ஒருவகையாய் கரைசேர்த்தால் தான் அதுகளையும் ஈடேற்றலாம்."

அதுதானண்ணை வடிவாய் யோசிச்சு சொல்லுங்கோ. மற்றவை எல்லாம் ஆனைப்பிடி பூனைப்பிடியாய் காசு, நகைநட்டு, வீடு வளவு எண்டு கேக்குறாங்கள். பொடியனுக்கு புதுசா கட்டின வீடு கிடக்கிறதால வீடு வேண்டாமாம் ஒரு ஐந்து பவுண் நகையும் குடுக்கலாம். வந்த

எல்லாத்தையும் விட இது உங்களுக்கும் சாதகமாக அமைந்திருக்குது. போல எனக்கு கிடக்கு"என்ற சண்முகம்.

"அண்ணை நான் வரப்போறன் நாளைக்கு பின்னேரமாக வாறன் யோசித்து முடிவெடுங்கோ. "வேலியோரமாய் சாற்றிக் கிடந்த சைக்கிளை எடுத்துக்கொண்டு சண்முகம் புறப்பட்டார்.சிவமும் காணியை ஈடுவைப்பதற்கான ஏற்பாடு செய்துவிட்டார்.நாங்கள் நடுத்தெருவில நின்டாலும் பரவாயில்லை மிச்சரெண்டும்........?

சில சமயங்களில் காணி ஈட்டில் அறுதியாகிவிட்டால், குடியிருக்க ஒரு துண்டு நிலம் கூட சிவத்திடம் இல்லை. ஆனாலும் அவரது முடிவில் மாற்றமேதுமில்லை. மாப்பிள்ளை வீட்டுக்காரர் இன்று காலையில் பெண்வீட்டிற்கு வருவதாக கூறியிருக்கிறார்கள்.

* * *

"பிள்ளை நேரம் போகுது. மச்சாளை பிடிச்சு கெதியாய் வெளிக்கிடு. ஆக்கள் வந்தாலும்.தடல் புடலாக வேலையில் நின்றிருந்த கற்பகம் அம்பிகாவிடம் பேச்சுக் கொடுத்தாள்.

கடிகார முட்கள் மதியத்தை அண்மித்துக்கொண்டுடிருந்தன. புறோக்கர் சண்முகம் அடிக்கடி தனது தொலைபேசியை எடுத்து பிசைந்த படியிருந்தார்.

"என்ன சண்முகம் இன்னும் ஆக்களை காணம். பத்து மணிக்கு வாறதெண்டவை எண்டியள். மணி பன்னிரெண்டையும் கடந்திட்டு." சிவத்தின் மனதில் ஒருவித சங்கடம் சில சமயங்களில் வருவதாக கூறிவிட்டு வராமல் விட்டால்......... ஏக்கம்!

"இல்லையண்ணை மாப்பிளையிட போன் ஒவ்ல இருக்கு தகப்பன்ர போனுக்கு எடுக்கிறன்" சண்முகத்திற்கும் மனதில் அதே சங்கடம் தான். "அம்மா. இனி எனக்கு கலியாணம் வேணாம். நான் இப்படியே இருக்கிறன். அடங்கிப்போயிருக்கிற என்ர மனசை இடைக்கிடை உசுப்பேத்தி விடுகிறமாதிரி வாற ஒவ்வொரு வரனும். பிறகு என்னை கைவிட்டு போகுது. ஏழைகள் வாழக்கூடாது என்று இறைவன் எழுதிவிட்டான் போல. இப்படியே பிரமச்சாரியாய் இருந்துட்டு போறது. எல்லோரும் மௌனமாகி விட்டார்கள். அனைவரது முகத்திலும் சின்னக்குழப்பம்; அம்பிகாவால் தொடர்ந்து பேசமுடியவில்லை; பனித்துளி படிந்தாற் போல விழியோரம் கசிந்த வெண்முத்துக்களை

சேலைத்தலைப்பால் அழுத்தித்துடைத்தவள், சுவரோடு சாய்ந்து விட்டாள்.

வருவார்கள் - பார்ப்பார்கள் - போவார்கள். சந்தைக்கடையில் பார்வைக்கு அடுக்கப்பட்ட அழகுசாதனப் பொருட்களா? அல்லது விளையாட்டுப் பொருட்களா பெண்கள்? ஆண்களுக்கு மட்டும் ஏன் இந்த நினைப்பு? தாலிக்காய் ஏங்கும் கழுத்து; குங்குமத் திலகத்திற்காய் ஏங்கும் நெற்றி; இன்னும் எத்தனை ஆசைப்பிணைப்புக்கள்.

இவை யாவும் அந்தமில்லாச் சங்கிலிகளாய் வெறுமனவே கழுத்தில் தொங்கிக் கொண்டிருக்க, மனசுக்குள் பல்லிகளின் நச்சரிப்பாய் நாளும் மனதை அழுத்தும் எத்தனை துயர்கள்.?

இப்படியொரு வாழ்வைவிட சாவு மேலானது என நினைக்கத் துடிக்கும் கணங்கள்...."புறோக்கர். புறோக்கர்.... என்ன மாதிரி ஆக்கள் வருவினமோ இல்லையோ...."சிவத்தின் குரலில் சற்று கனதியிருந்தது. அஸ்தமித்துக் கொண்டிருக்கும் கனவுகளை நனவாக்கம் செய்ய இப்படி இன்னும் எத்தனை தந்தைமார்கள் துடிப்பார்கள்.?

"பொம்பிளைப்பிள்ளையை பெத்தவனுக்குத்தான் அதின்ர அருமை பெருமை தெரியும்...." மனதுள் நொந்து கொண்டார் சிவம். புறோக்கரும் மௌனமாய் கதிரையில் சாய்திருந்தார். நேரம் இரண்டு மணியையும் தாண்டிவிட்டது. கல்யாணச் சந்தையில் காட்சிப் பொருளாகப் போய்விட்ட பெண்களின் வாழ்க்கையில் ஒளியைக் கொடுக்க வேண்டிய ஒவ்வொரு ஆணும், அதற்கு மாறாக அவர்களது வாழ்க்கையில் இருளையே பரிசளிக்கின்றான்.சுவரோடு சாய்ந்திருந்த அம்பிகாவைச் சூழ அவளது இரண்டு சகோதரிமார், உறவுகள், தாய் என அனைவரும் மௌனமாய் காத்திருந்தனர்.

சின்னச் சின்ன கோடுகளால் முகிழ்ந்த ஆசைகள் வடிவம் பெற்று இன்றாவது ஒரு மலராக மலர்ந்துவிடும் என்ற காத்திருப்பு, மெல்லக் கலைந்து கொண்டிருந்தது.அவன் எப்படி இருப்பான்? எதைக் கதைப்பான்? என்ன சொல்வான்? இரங்காத கல் மனது அவனுக்கும் இருந்துவிடக்கூடாது.

இவ்வாறு சிறகு கட்டிப் பறந்த சிட்டுக்குருவி சுவரோடு சாய்ந்து கிடந்தது. கண்ணீர்க் கோடுகள் அவள் கன்னங்களில் ஓவியம் தீட்டிக் கொண்டிருந்தன. எல்லோரது விழிகளும் படலையையும் தாண்டி தொலைவாய்... இன்னும் மிகத் தொலைவாய்!

● மலீலாவிக் கஜனி

இவர்க்கு....

**திரு.சி.குணபாலன்**
பிரதேச செயலாளர் - துணுக்காய்

**திருமதி.எல்.மாலினி வெனிற்றன்**
வலயக்கல்விப் பணிப்பாளர் - துணுக்காய்

**திரு.க.அருந்தவராஜா**
(கவிஞர் மேழிக்குமரன்)

**திரு.து.ஜேசுதானந்தர்**
அதிபர். மு/மல்லாவி மத்திய கல்லூரி

**திரு.க.சந்திரலிங்கம்**
ஆசிரியர். யாழ்/கொக்குவில் இந்துக்கல்லூரி

கவிஞர். **வே.முல்லைத்தீபன்**

**தேசிய பத்திரிகைகள், வானொலிகள், இணையத்தளங்கள் மற்றும் என் வாசகர்கள்**

**உரிமையாளர்,**
விஜய் அச்சுப் பதிப்பகம்

நன்றிகள்!



## கோபுர உச்சியை நோக்கிய
## நகர்விற்கு சிறு துரும்பாக..



காலத்தால் மறையாத காவியங்களை தனது முதுசமாகக் கொண்டு, உலகிலேயே மொழிகளில் சிறப்பு மொழியாக விளங்குவது தமிழ். இம்மொழியின் மகுடத்தில் மிளிரும் வைரங்களாக அமைபவை பல்சுவையான இயல், இசை, நாடகம்சார் ஆக்கங்களே. அந்த வகையில் திருவள்ளுவர் தொடக்கம் இன்று வரை பல்வகையான தமிழ்த்தாயின் புதல்வர்கள் தங்கள் சிந்தனையால், செயலால், நடிப்பாற்றலால், கவித்திறனால் புகழ்சேர்த்து வருகின்றார்கள்.

எமது துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்தில் உத்தியோகத்தரான கடமையாற்றுகின்றார் மல்லாவிக்கஜன். தனது எழுத்தாற்றலால் பெருமை சேர்த்திட்ட இச்சிறுகதைத் தொகுப்பு வெளியீடானது வன்னி மண்ணுக்கும், தனது மொழியின்பால் என்றுமே அர்ப்பணங்களைத் தொடர்ந்து கொண்டிருக்கும் என்பதற்கு சான்றாக அமைகின்றது. எமது வலயமானது இவ் உத்தியோகத்தரால் பெருமையுறுவதை நான் உவகையுடன் நோக்குகின்றேன். அற்புதமான கலைஞர்கள் இறைவனது அபரிமிதமான படைப்புக்களாகும். என்னை மிகவும் கவர்ந்தவர், சிறுகதைக் கவிஞர் மதிப்பிற்குரிய "புதுமைப்பித்தன்" ஆவார். அடிமட்ட மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை எவ்வாறு அம்மக்கள் எதிர்கொண்டு வாழ்கின்றார்கள் என்பதை, ஐந்து பக்கங்களுக்குள் இரத்தினச்சுருக்கமாக வலியை வலிமை யாக்கிச் சொல்லும் ஆற்றல் அவருக்கே உரித்தானது. இந்த வகையில் சிறுகதைகள் மூலம் தனது பேராற்றலை வெளிப்படுத்தும் எமது இளம் கவிஞனும், வாழ்வில் பெரும் சாதனைகளை இவ் எழுத்துலகில் படைத்திட வேண்டும் என்பதே எனது பேரவாவாகும்.

சிறந்த படைப்பாற்றல்கள் காலத்தால் அழியாதவை. எமது கலைஞர்கள் காலத்தால் போற்றப்படுவார்கள். எமது மல்லாவிக்கஜன் என்றும் பெருமைபெற்றிட எனது வாழ்த்துக்கள்.

**திருமதி.எல்.மாலினி வெனிற்றன்**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
துணுக்காய்.




ISBN:978-955-42716-0-9
Rs.220/-
VIJAY PRINTING CENTRE